

# யோகர்சுவாமியும் அவரின் சில விசித்திர சீடர்களும்

# Yogarswami and Some of his Strange Disciples





அம்மா தாயே கலைவாணி நீ என் நாவைக் காப்பாயே !

அம்மா தாயே கலைவாணி நீ என் நாவைக் காப்பாயே !

அம்மா தாயே கலைவாணி நீ என் நாவைக் காப்பாயே !

# யோகர்சுவாமியும்
# அவரின் சில விசித்திர சீடர்களும்

# Yogarswami and Some of his Strange Disciples

ஆக்கம்
கந்தையா மகேந்திரன்

*First Print – 2022*

*Printed at:*

***Multi Craft***

*39, Elango Salai, Teynampet*

*Chennai - 600 018.*

*Tamil Nadu, India.*

*Published by:*

***K. Mahendran***

*Attorney-at-Law, Solicitor (Retired)*

*Kovalam, Karainagar,*

*Sri Lanka.*

*E-mail: karaimahen@gmail.com*

*This Publication:-*

- *© Copywrite is not reserved.*
- *Is delivered freely subject to availability.*
- *Is meant for Educational and Informative purposes only.*

# சமர்ப்பணம்


## Dedication

எனது மிக இளம்பிராயத்து நண்பனும், ஒன்றுவிட்ட சகோதரனும். சக வகுப்பு மாணவனுமான, கோவளம், அம்பலவாணர் சோமசுந்தரம், பராசக்தி தம்பதிகளின் முதல்மகனுமான சோமசுந்தரம் மகேஸ்வரன், 15வது வயதில் எதிர்பாராத வகையில் இறப்புற்றார்!

**அவருக்கும்:**

எமது அயல்வீட்டில், ''இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க'', என்ற மாணிக்கவாசகரின் சிவபுராண வரிகளின்படி வாழ்ந்து, எந்நேரமும், காரைநகர், சிவனையும், ஐயனாரையும், ''அம்பலவி முருகா, ஆண்டுகேணி ஐயா'' என்று கணப்பொழுதும் நினைந்தும், அடிக்கடி சொல்லியும், எள்ளளவும் வஞ்சமிலா வெண்மை உளம்கொண்ட, இறுதியில் தான் வணங்கிய இறைவன் கோயிலான, காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில், மார்கழி திருவாதிரை திருவெம்பா தொடக்க நாளன்று, அவனை வணங்கியபடியே, இறையடி சேர்ந்து; 63 நாயன்மார்கள் போன்று, இறையடி சேரலாம் என்று, எனக்கு ''நேரடி-அனுபவ-அற்புதம்'' காட்டிய, கோவளம் அம்பலவாணர் கதிராசிப்பிள்ளை,

அவர்களுக்கும் சமர்ப்பணம்.



எனது பெரிய தகப்பனாரும், காரைநகர் அறுகம்புலம், ஆலடியைச் சேர்ந்தவரும், நொச்சியாகம முன்னைநாள் வர்த்தகரும், சமூக-சமய செயற்பாட்டாளருமான **முருகேசு பொன்னுத்துரை** அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | *என்னுரை* | *5* |
| *2.* | *திருமதி. இரத்னா மா நவரத்தினம்* | *12* |
| *3.* | *சுசுநாகா வீரபெருமா* | *25* |
| *4.* | *சிவாய சுப்ரமுனிய சுவாமி* | *49* |
| *5.* | *ஜேர்மன் சுவாமி* | *72* |
| *6.* | *நரிக்குட்டி சுவாமி* | *97* |
| *7.* | *சந்தசுவாமி* | *110* |
| *8.* | *சாம் விக்ரமசிங்கே* | *120* |
| *9.* | *ஜேம்ஸ் ஜோர்ஜ் - கனடா நாட்டுத் தூதுவர்* | *129* |
| *10.* | *பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்* | *135* |
| *11.* | *மாணிக் சந்திரசாகரா* | *137* |
| *12.* | *குட்டிக்கூட்டம்-- வரலாறு* | *140* |
| *13.* | *இலங்கைப் பிரச்சனையில்: யோகரின் தீர்க்கதரிசனம்* | *143* |
| *14.* | *Sources list with courtesy* | *148* |

# என்னுரை

*மிகச்சிறுவயதில் இருந்தே என்னுள் ஒருவகையான தேடல் உள்தொடர்ந்து கொண்டிருந்தது! ''நான் யார்?'' என்ற கேள்வி என்னை எப்பொழுதும் விரட்டிக் கொண்டிருந்தது. எனது பெரும்பாலான எண்ணம் இந்தக் கேள்விக்கான விடைபற்றியே ஓடிக்கொண்டிருந்தது. இதற்கு விடைகாண்பதற்காக, கண்டதை எல்லாம் வாசிக்கும் ஒரு பேரவா. குறிப்பாக, சமய-தத்துவ நூல்கள் பக்கமாக நாட்டம் அதிகரித்தது. சோக்கிரடீசின் (Know Thyself) ''உன்னையே நீ அறி'' என்ற வாசகம் என்னை மிகவும் கவர்ந்து, காந்தம் போல என்னுடன் ஐக்கியமாகிவிட்டது! நான் தனிமையில் இருக்கும்பொழுது இந்தவாசகத்தைத் திரும்பத்திரும்ப எழுதுவதும், எண்ணுவதுமுண்டு. பின்பு எனது உயர்தரவகுப்புக் கல்விக்காக, தெல்லிப்பளை மகாஜனா கல்லூரிக்கு சென்றபொழுது, அதன் கல்லூரித் தாரகமந்திரமாக ''உன்னையே நீ அறி'' என்ற வாசகத்தைப் பார்த்ததும் எனக்குப் புல்லரிப்பு உண்டாயிற்று! மேலும் இந்தவாசகத்தின்மீது அதீதமான ஒரு ஈர்ப்பு மேலோங்கியது. இந்தவாசகம் பொறித்த பித்தளையிலான ஒரு சிறுதகடும் என்கைக்கு கிடைத்தது. அதை மிகவும் அரிய பொக்கிசமாகப் பலகாலம் பேணிப்பாதுகாத்து வந்தேன். மேலும் இந்தவாசகத்தினை முழுதாக அறியவும், உணரவும், மீண்டும் அது தொடர்பாக, மகாஜனா கல்லூரியின் நூல்நிலையத்தில், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இந்தவகை நூல்களையே வாசிக்கும் ஆர்வம் உண்டாயிற்று. இரண்டு வருடங்கள் கழிந்தபின் ஒருநாள், இந்த வாசகத்தைப்பற்றி மிகவும் தீவிரமாகத் தனிமையில் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென என்னுள் ஒரு பொறி தட்டியது. ("Know Thyself is not sufficient; Be Thyself is the Must") ''உன்னை நீ அறிந்தால் மட்டும் போதாது; அறிந்தபடி நிற்றல் மிக*

அவசியம்'', என எனக்கு அசரீரிபோல யாரோ கூறுவதாக இருந்தது. பின்னர் இதனையே என் தாரகமந்திரமாக எடுத்துக்கொண்டேன். பின்னர் என் தனிமை நேரங்களில் இந்த வாக்கியத்தை என்னை மறந்து, பலதடவைகள் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்கும் ஒரு பழக்கத்திற்கு ஆளாகிவிட்டேன். இந்தவாக்கியம் சுருக்கமாக (Know Thyself and Be Thyself) ''உன்னையே நீ அறி; அறிந்தபடியே நில்'', என்று எனது புத்தகங்கள் குறிப்பேடுகள் எல்லாவற்றிலும் உள்பக்கம், கடைசிப்பக்கம் எழுதப்பட்டிருக்கும். சில நண்பர்கள் இதனைப்பற்றி விசாரிப்பார்கள், இதை அவர்களுக்கு விளக்கம் சொல்லிப் புரியவைக்க முடியாதலால், எதோ சொல்லிச் சமாளித்துவிடுவேன்.

பிற்காலத்தில் எனக்கானவரை மிகநீண்ட இடைவிடாத தொடர் தேடுதலின்போது; அவரே முன்வந்து, ''நீ தேடும் ஆள் நான் தான், நீ எங்கு சுற்றினாலும் கடைசியில் என்னிடம் தான் வரவேண்டும்'' என்று கூறி அளவில்லாப் பெரும் கருணை கொண்டு, காட்சி கொடுத்துப் பல விவரிக்கமுடியாத ஆத்ம அனுபவங்களைத்தந்து ஆட்கொண்டு அரவணைத்து என் உள்ளே எரிந்துகொண்டிருந்த தொடர்வினாவுக்கு விடைகாட்டி, அமைதியும், தெளிவும், விழிப்பும் தந்த அந்தப் பெருங்கருணை பகவான் ரமணமகரிசி அவர்களே!

யோகருக்கும், ரமணருக்கும் வேறுபாடுகள் ஒன்றும் இல்லை. இருவரும் சமகாலத்தவர்கள். இருவரின் போதனையும் வழிகாட்டலும் ஒன்றே! ரமணரும், யோகரும் இரு கண்கள் போல, ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலானவர்கள். இருவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. பலர் இருவரதும் சமகால பக்தர்களாக இருந்துள்ளார்கள். ரமணமகரிசி இந்தியாவில் உதித்த அதிஉச்சம். யோகர்சுவாமி இலங்கையில் உதித்த அதிஉச்சம். ரமணமகரிசி மனிதஉருவில் தோன்றிய தெட்சணாமூர்த்தி, ஒரு ஞான-மௌனி! யோகர்சுவாமி இலங்கையில் சிம்ம-கர்ச்சனை செய்த ஒரே ஒரு ராஜ-சிங்கம்! மகா சித்தர்!

சிறுவயதில் யோகர்சுவாமியின் திருஉருவப்படத்தினை, என் ஊர் காரைநகர், கோவளத்தில்; யாழ்ப்பாணநகரில் காங்கேசன்துறை

*வீதியில் மருந்துக்கடை வைத்திருந்த ''மருந்துக்கடைக் கந்தையா'' என்பவரின் வீட்டில்தான் முதன்முதலாகப் பார்த்தேன். என் சிறுவயதில் பொழுதுபோக்கும் விளையாட்டு நேரங்களை கந்தையா அவர்களின் ஒரே மகள் ''யோகேஸ்வரி''; நாம் செல்லமாக அழைக்கும் ''யோகம் அக்கா'' அவர்களுடன்தான், மற்றும் அயல்நண்பர்களுடன் செலவிடுவோம். யோகம் அக்கா அவர்கள் தன் பெற்றோரின் திருமணத்தின் பின் ஏறக்குறைய பதினைந்து வருடங்களின் பின்னர் பிறந்த ஏகபுத்திரி.*

*அதுவும் யோகர்சுவாமியின் திருஅருளினால்தான் அவர் பிறந்தார் என்பதை, யோகம் அக்கா அவர்களின் வார்த்தைகளால் அவர் இறப்பதுக்கு முன்பான எனது கடைசிச் சந்திப்பில்தான் நான் அறிந்துகொண்டேன். அதனால்தான் அவருக்கு ''யோகேஸ்வரி'' என்று பெயர் சூட்டினார்கள். யோகம் அக்கா, தன் பெற்றோருடன் பலமுறை, கணபதிப்பிள்ளை (EL 5461) அவர்களின் காரில், யாழ்ப்பாணம்சென்று யோகர்சுவாமியைத் தரிசித்துவருவதைப் பார்த்துள்ளேன். அக்காலங்களில், யோகம் அக்கா வீட்டில் யோகர்சுவாமியின் பெரியபடத்தினைப் பார்த்துப் பலநேரங்களில் மெய்மறந்து நிற்பதுண்டு.*

*ஒருமுறை சிறுவயதில் என் தந்தையாருடன் யாழ்ப்பாணம் சென்றபொழுது, ஸ்ரீலங்கா புத்தகசாலையில், யோகர்சுவாமி போன்ற ஒருவரைப் பார்த்ததாக ஒரு தெளிவில்லாத தொடர்நினைப்பு! தொடர்ந்து ஈழநாடு, வீரகேசரி, தினகரன், தினபதி போன்ற தினசரிகளில் அவரின் நினைவு நாட்களையொட்டிய கட்டுரைகளை ஆர்வமாக வாசித்ததுண்டு. பின்னர், இலங்கை சட்டக்கல்லூரி நாட்களில், கொழும்புத்துறையைச் சேர்ந்த என் நண்பனிடம் யோகர்சுவாமிபற்றிப் பலமுறை விசாரித்தபோதும் அவர் கூறிய ஒரேமறுமொழி, அவர் ''பணக்காரர்களுக்கான சுவாமி'' என்பதே! இப்பதிலை எண்ணி எண்ணிப் பலமுறை நான் வியப்படைந்தேன்? பின்னர் இந்த மறுமொழிக்கான காரணத்தினை, யோகர்சுவாமி அவர்களே விளக்கியதை, அவர்பற்றிய நூல் ஒன்றில் வாசித்து அறிந்து ஆச்சரியப்பட்டேன! ''ஏழைகள் அதிகம் தீங்குகளை அல்லது பாவங்களைச் செய்யமாட்டார்கள்; எனெவே அவர்களுக்கு*

நான் தேவைப்படேன். பணக்காரர்கள் தான் பல பாவங்களைச் செய்துவிட்டு அதைப் போக்க என்னை நாடுகிறார்கள் -- ஆதலால் தான் நான் பணக்காரர்களுக்கான சாமி''. என்று கூறியுள்ளார்.

ஆனாலும், எப்போதெல்லாம் யோகர்சுவாமிபற்றிக் கேள்வியுறும் போதும், அவரின் நிழற்படங்களைப் பார்க்கும்போதும் என்னுள்ளே ஒருவகை விசித்திர ஏக்கஉணர்வொன்று எழும்! ஏன் எனப் புரியாது!

மேலே கூறியவாறு பல வாசிப்புகளாலும், செவிவழிச் செய்திகளாலும், சுவாமிக்குச் சில வெளிநாட்டுச் சீடர்கள் உண்டெனவும், அவர்கள் அளவெட்டியிலும், செல்வசந்நிதியிலும் வசித்தார்கள் எனவும்; சுவாமிகள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குட்டிப்பட்டம் சூட்டி; நாய்க்குட்டி, நரிக்குட்டி, பூனைக்குட்டி புலிக்குட்டி, பன்றிக்குட்டி, யானைக்குட்டி என அழைத்தார்கள் என்றும் அறிந்திருந்தேன். அத்துடன் சிவாய சுப்ரமுனியசுவாமி என்று ஒரு அமெரிக்காநாட்டுச் சீடர், கவாய் (Hawai) தீவில், சைவஆச்சிரமம் ஒன்றினை நிறுவியுள்ளார் எனவும் அறிந்திருந்தேன்.

1983-86 காலப்பகுதியில், சென்னையில், இலங்கை தமிழ் தகவல் மையத்தில் சேவை செய்யும்பொழுது, திரு.சோதிநாதன் (இங்கிலாந்து பட்டயக்கணக்காளர்--தற்பொழுது மறைந்துவிட்டார்) நண்பராகி, அவர் மூலம், அவரது சிறியதகப்பனார் திரு. நவரத்தினம் (ஓய்வுநிலை இலங்கை புகையிரதத் திணைக்களப் பிரதான கணக்காளர்) அவர்களும் அவரது துணைவியார் திருமதி. ரத்னா நவரத்தினம் (ஓய்வுநிலை இலங்கை மாகாணக்கல்வி இயக்குனர்) (தற்பொழுது இருவரும் மறைந்துவிட்டார்கள்) அவர்களும் சென்னையில் அறிமுகம் ஆனார்கள். இவர்கள் இருவரதும் தொடர்பு என்வாழ்க்கையின் ஒரு பிரதான திருப்புமுனையாகவும், மாபெரும் அனுபவபமாகி, எனக்குள் மேலும் ஒருவகை விழிப்புநிலையை ஊக்குவித்தது!

இவர்கள் இருவரும், யோகர்சுவாமிகளுடனும், திருவண்ணாமலை பகவான் ரமணமகரிசி அவர்களுடனும் மிகவும் நீண்டகாலம் நெருக்கமுள்ள அடியார்கள். இவர்கள் எனக்கு யோகர்சுவாமி பற்றியும், ரமணமகரிசி பற்றியும் மேலும் மேலும் அறிய வேண்டிய;

அவர்களின் பல மிக அரிய நேரடி அனுபவங்களைப் பகிர்ந்து என்னை ஆத்மாத்தமாக உணரவைத்தார்கள்.

1985ம் ஆண்டளவில் சிவாய சுப்ரமுனியசுவாமியும், அவரது சீடர், வேலன்சுவாமி, இருவரும் இந்தியாவில், அடையார் தீயோ சோபிக்கல் சங்க விடுதியில் தங்கியிருந்த நவரத்தினம் தம்பதிகளைப் பார்க்கவந்தார்கள். நானும் அச்சமயம் நவரத்தினம் தம்பதிகளைக் காணச்சென்றிருந்தேன். அப்பொழுதுதான் முதலும் கடைசியுமாக சுப்ரமுனியசுவாமியை நேரில் பார்த்தேன். அவரின் மிக உயரமான உருவமும், ஒளிமயமான கருணைகொண்ட கண்களும், ஒளிர் வட்டம் சூழ்ந்த சிவனடியார்போன்ற தோற்றமும் என்னை மிகவும் கவர்ந்தது! அவரில், சிவபெருமானை நேரில் பார்த்ததைப்போன்ற ஒரு உள்உணர்வு என்னுள்ளே அப்பொழுது தோன்றியது! அவரின் சமய, தமிழ் ஆற்றல்கள், தூயதமிழில் பேசியவிதம் என்னை மிகவும் சொக்கவைத்தது. இச்சம்பவம் இன்றும் என்மனதில் பசுமையாக உள்ளது!

பின்னர் யோகர்சுவாமியின் இன்னொரு சீடரான நரிக்குட்டி சுவாமி என அழைக்கப்படும் ஆஸ்திரேலியா நாட்டவரையும், திருவண்ணாமலை ரமணமகரிசி ஆசிரமத்தில், நவரத்தினம் தம்பதிகள் எனக்கு 1984ல் அறிமுகம் செய்துவைத்தார்கள். பிறிதொருசமயம் 1986ம் ஆண்டில் நரிக்குட்டிசுவாமிகளோடு அவர் வாழ்ந்த திருவண்ணாமலைக் குகையில் சந்தித்து வெகு நீண்டநேரம் உரையாடினேன். யோகர்சுவாமியின் இந்த இரு நேரடி வெளிநாட்டுச்சீடர்களின் சந்திப்புகள் அவர்கள் யோகர்சுவாமி பற்றிக் கூறியவை என்னுள் ஒரு ஆழமான தாக்கத்தையும், யோகர் சுவாமியைப்பற்றி இன்னும் ஆழமாக அறியவேண்டும் என்ற ஒரு உள்மன அவா என்றும் தொடர்ந்தது.

ஆனாலும் யோகர்சுவாமிகளின் இந்த வெளிநாட்டுச் சீடர்களைப் பற்றிய முழுமையான நூல் ஒன்றும் தமிழில் காணமுடியவில்லை! எனவே இதனைத் தொகுக்கவேண்டும் என்ற எண்ணம் ஒன்று நரிக்குட்டிசுவாமிகளைத் திருவண்ணாமலையில் கடைசியாகச் சந்தித்து அவரின் குகையில் இருந்து திரும்பியகணத்தில்

*(1986ல்) இருந்து என் உள்மனதில் மிக நீண்டகாலமாக உறங்கிக் கொண்டிருந்தது!*

*இதனால், எப்பொழுதும் அவர்பற்றி கண்ணில் தென்பட்ட, கைக்கு அகப்பட்ட நூல்கள், கட்டுரைகள் எதனையும் பார்த்ததும் வாசிக்கும் ஆர்வம் கொண்டிருந்தேன்! ஆனால் யோகர்சுவாமியை யாராலும் ஒரு பொழுதும் முற்றுமுழுதாக அறியமுடியாது என்பதுதான் முடிவு! யானையைத் தடவிப்பார்த்த அந்தகன் போலத்தான் சாதாரண மக்களால் அறியமுடியும்.சொல்லொணாதது! காணவொணாதது! அவர் சமாச்சாரம்!! கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர்! என்பதுதான் யதார்த்தம்!!*

*2020ம் ஆண்டு உலகம்முழுக்க கொரோனாவில் முடங்கியகாலத்தில், நானும் முடங்குப்பட்டு வீட்டில் இருந்தநேரம், என்ன செய்வது, எப்படிப் பொழுதைக்கழிப்பது என்று யோசிக்க, உள்மதில் இருந்து இதைத் தொகுத்து எழுதவும் என்று எதிர்பாராத விதமாக ஒரு உந்தல்-ஆணை உள்ளிருந்து வெளிப்பட்டது! அதன்படி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும் போலச் சிறுகச்சிறுக இது ஒரு முழுவடிவாக உருப்பெற்றது.*


*இதில் கண்டும் கேட்டும் பெற்ற எனது நேரடிச் சொந்த அனுபவங்களையும், இங்கு விவரிக்கப்பட்ட யோகர்சுவாமிகளின் நேரடிச் சீடர்களின் கூற்றுக்கள், எழுத்துக்கள்; இந்தச் சீடர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் சிலர் பல்வேறு காலங்களில் எழுதிய பல கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றினைப் பல வருடங்களாகத் தொடர்ந்து ஆர்வத்துடன் தேடித்தேடி வாசித்துள்ளேன், சிலவற்றினை மீண்டும் மீண்டும் பலமுறை அவற்றில் உள்ள கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு வாசித்திருந்தேன். அவற்றினை எல்லாம் மீண்டும் சேர்த்து ஆராய்ந்து, இயன்றவரை சரியானதாய் பொருத்தமாய், பிரயோசனமாய் இருக்கும் என்று கருதியவற்றை என் வசனநடையில் எழுதியுள்ளேன்.*

*இங்கு குறிபிட்டவர்கள், யோகர்சுவாமியின் எண்ணிலடங்கா அடியார்/சீடர் குழாமின் ஒரு துளியே! யோகர்சுவாமி பற்றி ஏற்கனவே சில விரிவான தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. இருந்தும் எனக்குத் தெரிந்த, நேரடி அனுபவத்தின் மூலமும், நான்*

விரும்பிப்படித்த பல கட்டுரைகள், நூல்களின் அடிப்படையில்தான், இங்கு குறிப்பிடப் பட்டுள்ளவர்களை மட்டும் தெரிவு செய்து, அவர்களின் பின்னணியையும் கூறி, அவர்கள் எவ்வாறு யோகர் சுவாமியிடம் சென்று சரண்புகுந்தார்கள்; அவர்கள் பார்வையில், அவர்கள் கூற்றுப்படி - யோகர்சுவாமி யார்? என்று தற்கால, எதிர்காலத் தமிழ் சமுதாயம் இலகுவாக அறியும்வண்ணம் ஒரு சிறு தொகுப்பாக்கம் செய்வதே எனது விருப்ப-நோக்கமாகும்.

குறைகள், தவறுகள் இருப்பின் பொறுதருள்வீர் எனத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்!





***Dr. Mrs Ratna Ma Navaratnam*** ***Mr. K. Navaratanam***

# *Dr.* திருமதி. இரத்னா மா நவரத்தினம்

## *Dr. Ratna Ma Navaratnam*

***(6th Nov 1910 - 13th June 1993)***

*யோகர்சுவாமியின் அடியார்களில் இவர் ஒரு மிகவும் சிறப்பான இடத்தினைப் பெற்றவர். இவரின் தந்தை, சுவாமிக்கு மிகவும் பிடித்த, அவரால் ''சின்னத்தம்பி'' என்ற செல்லப் பெயர் சூட்டி அழைக்கப்பட்ட மிக நெருங்கிய பக்தர். அதனால் இவர் தன் மிகச் சிறுவயதில் இருந்தே சுவாமி பற்றி நன்கு அறிந்தவர். சுவாமியை இவரும், இவரது கணவரும் தங்கள் ஆத்மீக மானசீககுருவாக ஏற்று, சுவாமியின் கொழும்புத்துறை குடிலுக்குப் பக்கத்தில் தங்கள் இல்லமான ''திருவடி'' இல் வாழ்ந்து, அவரின் பல சிவத் தொண்டில் தங்கள் வாழ்வை முழுதும் அர்ப்பணித்து, அவரின் இறுதிநாள் வரையும் அணுக்கத் தொண்டர்களாக இருந்து பணி செய்தவர்கள். சுவாமி இவருக்கு ''மா'' (MA) என்று பெயர் சூட்டி அந்தப் பெயரிலேயே இவரை அழைத்தார். இதனால் இவர் தன் பெயருடன் ''மா'' என்பதனையும் பிற்காலத்தில் சேர்த்துக் கொண்டார். சுவாமியிடம் மிகநீண்ட நெடுங்காலம் தொடர்பிலும், அவரின் போதனைகளை நன்கு அறிந்து, அவரைப்பற்றி மிக*

விரிவான நூல்கள், கட்டுரைகள் பல எழுதியவர், மற்றும் சுவாமியின் தொண்டர்கள் பலருடன் நீண்ட தொடர்பிலிருந்தவர். எனக்கு, யோகர்சுவாமி பற்றியும், ரமணமகரிசி பற்றியும் மேலும் அறிய, புரிய, தங்கள் அனுபவங்களை என்னுடன் ஆத்மாத்தமாகப் பகிர்ந்து, ஒரு அபரிமிதமான ஆவலை என்னுள் விதைத்தவர் என்ற வகையிலும், அவரைப்பற்றி முதலில் பதிவது என் ஆத்மதிருப்தியாகும்!

திருமதி. இரத்னா நவரத்தினம், யாழ்ப்பாணம் குறுக்குத் தெரு ஒன்றில் ஒரு வியாபார நிலையம் வைத்திருந்த சங்கரப்பிள்ளை செல்லையா, கற்பகம் தம்பதியினரின் மகள்களில் ஒருவர். இவரின் குடும்பம் யாழ்ப்பாணத்து சைவ-கலாச்சார பாரம்பரியத்தில் நன்கு ஈடுபாடு உள்ளவர்களாக அறியப்பட்டவர்கள். இவர் 6 நவம்பர் 1910ல் பிறந்தார். இவருக்கு மூன்று பெண் சகோதரிகளும். ஒரு ஆண் சகோதரரும் இருந்தனர். இவர் கல்வியில் மிகவும் சிறந்து விளங்கினார். முதலில் சென்னை மாநிலக்கல்லூரியில் (B.A), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் (M.A), ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழககத்தில் (Ph.D) பட்டம் பெற்றவர்.

1933--1943வரை யாழ்ப்பாணம், ராமநாதன் பெண்கள்கல்லூரியின் அதிபராகப் பதவிவகித்தவர். இந்தப்பதவியை வகித்த முதல் இலங்கையராவர். பின்னர் இலங்கைக் கல்வித் திணைக்களத்தில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து, யாழ்ப்பாணம் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் இயக்குனராகச் செயற்பட்டு 1969 ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

யோகர்சுவாமியின் அறிவுறுத்தல் படியும், வழிகாட்டல் படியும், இவர் உலகில் பல நாடுகளுக்குச் சென்று பல சமய மாநாடுகளில் பங்காற்றி சிறப்புரை ஆற்றியவர். இவர் 1951ல் ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச புரிந்துணர்வு மகாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கு பற்றியவர். இவர் பல கல்வி, கலாச்சார அமைப்புகளில் ஒரு முக்கிய உறுப்பினராகிப் பெரும் பங்களிப்புகள் செய்தார். இந்தியா பாரதிய வித்யா பவன், றோயல் ஆசியாட்டிக் சொசைட்டி ஆகியவற்றில் வாழ்நாள் உறுப்பினராக இருந்தார்.

இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் முதன்மைக் கணக்காளர் பதவிவகித்த திரு. நவரத்தினம் அவர்களைத் திருமணம் செய்தவர். இவர்கள் இருவரும் யோகர்சுவாமிகளை சிறுவயதில் இருந்தே நன்கு அறிந்தவர்கள். 1935ம் ஆண்டு, இவரின் கணவர் திருவண்ணாமலை சென்று ரமணமகரிசியை முதலில் பார்த்தார். அதன்பின்னர் தன் அரச வேலையின் வருடாந்த விடுமுறை நாட்களில் ரமணாசிரமம் சென்று வருவது வழக்கம். திருமணத்தின் பின்பு தன் துணைவியாரையும் அழைத்துச் செல்வார். இவரும் ரமணமகரிசியின் பக்தையாகவும் இருந்து அவரின் போதனையான ''நான் யார்?'' என்ற ஆத்ம விசாரணை மூலம் தன்னை அறியும் தொடர் முயற்சியில் ஈடுபட்டார்.

தாங்கள் இருவரும், யோகர்சுவாமியின் அருகில் வசிக்கும் நோக்கில், கொழும்புத்துறையில் சுவாமியின் குடிலுக்கு எதிரில், ஒரு வீட்டினை வேண்டி அதற்குத் ''திருவடி'' எனப் பெயரிட்டு அதில் வசித்து வந்தார்கள். இக்காலத்தில் இவர்கள் சுவாமியிடம் தினமும் நெருங்கி அணுக்கத் தொண்டு புரிந்தார்கள்.

சுவாமியின் வழிகாட்டுதலுக்கமைய, வேறுசில அடியார்களுடன் சேர்ந்து இவர்கள் இருவரும் ''சிவத்தொண்டன் நிலையம்'' தொடங்கியதில் பங்காற்றியுள்ளார்கள். இவர் சைவ சித்தாந்தக் கொள்கைகளிலும், அதன் தத்துவத்திலும் பெரும் பாண்டித்தியம் பெற்றவர். அது தொடர்பாகப் பல ஆன்மீக அறிவியல் நூல்களை எழுதியுள்ளார். இவர் ஒரு மிகச்சிறந்த ஆங்கிலப்புலமை பெற்ற எழுத்தாளர். இவர் பல்வேறு அம்சங்களில் எழுதிய ஆங்கில நூல்கள் பல, உலகக் கல்வியாளர்கள் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பு பெற்றன.

யோகர்சுவாமி வரலாறு, அவரது போதனைகள், நற்சிந்தனைப் பாடல்கள் பற்றியும் விரிவாக விபரித்து ஆங்கிலத்தில், "The Testament of Truth : A Study of the Life and Teachings of Yogaswami" என்ற நூலினை எழுதி 1972ல் வெளியிட்டுள்ளார். இது சுவாமி பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நற்சிந்தனை வெளிவந்த விதம் பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். சுவாமி பல்வேறு காலங்களில் எழுதிய கருத்தாழம், தத்துவங்கள், சமயக்கருத்துகள் கொண்ட, ஆத்மீகமான பாடல்கள் பல பல. இவை அனைத்தும் சிறுசிறு துண்டுகளில் எழுதப்பட்டிருந்தன. சில அவரின் தொண்டர்களுக்கு எழுதிய கடிதங்களில், அறிவுரைகளில் இருக்கும், அல்லது இவரின் அவ்வப்போது கூறிய கருத்துக்கள், வாசகங்கள் தொண்டர்களால் குறித்து வைக்கப்பட்டிருக்கும். இவற்றில் சில, 1935ம் ஆண்டிலிருந்து சிவதொண்டன் இதழில் ஒவ்வொன்றாக வந்து கொண்டிருந்தன. இவற்றை எல்லாம் சேகரித்து ஒரு தொகுப்பாகப் பதிப்பித்து வெளியிடத் தொண்டர்கள் பலரும், திரு.திருமதி. நவரத்தினம் தம்பதிகளும் தொடர்ந்து பன்னெடுங்காலம் பலமுறை சுவாமியிடம் அனுமதி கேட்டும் மறுக்கப்பட்டது. அந்தத் தொகுப்பினைத் திருமதி. நவரத்தினம் அவர்கள் வைத்திருந்தார்கள். 1957ம் ஆண்டு இவர் தனது "Tiruvasagam: The Hindu Testament of Love" என்ற திருவாசக நூலினை பாரதிய வித்யா பவன், பம்பாய் மூலம் பதிப்பித்து வெளியிடும் நோக்கில் இந்தியா சென்றிருந்தார். அந்நேரத்தில் அவர் சென்னையில் இருந்தபொழுது, நற்சிந்தனையைப் பதிப்பிக்க சுவாமி அனுமதி தந்துவிட்டதாகத் திரு. நவரத்தினம், இவருக்கு அறிவித்தார். உடனேயே இவர் சென்னை, அடையாறில், வசந்தா அச்சகத்தில் நற்சிந்தனையைப் பதிப்பித்தார். 1958ல் மார்கழி திருவாதிரை தினத்தன்று சுவாமியின் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று சுவாமி, இவரையே முதல் பக்கத்தில் இருந்து எண்பத்தைந்தாவது பக்கம் வரை உள்ள பாடல்களைப் பாடுவித்து, 1959ம் ஆண்டு மாசி சிவராத்திரி வாரத்தில் தன் அடியார்களுக்கு வெளிவிடும்படி பணித்தார்.

இவரது முதல் நூல் ''ஒரு புதிய பார்வையில் திருவாசகம்'' (A New Approach to Tiruvācakam,) அண்ணாமலைப் பல்கலைக்கத்தினால் 1951ல் பிரசுரிக்கப்பட்டது. இவரின் பல நூல்கள் இந்தியா ''பாரதிய வித்யா பவன்'' நிலையத்தால் பிரசுரிக்கப்பட்டது. இவரின் கடைசி நூலான ''மகாசக்தி புனிதத் தாயின் அழைப்பு'' (The Call of Mahasakti Mother Divine) என்பதை தன் மறைந்த கணவரான திரு.நவரத்தினம் அவர்களுக்கு அர்பணித்துள்ளார். இவர் தன் சில கடைசி

வருடங்களைத் தன் சகோதரிகளின் பிள்ளைகளுடன் கனடா நாட்டில் செலவிட்டார். அக் காலத்தில் அங்கு நன்கு வரவேற்புப்பெற்ற பல சொற்பொழிவுகளையும், பேச்சுக்களையும், தொலைக்காட்சி களிலும்; வேறுபல நிகழ்ச்சிகளிலும் கொடுத்தார். கனடா இந்துக் கோவில்கள் சங்கத்துடன் சேர்ந்து சைவ சித்தாந்த தத்துவங்கள், சைவ பாரம்பரியம் சைவத் தமிழ் நடைமுறைகள் பற்றிய அறிவூட்டல் நடவடிக்கைகளில் பெரிதும் ஆர்வமாக ஈடுபட்டார்.

இவர் 1993ம் ஆண்டு 13 ஜூன், ஞாயிறு காலை தனது பெறாமகளின் வீட்டில் ஒக்வில்லே, ஒண்டாரியோ, கடானவில் இயற்கை எய்தினார்.

திருமதி. இரத்னா நவரத்தினம் அவர்கள் யோகர்சுவாமியுடனான, தங்கள் குடும்பத்தில் நடந்த பல சுவையான சம்பவங்களை என்னிடம் கூறியிருந்தார். அவற்றில் சிலவற்றை, இங்கு பகிர்தல் பொருத்தமாயிருக்கும் என நம்புகிறேன்:-

இவரின் தகப்பனார், அவர் வாழ்வில் என்ன முடிவெடுத்தாலும், சுவாமியின் கருத்தினைக்கேட்டு அதன்படியே சற்றும் மாறாமல் நடப்பவர். எனவே, அவரின் பிள்ளைகள் அனைவருமே, யோகர் சுவாமியைத் தங்களின் இளவயதில் இருந்தே அறிவார்கள்.

இவர்கள் குடும்பத்தில் ஒரே ஆண் பிள்ளையான இவர்களின் தம்பி, துரைராஜசிங்கம் இங்கிலாந்தில் உயர்படிப்புப் படிக்க விண்ணப்பித்து, அனுமதி கிடைத்து; அங்கு போவதற்குக் கப்பலும் பதிவு செய்து, ஒருநாள் பிற்பகலில் புகையிரதம் பிடித்துக் கொழும்பு செல்ல எல்லாம் தயாராக இருந்தார். அந்தநிலையில் இவரின் தகப்பனார், சுவாமியைப் பார்பதற்குச் சென்றார். சுவாமியிடம், தன் ஒரே ஆண்மகனின், லண்டன் உயர்படிப்புப் பயணம் பற்றிக் கூறினார். அதற்கு சுவாமி சற்று யோசித்துவிட்டு, ''செல்லையா, அந்தச் சேவல் நெல்லைத் தின்னுதில்லையடா'' என்று கூறினார். இது, மறைமுகமாக, அவரின் மகன் இங்கிலாந்து சென்று, உயர் படிப்பினைப் படிக்கமாட்டார், என்று அவருக்குப் புரிந்துவிட்டது. அந்தக் காலத்தில் யாழ்பாணத்து இளைஞரகள் பலர், கம்யூனிஸ்ட் கந்தையா அவர்களின் பின்னால் நின்று கம்யூனிச அரசியலில் ஈடுபட்டனர், அதில் இவர்மகனும்

ஒருவர், அதனால் இவரால் படிப்பில் அதிகமுனேற்றம் காணமுடியவில்லை. எனவே சுவாமியின் மறைமுகமான எதிர்வு கூறலின்படி, இவரின்மகன் இங்கிலாந்து சென்றாலும் அங்கும் கம்யூனிச ஈடுபாடுகளில் ஈடுபட்டு, படிப்பில் கவனம் செலுத்த மாட்டார் என்று, செல்லையா உணர்ந்து கொண்டதால்; வீட்டிற்கு வந்து சுவாமி சொன்னதை விளக்கி, தன் மகனை அன்று கொழும்பு செல்லாது தடுத்து, இங்கிலாந்தில் தன்மகனின் படிப்பினை நிறுத்தினார். இதன் பின் சில காலங்களின் பின்னர் அந்தமகன், விவசாயத் திணைக்களத்தில் சேர்ந்து ஒரு விவசாய உத்தியோகத்தர் ஆக வேலைபார்த்தார். ஒருமுறை துரைராஜசிங்கம் அவர்களை, அவரின் மனைவி, மகனுடன் திருவண்ணாமலையில் ரமணமகரிசி ஆசிரம விடுதியில் நவரத்தினம் தம்பதிகளுடன் பார்த்தேன். அப்பொழுது திருமதி. நவரத்தினம் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க, இவரின் மனைவி மிகவும் செழுமையான குரலில் யோகர்சுவாமியின் சில நற்சிந்தனைப் பாடல்களைப் பாடக்கேட்டு மகிழ்ந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது.

**இரத்னா மா இன்னொரு சம்பவத்தினை நினைவுகூறுகிறார்;-**

''எனது, சிறுவயதில் இருந்து சுவாமியுடனான தொடர்பில் ஐந்து வருடகால இடைவெளி, இந்தியாவில் மேற்கொண்ட மேற்படிப்பினால் உண்டாயிற்று. 1932ம் ஆண்டு M.A பட்டம் பெற்றபின்பு தந்தையார், என்னைச் சுவாமியைப் பார்க்க அழைத்துச் சென்றார். உடனே சுவாமி, எப்படி எனது நேரமும், வருடங்களும் செலவானது என்று வினவினார். உடனேயே எனது தந்தையார், எனது பட்டங்கள், தங்கப்பதக்கப் பரிசில்கள், சங்கீதம், கலை எனத் தொடர்ந்து புளுகினார். சுவாமி உடனே அவரை இடை நிறுத்திச் சொன்னார்; ''இதெல்லாம் சில்லறையான அறிவு மூட்டைகள், இவை ஒரு இருண்ட எதிர்காலத்தைத்தான் உருவாக்கும்''. சுவாமி தன் இனிமையான சிரிப்பினைச் சிரித்து, தான் ஒரு பட்டம் தருவதாகக் கூறி, இன்னொரு எழுத்தைக் கூட்டி, M.A என்பதை M.A.D எனத் தெளிவாகச் சொன்னார்.

இது கடவுளைப் போன்ற ஒரு குருவின் அறை கூவல்! குப்பையான புத்தகப் படிப்பினை விட்டு திருக்குறள், பகவத்

*கீதை, திருமுறைகள் போன்றவற்றைப் படித்து, ஆத்ம அறிவினைப் பெற்று, அவரின் குருகுலத்தில் இருந்தும், உலகம் என்ற பல்கலைக் கழகத்தில் இருந்தும் ஆத்மவித்தையில் பட்டம் பெற்று - தன்னைப் பற்றி அறியவேண்டும், என்பதே!''*

**வேறு ஒரு சம்பவம்:**

*இவரின் தகப்பனார் ஏப்ரல் 1939ல் நோய்வாய்பட்டுப் படுக்கையில் கிடந்தார். அவரின் நோயில் முன்னேற்றமோ, பின்னடைவோ இல்லாமல் ஒரே நிலையில் கிடந்தார். அவருக்குத் தன் அந்திமகாலம் நெருங்கிவிட்டதை உணர்ந்திருந்தார் போலும். 28 மே 1939 பின் மாலைநேரம் தனது மனைவியையும், பிள்ளைகளையும் அழைத்து வீட்டு மின் விளக்குகளைப் போடச் சொல்லி, தன் கட்டிலுக்கு பக்கத்தில் ஒரு கதிரையில் வெண்துணியை விரிக்கச் சொல்லியும், திருமுறைகளைப் பாடச் சொல்லியும், அவர் வருவார், மரியாதையாக அவரை வரவேற்று விழுந்து வணங்குபடியும் கூறினார். இவர்களுக்கு அவர் சொல்வதெல்லாம் ஒரு விசித்திரமாக இருந்தது. அனைவரும் ஆச்சரியப்பட்டு, தகப்பனார், நோயின் தாக்கத்தில் பிசத்துகிறார் என்று நினைத்தாலும், அவர் சொற்படி செய்தனர். மாலை சந்தியா நேரத்தில் திடீரென உரத்த கர்ச்சனையுடன், தந்தையின் செல்லப் பெயரான ''சின்னத்தம்பி'' என அழைத்தபடி வீட்டினுள்ளே யோகர் சுவாமி திடீரென வந்தவர், இவர்களின் மரியாதை வணக்கங்களைத் தட்டிவிட்டு நேரே தந்தையின் படுக்கைக்குச் சென்றார். அப்பொழுது தந்தையார் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முயற்சித்தார். சுவாமி அவரின் கூப்பிய இருகைகளையும் தன்நெஞ்சுடன் அணைத்து, சிவனுடன் ஐக்கியமாகும் பொழுது உண்டாகும் ஆனந்தத்தை விளக்கும் ஒரு திருமுறையைப்பாடி, ''ஒனக்கு ஒன்றுமில்லையடா, சுகமாய்ப் பயணம் போயிட்டு வா'' என்று சொல்லி கட்டிலுக்கு அருகிலுள்ள சங்கில் இருந்து எடுத்து நெற்றியில் திருநீறிட்டு, தலையில் தடவி ஆசிர்வதித்துச் சென்றுவிட்டார். அப்பொழுது தங்கள் தந்தையின் முகத்தில் ஒரு வெளிப்படையான பிரகாசம் உண்டானதாம். இரு நாட்களின் பின்பு, 30 மே 1939, வைகாசி விசாக - பௌர்ணமியில் ''செல்லையா'' தன் இறுதிமூச்சினைவிட்டு*

இயற்கை எய்தினார். இது தங்கள் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத அதிசயம். இதுவரை தங்கள் வாழ்வில் சுவாமி ஒரு தூரத்து நட்சத்திரம் போலத் தான் காணப்பட்டார். ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னர் எங்கள்மீது அவரின் பரிமாணம் மிகவும் பரந்துவிரிந்தது, பற்றுதல் மிகவும் ஆழமாக உறுதியாகி விட்டதாகவும் கூறினார்.

யோகர்சுவாமி, இந்தியாவில் காசி, சிதம்பரம் போன்ற பல புண்ணிய திருத்தலங்களுக்கு யாத்திரை போய்விட்டு வந்தபின், காசி, சிதம்பரம் எல்லாம் எம்முள்ளேயேதான் இருக்கிறது என்ற, ''எல்லாம் ஒன்றே'' என்ற அனுபவத்தினைத் தனக்குப் போதித்தார் என்று கூறியுள்ளார்.

சுவாமியின் காலடியில் தொடர்ந்து இருந்ததினால், தனது விருப்பங்கள் எல்லாம், ஒரு வழியாக விட்டு விலகியதை உணர்ந்ததாகவும; தன் இருண்ட இருதயக் குகையில் மிகவும் மெது மெதுவாக ஒளிக்கீற்று ஒன்று திறந்து தன் உள் அமைப்பை மாற்றி நான் என்ற அடர்தன்மையை ஊடறுத்துப் பார்க்க முடிந்தது என்றும், அவரின் போதனைகளால், பாடல்களால், தரிசனத்தால் சாந்தத்தின் நறுமணம் மெதுவாக ஆழ்மனதில் பரவிப்பதிந்தாகவும் பதிவுட்டுள்ளார்.

இவர் தனது "The Testament of Truth" என்ற நூலில், சுவாமி இலங்கை முழுதுமாகப் பல தலங்களுக்குச் சென்ற தன் பலபாதயாத்திரைகள் பற்றியும், அப்பொழுது எல்லாவிதமான மக்கள், சமூகத்தவர்கள், வேற்றுமதத் தலைவர்கள், வேடர்கள் போன்ற பலருடன் அவருக்குள்ள நட்புகள், தொடர்புகள் பற்றிச் சொன்னவற்றைப் பற்றியும்; அவரின் உண்மை அனுபவங்களையும்; ஒரேஒரு சர்வசக்தியே, வெளி உலகில் உலா வருவதாகவும், அதே சக்திதான் எல்லா மனிதர்களின் இருதயத்திலும் இருப்பதைக் காண்பதாகவும்; சிவனின் கருணை இந்த மிகவும் அழகிய இலங்கைத் தீவில் ஒவொரு துகள்களிலும் பிரகாசிப்பதைத் தான் காணுவதாகக் கூறியதை, மிகவும் விரிவாக விவரித்துள்ளார்.

இதே நூலில், இவர் சுவாமியின் நற்சிந்தனைப் பாடல்களை மிக விரிவாக ஆராய்ந்து, அவற்றில் கூறப்பட்ட கருத்துக்களை, மூவரின்

தேவாரங்கள், திருவாசகம், சிவபுராணம், மெய்கண்டபுராணம், தாயுமானவர் பாடல்கள், திருமந்திரம், திருக்குறள், நால்வகை வேதங்கள், பலவகையான உபநிடதங்கள், பகவத் கீதை போன்ற பல எண்ணற்ற நல்நூல்களில் கூறப்பட்ட இணையான கருத்துக்கள், கூற்றுக்கள், கோட்பாடுகளுடன் ஒப்பீட்டு ஆராய்ச்சி செய்து விளக்கியுள்ளார்.

இவர் சுவாமியின் இறுதிக்காலத்தில் அவருக்கு அருகில் வசித்ததால் பல அணுக்கத் தொண்டுகள் செய்தார். 24 மார்ச் 1964, முன் இறுதி இரவில் இவர் சுவாமியின் நிலையைப் பார்த்துக் கவலை கொண்டு, விம்மிய குரலுடன் ''எப்படி இருக்கு சுவாமி?'' என்று கேட்டபொழுது, அவர் கூறிய வார்த்தைகள், ''எல்லாம் சரி'' என்பதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். சுவாமியின் இறுதி வார்த்தைகளும் அதுவானது! அதிகாலை 3.15 a.m. ஆயிலிய நட்சத்திரத்தில் முடிவு வந்தது!

திருமதி. நவரத்தினம், தனது வாழ்வில், சுவாமியுடன் தொடர் பில்லாத வேறு மறக்க முடியாத சம்பவத்தையும் எனக்குக் கூறியிருந்தார்கள். அதையும் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன். இளவயதில். தனது முதல் பட்டப்படிப்பான (B.A) படிப்பினை சென்னையில், மாநிலக் கல்லூரியில் (Presidency College) படித்தார். இது இந்திய சுதந்திரத்துக்கு முன்னையகாலம். இவரின் சகமாணவர்களாக, இந்தியாவின் முன்னைநாள் நிதிஅமைச்சர் சி.சுப்பிரமணியம், இந்தியாவின் பெயர் பெற்ற வெளிவிவகார ஆலோசகர் ஜி.பார்த்தசாரதி ஆகிய இருவரும் உள்ளடங்குவர். இவர்கள் மூவருக்கும் தான் வகுப்பில் முதல் மாணவராவதற்குப் போட்டி இருக்கும். அக்காலத்தில் இந்தியாவில் மிகவும் வசதிபடைத்த செல்வந்தர்கள், ஜமீன்தார் வீட்டுப் பெண் பிள்ளைகள் தான் மேல் படிப்பு படிப்பார்கள். அப்படிப் பல பெண் பிள்ளைகள் பலரும் மாநிலக் கல்லூரியில் இவர்காலத்தில் படித்தார்கள். அந்த நேரத்தில் மகாத்மா காந்தி, சென்னை வந்தபொழுது, மாநிலக் கல்லூரி சார்பிலும் அவருக்கு ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

மகாத்மா காந்தியின் உரையின் பின்பு, அங்குள்ள மாணவிகள் அவரின் உரையில் ஈர்க்கப்பட்டு, விடுதலைப் போராட்ட

நிதிக்கு அன்பளிப்புச் செய்ய விரும்பி, மாணவிகள் பலரும் தாங்கள் அணிந்திருந்த, கைவளையல்கள், காதணிகள், சங்கிலி, மோதிரம் போன்ற பல நகைகளைக் கழட்டி, வரிசையில் வந்து மகாத்மா காந்தி முன் உள்ள ஒருதுண்டில் குவித்தார்கள். மகாத்மா அவர்களின் செயலை அமைதியாக ரசித்துக் கொண்டிருந்தார். அனைவரும் பின்னர் தங்கள் இடங்களில் போய் அமர்ந்ததும், காந்திஅடிகள், ஒலிவாங்கியை எடுத்துப் பின்வருமாறு கூறினார், ''இந்த இளம்வயதில் மாணவிகளான உங்களுக்கு இருக்கும் நாட்டின் விடுதலை உணர்வையும், நாட்டுப் பற்றினையும் அதற்கு உங்கள் நகைகளைக் கொடுக்கும் தியாகத்தையும் நான் பெரிதும் மதித்து உங்களுக்குத் தலை வணங்குகிறேன். ஆனால், இங்குதந்த நகைகள்எல்லாம் உங்கள் பெற்றோருக்குச் சொந்தமாகும், அவர்கள் அதை உங்களை அழகு படுத்திப் பார்க்கும் நோக்கில் உங்களுக்குத் தரப்பட்டன. எனவே அதனை உங்கள் பெற்றோரின் சம்மதம் இன்றி வேறுயாரிடமும் கொடுக்க உங்களுக்கு உரிமை இல்லை! எனவே, இங்கு குவித்து கிடக்கும் நகைகள் அனைத்தையும், நீங்களே மறுபடியும் வந்து உங்கள், நகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் பெற்றோரின், அனுமதியுடன் கொடுக்க விரும்பின், நாங்கள் அதை மிகுந்த சந்தோசத்துடன் விடுதலைப் போராட்டநிதிக்கு ஏற்கத் தயாராக இருக்கிறோம்' என்றார். மாணவிகள் அனைவரும் மீண்டும் வரிசையில் வந்து தங்கள் தங்கள் நகைகளை எடுத்து மீண்டும் அணிந்து கொண்டார்கள். இது ஒரு மிகவும் நல்லபடிப்பினையாக இருந்தது!, போராட்ட நிதிகூட மிகவும் சரியான வழிமுறைகளில் தான் பெறவேண்டும் என்ற நோக்கம்! (Means and end, both must be justified) மகாத்மா காந்திக்கு இருந்தை இந்த உதாரணம் மூலம் கண்கூடாய் காணக்கூடியதாய் இருந்தது என்று கூறினார்.

இவர் எழுதிய "Tiruvachakam: The Hindu Testament Of Love" என்ற புத்தகம் இந்தியாவில் தமிழ்தெரியாத பல ஆன்மீக அறிஞர்கள் திருவாசகம் பற்றி அறிய பெரும்துணையாக இருந்து, பிற மொழியாளர்களிடம் மிகவும் நன் மதிப்பினைப் பெற்றது. இந்த நூலினை ஐதராபாத்தில் வசிக்கும் தெலுங்குப் பேராசிரியர் ஒருவர் படித்து விட்டு, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி

அற்புதமான வாழ்த்துக் கடிதம் ஒன்றினை ஆங்கிலத்தில் இவருக்கு எழுதியிருந்தார். திருவண்ணாமலையில் ரமணாசிரமத்தில் வைத்து அதை என்னிடம் வாசித்துப் பார்க்கும்படி தந்தார். அதில் அந்தப் பேராசிரியர் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்த விதம் மிகவும் ஆழமாக என் உள்மனதைத் தொட்டதால், அக் கடிதத்தினை திரும்பத் திரும்ப வாசிக்க ஒரு உந்துதல் ஏற்பட்டு அதைப் பலமுறை வாசித்து மகிழ்ந்தேன்.

இலங்கையின் பெயர் பெற்ற எழுத்தாளர் - பத்திரிகையாளரான கே.எஸ். சிவகுமாரன், திருமதி. இரத்னா நவரத்தினம் எழுதிய ‘‘சிவயோகமிர்தம்: அமிர்த சிவ யோகா’’ (Sivayogamirtham: Ambrosial Siva Yoga) என்ற நூல் யாழ்ப்பாணக் கலாச்சார தத்துவம், இந்துசமய அம்சங்களும் இலங்கையில் அதன் நடைமுறைகள் பற்றியும் அறிமுகப்படுத்த மிகவும் சிறந்த நூலாக விளங்குவதாகக் குறிப்பிடுள்ளார்.

இவருக்கு மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்த பேராசிரியர். சுவாமிநாதன், ரமணமகரிசியின் மிகத் தீவிர பக்தர். ரமணமகரிசி பற்றியும், அவரின் போதனைகள் பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார். புதுடெல்லியில் ‘‘ரமண கேந்திரா’’ என்ற அமைப்பை உருவாக்கி ரமணரின் போதனைகளைப் பரப்புவதில் முக்கிய பங்கு ஆற்றியவர். இதனால், இயேசு கிறித்துக்கு செயின்ட் போல் போல, ரமணமகரிசிக்கு சுவாமிநாதன் என்று பெயர் பெற்றவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மாநிலக் கல்லூரி போன்றவற்றில் ஆங்கில பேராசிரியராகவும், பின்னர் சென்னை அரசு கலைக்கல்லூரியின் அதிபராகவும் பணிபுரிந்து ஒய்வு பெற்றவர். அதன் பின் 1953 -1959 வரை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தன் இளமைக்காலத்தில் மகாத்மா காந்தியுடன் மிகவும் நெருக்கமாகப் பழகி, காந்திய வழியில் தன்னை ஈடுபடுத்தி, அதன்படி வாழ்ந்தவர். பின்னர் மகாத்மா காந்தியின் தொகுக்கப்பட்ட படைப்புகள் (The Collected Works of Mahatma Gandhi) என்ற தொகுப்புப் புத்தகத்தின் ஆசிரியராக 25 வருடங்கள் பணிபுரிந்து, அந்த 100 தொகுப்புகளில், 4வது தொகுப்பில் இருந்து 90 வது தொகுப்புவரை

*அதன் ஆசிரியராக இருந்தவர். இவருக்கு 1972ல் பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது. 19 மே 1994ல் சென்னையில் அவர் அமைதியாக இயற்கை எய்தினார்.*

*"My master is Gandhi the servant of Ram*
*My Guru is Ramana, the living presence of Siva*
*Siva is the oneself, ekanma, Silence"*

*என்று பேராசிரியர் சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.*

*திருமதி. இரத்னா நவரத்தினம் அவர்கள் தன் ஆங்கிலப் பேராசிரியர் சுவாமிநாதனுடன், இறுதிக்காலம் வரை தொடர்பில் இருந்துள்ளார். சென்னையில் வாழும்நாட்களில் அவருடனான சில சந்திப்பிற்கு என்னையும் அழைத்துச் சென்று அவரிடம் அறிமுகம் செய்துள்ளார்.*

*திருமதி. நவரத்தினம் அவர்கள் இந்தியாவில் நல்ல பெயர் பெற்ற சமய அறிஞர்களுடன் தொடர்பிலிருந்து பல சமயக் கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார். பொள்ளாச்சி மகாலிங்கம், கவிஞர். சௌந்தரா கைலாசம், தமிழகத்தில் உள்ள பல சைவமட ஆதீனங்கள், சுவாமி சித்பவானந்தர் (இவர், முன்னைநாள் மாநில/ ஒன்றிய அமைச்சர் பதவிகள் பல வகித்த சி.சுப்பிரமணியத்தின் சிறிய தகப்பனார்) ராமகிருஷ்ணா மிஷன் உப--தலைவராக இருந்து பின் திருப்பராயத்துறையில் ராமகிருஷ்ணா தபோவனம் என்ற தனி அமைப்பை உருவாக்கி நடத்தியவர், ஆகியோருடனும் தொடர்பில் இருந்தார்.*

*ஒருமுறை சத்திய சாயிபாபாவை நவரத்தினம் தம்பதிகள் புட்டபர்த்தி சென்று பார்த்தனர். அவர் இவர்களை யாழ்பாணத்து யோகர் சுவாமியின் பக்தர்கள் எனச்சொல்லி தனியாக அழைத்து நேர்காணல் கொடுத்தார். அப்பொழுது, யாழ்ப்பாணத் தமிழில் சாயிபாபா கதைத்த பொழுது இவர்கள் அதை எண்ணி ஆச்சரியப்பட்டு மெய்மறந்து, அவரின் தமிழை ரசித்தார்களே ஒழிய, அவர் கூறியவிடயத்தில் கவனமில்லாத பொழுது; பாபாவே திரும்ப இவர்களைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்து, இவர்கள் தான் சொல்வதைக் கருத்தில் கொள்ளவில்லையே என்று நினைவூட்டினார். இதனை திருமதி. நவரத்தினம் என்னிடம்*

கூறியுள்ளார். ஆனால், இதே சம்பவத்தினை, பின்னர் ரா. கணபதி அவர்கள் சத்திய சாயிபாபா பற்றி எழுதிய ''சத்தியம்,சிவம்,சுந்தரம்'' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதையும், வாசித்து அறிந்து வியப்புற்றேன்.

யோகர்சுவாமிகள் பாவித்த கருப்புநிறக் குடை திருமதி. நவரத்தினம் அவர்கள் குடும்பத்தாரிடம் இருப்பதாக ஒரு தகவலையும் வாசித்து அறிந்து கொண்டேன்.

திருமதி. இரத்னா நவரத்தினம், யோகர்சுவாமி தன்னிடம், தனது கை விரல்கள் ஐந்தையும் காட்டி, ''நீ ஐந்து எழுதுவாயடி'' எனக் கூறியிருந்தார் என்றும்; அதன் பொருள் தான் ஐந்து நூல்கள் எழுதுவேன் என்பது என்றும் எனக்குக் கூறினார். ஆனால் அவர் அதிலும் பார்க்கக் கூடிய நூல்கள் எழுதியுள்ளார்.

**அவர்கள் எழுதிய நூல்களின் விபரம் வருமாறு:-**

1. *The Testament of Truth-- A Study of the life and Teachings of Yogaswami*
2. *The Testament of Love--A Study in Tiruvacagam*
3. *The Testament of Wisdom--A Study in Muruga worship*
4. *Siddhanta Saivam in essence and manifestation*
5. *A new approach to Tiruvacagam*
6. *The vision of Siva in Periyapuranam*
7. *Aum Ganesa : The peace of god*
8. *Kuṟaḷil uṇarcci vaḷam*
9. *Luminous Eye*
10. *The Call of Mahasakti Mother Divine*
11. *Sivayogamirtham: Ambrosial Siva Yoga*



## *Dr.* சுசுநாகா வீரபெருமா
## *Dr. Susunaga Weeraperuma*

*ரமணமகரிசி ஆசிரமத்தால் தொடர்ந்து வெளியிடப்படும் "The Mountain Path" என்ற பெயரில் வெளிவரும் ஆங்கிலச் சஞ்சிகையை, இந்தியாவில் வசித்த காலங்களில் ஆர்வமாக வாசித்தேன். அதில் இவரால் எழுதி வெளிவந்த சில கட்டுரைகளை வாசித்தபொழுது இவரின் எழுத்துக்கள் மீது சற்று ஆர்வம்ஏற்பட்டு, இவரைப்பற்றி மேலும் அறியவேண்டும் என்ற அவா துளிர்விட்டு, என்னுளே ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்தது.*

*அந்த சஞ்சிகையில் இவர் யோகர்சுவாமி, பெயர்பெற்ற மலையாள சுவாமி ராமதாஸ், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் பற்றி எழுதியவை மிகவும் ஆழமாக என்னுள் பதிந்துள்ளன. இவர் அக்காலத்தில் வாழ்ந்த பலமகான்களுடன் நேரடியாகத் தொடர்பில் இருந்து அவர்களின் போதனைகள், வாழ்கைமுறைகளை, மிக நன்கு அறிந்தவர். மேலும் இவர்கள் தொடர்பாக சில ஆத்மீக அறிவியல் நூல்களும் எழுதியுள்ளார் என்ற அளவிற்கு மட்டும் இவரை 1980 நடுப்பகுதிகளில் அறிந்திருந்தேன்.*

*பல வருடங்களின் பின்பு, இணையவசதிவந்து, கூகிளில் தேடுபொறி வந்தபின், தூங்கிக் கொண்டிருந்த பழைய அவா, மீண்டும்*

தலை தூக்கியபொழுது இவரைப்பற்றியும், இவரதுபின்புலம், இவரது ஆளுமை, இவர்எழுதிய பலநூல்களின் தன்மைபற்றியும் அறிந்தபொழுது, மிகவும் ஆச்சரியம் உண்டாயிற்று. இவர் பல வகையான நல்ல நூல்களையம், கட்டுரைகளையும், சிறுகதைகளையும், எல்லாவகையான தத்துவங்கள், எல்லாச் சமயங்கள் பற்றியும் எழுதியுள்ளார். இந்தநூல்களின் பட்டியல் மிக நீளமானது அதைப்பார்த்து எனக்கு மிகவும் பிரமிப்பு உண்டாயிற்று. அவற்றை எல்லாம் வாசித்துமுடிப்பது மிகவும்கடினம். நான் சிலவற்றை ஆடு குழை கடிக்கிறமாதிரி, இணையத்தில் கூகிள்செய்து பார்த்திருக்கிறேன்.

ஆனாலும் இவர் நம் இலங்கையில் பெரிதும் அறியப்படவில்லையே என்ற ஒருதாக்கம் என்னுளே தொடர்ந்து நிலவுகிறது! இவரும் தன்னைப்பற்றிய நிகழ்கால தன்மைக்குரிய பிரபலம்தேடும் மனிதரல்லாது, இன்றும் பிரான்ஸ்தேசத்தில் ஒரு ஒதுங்கிய கிராமத்தில் அமைதியாக வசிக்கிறார் என்று அறியும்போது, அவர் ஒரு உண்மையான ஞானிபோலானவர் என்ற ஒருஉணர்வு என்னுள் ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே இந்தத் தொகுப்பினை எழுத எண்ணியபொழுது, இவரைப்பற்றியும், இவரும் யோகர்சுவாமியின் ஒரு பக்தனாக, அவரால் முதலில் விழிப்புணர்வு ஊட்டப்பட்டவர் என்பதால் அவரையும் இந்தக்குழாமில் ஒருவராக்க வேண்டும் என்ற உணர்வு என்னுள் ஆழமாக உருவாயிற்று,

சுசுநாகா வீரபெருமா, ''யோகர்சுவாமிக்கு அஞ்சலி'' (Homage to Yogaswami) என்றதலைப்பில் ஒரு சிறுநூலினை, யோகர்சுவாமி இறைபதம் அடைந்த சில வருடங்களின்பின் 1970ம் ஆண்டில் எழுதியிருந்தார். அதை அவரே திரும்ப மீளாய்வுசெய்து அதே பெயரில் ''அசாதாரண ஆத்மீக குருவுடன் எனது மறக்கமுடியாத நேர்காணல்'' என்று விவரித்து எழுதியுள்ளார். அவற்றில் இருந்து எடுக்கப்பட்டவையே உட்பொருளாக இங்கு கூறப்பட்டுள்ளன.

சுசுநாகா வீரபெருமா ஒரு சிங்கள-பௌத்தர், ஒரு தேடுனராக இருந்ததால் யோகர்சுவாமியைப்பற்றி நன்கு கேள்விப்பட்டுள்ளார், அதனை ஆரம்பத்தில் பின்வருமாறு விவரிக்கிறார்:--

யோகர்சுவாமி உயிருடன் உள்ளபொழுதே, அவரின் புகழ் இலங்கை இந்தியாபோன்ற நாடுகளில் பரவி, அவர் ஒரு உண்மையான ஞானம் பெற்ற முனிவராக அறியப்பட்டார். இவரின் சிலசீடர்கள் இவரின் பெருமையை மிகைப்படுத்திக் கூறினார்கள். இவரே ஆதிசங்கரருக்குப் பின்னர் உலகின் மிகவும்சிறந்த பெரும்ஞானி எனவும் கூறினார்கள். சில அவநம்பிக்கையாளர்கள் அவர் சில மனோ சக்திகள்கொண்ட ஒரு யோகி என்று கூறினார்கள். இவரைப்பற்றிக் கேள்விகேட்டவர்கள் எல்லோரும் இவர் ஆத்மீகமுறையில் ஏதும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தினாரோ இல்லையோ, இவர் மிகவும் அதி வித்தியாசமான மனிதர் என்பதை ஏற்றுக் கொண்டனர்.

யோகர்சுவாமி அவரின் தீர்க்கதரிசனமான எதிர்வுகூறலுக்கு மிகவும் புகழ்பெற்றவர். அவர் ஒரு இடத்தில் இருந்து திடீரெனமறைந்து பின் வேறு ஒரு இடத்தில், அல்லது ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றும் வல்லமை பெற்றவர். அவரின் மூன்று பக்தர்கள் ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் பல்லாயிரம்மைல்கள் இடைவெளியில் தாம், யாழ்ப்பாணம், சென்னை, லண்டன் ஆகிய மூன்றுஇடங்களில் யோகர்சுவாமியைச் சந்தித்ததாகக் கூறினார்கள். இவரின் இன்னொரு நெருக்கமான நண்பர் சொன்னார், சுவாமி விரும்பிய எதுவும் உடன் நடக்கும் என்று.

உதாரணமாக, யோகர்சுவாமியும் இந்தநண்பரும் ஒருநாள் நெல் வயல்களூடாக மிகவும் பல நெடுந்தூரம் நடந்து சென்றதால், இருவருக்கும் பசியும், களைப்பும் ஏற்பட்டது. சுவாமி சாதரணமாகச் சொல்வதுபோல் இப்பொழுது ஒரு கார் (Car) வந்தால் திரும்பிப்போக நல்லாயிருக்கும் என்றார். இந்த விருப்பத்தைச் சொல்லிமுடித்ததும், உடனேயே அங்கு சில கார்கள் தோன்றின. அந்த கார்களின் சாரதிகள் எல்லோருமே சுவாமியைத் தங்கள் காரில் ஏறும்படி வற்புறுத்தினார்கள். எல்லாச்சாரதிகளும் சுவாமியைத் தங்கள் காரில் அழைத்துச் செல்வதைப் பெரும்பாக்கியமாகக் கருதினார்கள். அந்தநேரத்தில் சுவாமி தன்கையை உயர்த்தி, ‘‘இப்படி நினைப்பது எவ்வளவு முட்டாள் தனமானது’’, என்று சொன்னார். நான் கேள்விப்பட்டேன், ‘‘ஆன்ம விடுதலை அடைந்தவர்கள், அவர்களின் அகங்காரம் அழிந்தபடியால், மனரீதியாக எதையும்

விரும்பமாட்டார்கள்; ஆனால் அவர்களின் விருப்பம்மட்டும் உடம்பின் தேவைகளுடன் மட்டுப்பட்டிருக்கும்'' என்று.

வேறுஒரு சந்தர்ப்பத்தில், யோகர்சுவாமி, ஒரு அரிதான, கொழும்புப் பயணத்தை முடித்தபின், அவரை யாழ்ப்பாணம் வழியனுப்பப் பல பக்தர்கள் கொழும்பு புகையிரதநிலையத்திற்கு வந்தார்கள். சில பக்தர்கள் தமிழ், சமக்கிருத மொழிகளில் பல பாடல்களைப்பாடி மலர்மாலைசூட்டி வழியனுப்பினார்கள். இந்தநிகழ்ச்சிகளால் தாமதமாக, வண்டி புறப்படும்நேரம் மிகவும் நெருங்கியபொழுது, அவரின் அடியார்ஒருவர் வண்டியில் ஏறவேண்டும் என்பதை சுவாமியிடம் வற்புறுத்தினார். அப்பொழுது சுவாமி உறுதியாகச் சொன்னார், ''கவலைப்படாதே! வண்டி என்னை விட்டுட்டு போகாது''. அந்த மாலையில், ரயில் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டு, அது சரியான நேரத்துக்குக் கிளம்பமுடியாது நின்றிருந்தது. சுவாமி மிகவும் ஆறுதலாக தன்நண்பர்கள் எல்லோரையும் வாழ்த்திவிட்டு ரயில் பெட்டியில் ஏறியவுடன், வண்டியும் உடனடியாகப் புறப்பட ஆரம்பித்தது.

**வீரபெருமா** யோகர்சுவாமியைப்பற்றி அறிந்திருந்தாலும் அவரைப் பார்க்கவேண்டும் என்ற உந்துதல் இல்லாமல் இருந்தார்! அதற்கு மூன்று காரணங்கள் இருந்ததாகவும்; அதில் முதலாவது, அந்தநேரத்தில், தன்னிடம் கொழும்பு--யாழ்ப்பாணம் புகையிரதப் பயணத்திற்குரிய பணம் இன்மை. இரண்டாவது, அந்தநேரத்தில், இப்பொழுது உள்ளது போல, தனக்கு, ஒருவர் கடவுளையோ அல்லது உண்மையினைத் தானாகவே கண்டுபிடிக்கவேண்டும், வேறு வெளிமுகவர்கள் யாரும் இந்தவிடயத்தில் உண்மையாக உதவமுடியாது, என்ற எண்ணம் தோன்றியபடியால், மூன்றாவது, யோகர்சுவாமி பெரும்பாலும் தன்னைக் காணவருபவர்களை விரட்டிக் கலைப்பார் என்பது.

எதிர்பாராதவிதமாக, பலர் யோகர்சுவாமியை ஓர் சரியாக எதிர்வுகூறக்கூடிய திறமைகொண்ட அதிட்டம் சொல்பவர் என்று மட்டும் கருதினார்கள். ஒரு காலத்தில் இவரிடம் காலையில் இருந்து மாலைவரை தொடர்ந்து பலர் வந்துபோனார்கள். அம்மக்கள் தங்களின் பலதரப்பட்ட சொந்தப்பிரச்சனைகளுக்கும், வேறு பிரச்ச

னைகளுக்குமாக வந்துசென்றனர். வந்தவர்களில், சுவாமியால் வரவேற்கப்பட்டவர்கள் தாங்கள் பெரும்பாக்கியம் பெற்றவர்களாக எண்ணினார்கள். சுவாமியால் கண்டிக்கப்பட்டவர்கள், தாங்கள் ஆத்மீக தூய்மை பெற்றதாகக் கருதினார்கள். சுவாமி, எவரின் வருகையையும் விரும்பாவிட்டால், தானே மறைந்துவிடுவார் அல்லது அவர்கள் கண்களில் தென்படாதபடி நெடுங்காலம் இருந்து விடுவார்.

யோகர்சுவாமியின் நடத்தைபற்றி ஒரு மிகவும் சுவராசியமான விளக்கம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:- பந்தப்பட்டுள்ள மனிதனின் மனமானது ஒரு உருவாக்கம் செய்யப்பட்ட நிலையில் இருக்கும் -- அந்த உருவாக்கம் அவனது கர்மவினையால் ஆனது என இந்து---புத்த கோட்பாடுகளால் கருதப்படுகிறது. இந்தக் கர்மவினை என்பது எண்ணிடமுடியாத உளவியல் செல்வாக்கினால் கட்டுப்படுத்தப்படும் மனம் ஆகும். இதுதான் விடுதலை அடையும் வழியில் உள்ள தடைக் கல்லாகும். இந்த உளவியல்காரணிகளே ஒன்றுதிரண்டு ''நான்'' அல்லது ''அகங்காரம்'' என்ற மாயையை உருவாக்குகிறது.

விடுதலையுற்ற மனிதன், இந்த ''நான்'' என்ற கூட்டில் இருந்து விடுபட்டு, தூய உள்ளுணர்வை அனுபவிப்பான். இந்த விடுதலை நிலையை சரியாகக் கூறுவதானால், உருவாக்கம் எதுவும் கொள்ளாத மனோநிலையாகும்! விடுதலையுற்ற மனதில் கர்மவினையால் ஆன மனோ உருவாக்கம் எதுவும் எழாது என்பதே!!

எனவே விடுதலையுற்ற மனதானது உயிரற்ற விடயத்திற்குச் சமனாகக்கருதப்படும். ஆனால் இதையும் உயிரோட்டமுள்ளதாக மாற்றலாம். ஒரு விடுதலைபெறாத மனம் இதனையும் ஒரு உயிரோட்டமாகவும், கர்மவினை ஆகவும் கருதும். இதற்குமேலாக, ஒரு விடுதலையுற்ற மனம் ஒரு கண்ணாடியாக விளங்கி, விடுதலைபெறாத மனதிற்குத் தன் உண்மைத் தன்மையைத் தானே காண உதவும்.

இப்பொழுது யோகர்சுவாமி ஒரு மாறாத ஆளுமைக்குறைபாடு உள்ளவராகக் காணப்பட்டார். ஏனெனில், அவரின் ''ஆளுமை'' வருபவர்களின் பண்புகளைத் தற்காலிகமாக அவர் பெறுவதாக

ஊகிக்கப்பட்டது. எனவே, பெருமையுள்ள மனிதர்கள் மறுதலையாக, யோகர்சுவாமி தங்களை நோக்கிக் கடுமையுடன் நடப்பதாக நினைப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. யோகர்சுவாமியின் பயத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தைரியம் இல்லாதவர்கள் போலத் தென்பட்டனர்.

ஒரு தென்இந்திய சந்நியாசி, பகவத்கீதையின் ஒரு சுலோகத்தை யோகர்சுவாமியிடம் சொன்னார். உடனடியாக, சுவாமி அந்த சுலோகத்தைச் சற்றுத்திருவுபடுத்தி, புத்திசாதுரியமான நகைச்சு வையுடன், அந்தச் சில புனிதவரிகள், சிற்றின்ப-பாலியல் முக்கியத்துவம் பெறும்படி மாற்றிச் சொன்னார். யோகர்சுவாமியால் அதைச்சொல்லாமல் இருக்கமுடியவில்லை! ஏனெனில் அவர் அந்த சந்நியாசியின் ஆழ்மனதில் மறைந்துள்ள சிற்றின்ப-பாலியல் எண்ணங்களுக்கு எதிர்வினை ஆற்றுகிறார். இதன்விளைவாக, அந்த சந்நியாசி, யோகர்சுவாமியின் மற்றைய பார்வையாளர்கள் போல எரிச்சல் அடைந்ததும் அல்லாமல் சங்கடமும் பட்டார்

இன்னொருகருத்தில் யோகர்சுவாமி ஒரு ஜென் குருவாகும்! அவர் வேண்டுமென விரும்பிச் செய்யாமல், மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி, உளவியல்ரீதியான தூக்கத்திலிருந்து அவர்களை விழிப்புநிலை பெறச்செய்கிறார். யாழ்ப்பாணமக்கள் யோகர்சுவாமியை ஒரு ஆர்வம் கலந்த வணக்கத்துடனும், பாசத்துடனும், பயத்துடனும் மரியாதை செய்கிறார்கள். அவரின் சில தீவிரபக்தர்கள் அவரிடம் அன்பிலும் பார்க்கப் பயமே கொண்டிருந்தார்கள். யோகர்சுவாமியினால் வரவேற்கப்படுவதற்கு, அவரை எந்தவிதமான உள்நோக்கமும் இன்றி நாடவேண்டும். அப்படியான உள்நோக்கமற்ற தூயநிலையை அடைவது கடினம்; அதுதான் ஆத்மீகத்தின் உயர் நிலையாகும். உண்மையில், இப்படியான தூயநிலைத் தன்னுணர்வை அடைந்த ஒருவர், தான் ஒருவராக அன்றித், தானே ஒரு யோகர்சுவாமியும் ஆகமுடியும்!

இப்பொழுது, யோகர்சுவாமியைப் பார்ப்பதற்குரிய அங்கீகரிக்கக் கூடிய தகுந்தநோக்கம் எனக்குத் தெரியாததாலும் அவரை எதிர்கொள்வதற்கான தன்நம்பிக்கை குறைவாக உள்ளபடியாலும் அவரைப்பார்க்கும் விருப்பத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன்.

ஒருநாள் மாலைநேரம் நான் கொழும்புக் கடற்கரையோரமாக நெடுந்தூரம் நடந்தபொழுது, தெகிவளைக்கரையில் மீனவர்கள் படகுகளைக் கடலில் இருந்து தள்ளி மண்மீது ஏற்றினார்கள். அத்துடன் அந்தஇடத்தில் மீன்உள்ள கூடைகளும், அவர்களின் சத்தமும் அந்த மாலைநேர அமைதியைக் குலைத்தபடியால், அங்கிருந்து விரைவாக நடந்து பம்பலப்பிட்டிய கரையோரத்தில் ஒதுக்கமான இடத்தில் உள்ள ஒரு கல்லில் கடலைப் பார்த்தபடி நின்றேன். வானம், மாலை மறையும் சூரியஒளியினால் உண்டாகும் பலவண்ண நிறங்களால் ஒளிர்ந்தது. அந்த அழகியவண்ண மாலைநேரத்தில் வீசிய குளிர்ந்த கடல்காற்றினால் எனது நாடிநரம்புகள் சிலிர்ப்படைந்து புத்துணர்ச்சி பெற்றன. ஓய்வில்லாத கடலின்ஓசையும், தொடரலைகள் வந்து கல்லில் அடிக்கும் நிகழ்வும் என் சிந்தனைகளுக்குத் தூண்டுகோலாயின.

அந்தக் களைப்பற்ற அலைகள் அங்குள்ள பாறைகளின்மீது பல நூற்றாண்டுகளாக அடித்தும் அந்தப்பாறைகள் சற்றும் அசை வற்று அப்படியே இருக்கிறன்றன! இப்படித்தானா மனிதனின் ஆத்மீகத் தேடலும் பலகாலம் அசைவில்லாதிருக்கும்? மனிதன் முடிவில்லாமல் தேடியும், உண்மையை அல்லது கடவுளைக் காணப் பெரும்போராட்டம் நடத்தியும் அது அவனால் புரியமுடியாததும், மர்மமாகவும் உள்ளது!

இந்தக் கடலானது, பிரபஞ்ச உணர்வுநிலைக்கு (universal consciousness) ஈடானது என்று எடுத்துக்கொள்ளின், அதிலிருந்து அலைகள் அல்லது சிறு அகம்பாவம் எழும். இந்த அலைகள் உண்மைக்கு எதிராக அடிபட்டு, கரைந்து மீண்டும் ஒரு வேறு அலையாக உருவெடுக்கும்.

இப்படியான எண்ண ஓட்டங்களோடு நான் நின்றபொழுது; திடீரென வயதான கறுப்பானமனிதர் ஒருவர் என்னிடம்வந்து, தான் சொல்வதைக் கேட்கும்படி வற்புறுத்தினார். நான் சற்று அதிர்ச்சியுற்றேன். அவரின் நடைமுறை கொஞ்சம் முரட்டுத்தனமாக இருந்தது. ஆனால் அவரின் அணுகுமுறையோ முற்றிலும் அன்பானதாகவும், இரக்கமுடையதாகவும் இருந்ததை, நான் பின்பு கண்டுகொண்டேன்.

''இளம் மனிதனே! ஏன் உன் நேரத்தை வீணாக்குகிறாய்?'' என்று ஆரம்பித்த அவரின் கேள்வியுடன், எங்களின் அறிமுகம் விரைவாக ஒரு நல்ல நட்பாகமாறியது. இவர், தான் ஒரு ஒய்வுபெற்ற அரச ஊழியர், யாழ்ப்பாணம், தெல்லிப்பளை என்ற ஊரில் தன் மனைவி, குடும்பத்துடன் வசிப்பதாகச் சொன்னார். அறிமுகப்படுத்திய அடுத்த வினாடி அவர் யோகர்சுவாமியைப்பற்றி மிகவும் பெரிய ஆர்வத்துடன் கூறினார். இந்தத்தீவில் வசிக்கும் எங்கள் முனிவரை நீ வந்து பார்க்காமல் இருப்பது, ஒரு இழிவான செயல் என்றார்.

அந்தப் பெரும்மனிதர், எனக்கான புகையிரதச் செலவைக் கொடுத்து, தன்வீட்டில்வந்து எவ்வளவு காலமானாலும் என் விருப்பப்படி தங்குமாறுகூறி, தெல்லிப்பளையில் உள்ள தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் இருவரும் பலவாரங்கள் ஒன்றாக நல்ல சம்பவங்களில் செலவழித்தோம். என்னை, புனிதமான நல்லூர் கோயில் உட்பட அங்குள்ள அனைத்துக் கோவில்களுக்கும் அழைத்துச் சென்றார்.

இவர் ஒரு பக்தியுள்ள இந்து, யோகர்சுவாமியைப் பார்ப்பதற்குத் தயார் படுத்துவதற்காக என்னைப் போதுமானளவு புனிதப்படுத்த வேண்டும் என உண்மையாக நம்பினார். அதிகாலையில், சூரிய உதயத்திற்கு முன்பாக, இவரின் மனைவி, சைவமுறைப்படி பல தேவார, திருமுறைப் பாடல்களை வீட்டில் பாடுவார். பெரும்பாலும் கோவில்களுக்குப் போவதற்காக, நான் வேட்டி உடுத்து, திருநீறுபூசி, சந்தனப்பூச்சு இடுவேன். நான், இந்தச் சமயப்பழக்கங்களில் ஏதேனும் சமய, ஆத்மீக முக்கியத்துவம் உண்டென நம்பவில்லை. ஆனாலும் இவை ஒரு வண்ணமயமான நிகழ்வாக அமைவதற்காக உதவி செய்கிறது எனக்கருதினேன்.

இவ்வாறு பலவாரங்கள் கழிந்தன! அவர்களின் தாராளமனமுடைய உபசரிப்பில் மகிழ்ந்தாலும், நான் இன்னும் யோகர்சுவாமியைச் சந்திக்காததைப்பற்றி அமைதியற்று இருந்தேன். இந்த நண்பர் என்னை மறைமுகமாக ஒரு இந்துவாக மாற்ற முயல்கிறாரோ என்றும் நினைத்தேன். அதில் ஒரு பலனுமில்லை; ஏனெனில், நான் ஏற்கனவே வேதாந்த தத்துவங்களுக்கு அனுதாபம் உடையவன். ஆனால் பின்பு உணர்ந்து கொன்டேன், என் நண்பர் என்னை

யோகர்சுவாமியைச் சந்திப்பதற்குச் செய்யவேண்டிய ஆரம்பகால தயார்முறைகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியமென அவர் பயபக்தியாக நம்புகிறார் என்பதனை.

அண்ணளவாக ஒருமாதம் முடிந்தபொழுது, கொழும்பு திரும்ப ஆர்வம் உண்டாயிற்று. இறுதியில், யோகர்சுவாமியைப் பார்க்காமல் கொழும்பு திரும்பும் என் எண்ணத்தை, நண்பரிடம் சொன்ன பொழுது, அவர் மிகவும் வெற்றிகரமாகச் சிரித்தபடி சொன்னார், ''ஆம், சரியானநேரம் வந்துவிட்டது! இப்பொழுது நீ அவர் நாட்டம் இழந்துவிட்டாய், எனவே இதுதான் அவரைப் பார்ப்பதற்குச் சரியானநிலை, நாளைக்கு நாங்கள் போவோம்.''

நாங்கள் மறுநாள்காலை சூரிய உதயத்தின் பொழுது சுவாமியைச் சந்திக்க முடிவு செய்தோம், ஏனெனில் அந்த நேரம் தான் அவரை சந்திப்பதற்குரிய சரியானநேரம் ஆகும்.

அமைதியான குளிர்ச்சியான நேரம், சற்று காற்றின் வீசலால், உயரமான அழகான பனைமரங்களின் ஓலைகளின் உரசல் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. அந்தநகரம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்த வேளையில், நாம் இருவரும் அந்தக் குறுகிய புழுதியான பாதையில் நடந்து சென்றோம். யோகர்சுவாமி, யாழ்ப்பாணப் புறநகர்ப் பகுதியான கொழும்புத்துறையில் ஒரு வீட்டுத்தோட்டத்தில் உள்ள ஓலையால்வேய்ந்த ஒரு சிறுகுடிலில் மிக எளிமையான கிராமத்தவர்போல வாழ்வதாகத் தோன்றியது.

யோகர்சுவாமி நான் கற்பனை செய்திருந்தமாதிரியே தோற்றம் அளித்தார்; மிகவும் வயதான மெலிந்த தோற்றமும், ஒரு மத்திமமான உயரமும், நீண்ட வெண்தலைமுடி தோழின்மேல் படர்ந்திருந்தது. நாங்கள் முதல் காணும்பொழுது அவர் அந்தத்தோட்டத்தை நீண்ட கூட்டுத்தடியினால் கூட்டிக்கொண்டிருந்தார். அவர் மெதுவாக எங்களை நோக்கி நடந்து வந்து படலையைத் திறந்தார்.

நான் ஒரு கூலியின் வேலையைச்செய்கிறேன்; ஏன் நீங்கள் ஓர் கூலியைப் பார்க்கவந்தீர்கள்? (I am doing a coolie's job; Why have you come to see a coolie?) என்று மிகவும் நகைச்சுவையாகக் கூறித் தனது கண்களையும் குறும்புத்தனமாகச் சிமிட்டினார். அவர் மிகவும்

சரியான ஆங்கிலத்தில் தவறொன்றுமில்லாத உச்சரிப்பில் பேசியதை அவதானித்தேன்.

அவரின் வார்த்தைகளில் பொதுவாக உட்கிடையான ஒரு அர்த்தம் இருக்கும். அவர் எங்களுக்குக் கூறிய வார்த்தைகளில், ‘‘நான் மனிதர்களைத் தூய்மைப்படுத்தும் ஒரு ஆத்மீகவாதி; உங்களையும் தூய்மையாக்க வேண்டுமா?‘‘ என்ற உட்பொருளை நான் உணர்ந்தேன்!

அவர் எங்களைக் குடிசைக்குள் வரும்படி மெதுவாக அழைத்தார். யோகர்சுவாமி காலைக்குறுக்காக மடித்துச் சற்று உயரமான ஆச னத்தில் அமர்ந்தார். நாங்கள் அவரைப்பார்த்தபடி எதிரில் நிலத்தில் அமர்ந்தோம். நாங்கள் இருவரும் ஒருவார்த்தை கூடப் பேச வில்லை. அவரே எல்லா வார்த்தைகளையும் பேசினார். அவருடன் பேசவேண்டிய அவசரம் ஒன்றும் எழவில்லை! யாரும் எதையும் நினைத்தாலே அவர் உடன்பதில் கூறிடுவார். நான் அவரிடம் வார்த்தைகளால் ஒருகேள்வியும் கேட்க முயலவில்லை, ஏனெனில் அவர் என் எண்ணங்களை எல்லாநேரமும் அறிவார். நாங்கள் வச தியாக நிலத்தில் அமர்ந்தபின், சுவாமி தன் கண்களை மூடிச் சுமார் அரைமணித்தியாலங்கள் அசைவின்றி அமர்ந்திருந்தார். அவர் அந்நேரம் வேறு ஒருபரிமாணத்தில் வாழ்வதுபோலத் தோன்றினார். அவரின் அமைதியான முகபாவனை, அவரின் தியானம் புரியும் பொழுது உண்டான ஆனந்தத்தை வெளிக்காட்டுகிறதா? அவர் தூங்குகிறாரா? ஓய்வுகொள்கிறாரா? அல்லது எங்கள் மனங்களை ஆய்வுசெய்கிறாரா? என நாங்கள் ஆச்சரியப்பட்டோம்!

எனது நண்பர் ஒரு பதட்டமான சிரிப்பின்மூலம், சுவாமி எங்களை வரவேற்றதால், நாங்கள் மிகவும் அதிட்டசாலிகள் எனப் புரியவைத்தார். சுவாமி திடீரெனக் கண்களைத் திறந்தார், அவரின் மிகவும் ஒளிபொருந்திய கண்கள் அந்த இருளான முழுக்குடிலையும் ஒளிராக்கியது. அவரின் கண்களின் ஒளிர்வில் கனிவு தென்பட்டது. அதில் ஒரு கனிவான கருணை தெரிந்தது.

நான் அப்பொழுது பசியையும், சோர்வையும் உணரத் தொடங்கினேன். உடனே சுவாமி கேட்டார், ‘‘உனக்கு காலை உணவிற்கு என்ன வேண்டும்?’’. அந்த நேரத்தில் எதைத்தந்தாலும்

நான் உண்பதற்குத் தயாராக இருந்தேன். ஆனாலும் நான் இட்டலியும், வாழைப்பழத்தினையும் நினைத்தேன்!

உடனடியாக ஒரு கணப்பொழுதில் யாரோ ஒருவர், குடிலினுள் புகுந்து வணங்கி மிகவும் மரியாதையுடன், நான் நினைத்த அதே உணவுகளை ஒரு தட்டில் கொண்டுவந்து எங்கள் மூவருக்கும் கொடுத்தார். சிறிது நேரத்தில் எனது நண்பர் காப்பிகுடிக்க ஆசைப்பட்டார்; அவர் அதை வார்த்தைகளால் சொல்வதற்கு முன்பே, அதே நபர் திரும்பவந்து எங்களுக்குக் காப்பி பரிமாறினார்.

காலை உணவு அருந்தியபின், அங்குள்ள வாழைப்பழத் தோலினை எறிய வேண்டாம், அது பசுவுக்கானது என்றார். அந்தத் தோட்டத்தில் மேய்ந்த பசுவுடன் உரத்தகுரலில் பேசினார்! அந்தப்பசு ஆடி அசைந்து குடிலின் உள்ளே வந்தபின் சுவாமி அத்தோல்களை அதற்குக் கொடுத்தார். அது அவரின் கைகளை மிகவும் நன்றியுடன் நக்கியபின் அங்கயே அந்த நிலத்தில் உட்கார முயன்றது. அவர் மீதமுள்ள தோல்களைக் கொடுத்துச் சொன்னார், ''எங்களைத் தனியேவிடு, தொந்தரவு செய்யாதே வள்ளி; என்னோடு சில விருந்தினர்கள் இருக்கிறார்கள்.''

அந்தப் பசு தன் தலையைக் கீழ்ப்படிவாக அசைத்து, நன்றியுடன் அவரின் கட்டளைக்குப் பணிந்து வெளியே சென்றது. அதன்பின் சுவாமி தன் கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்து மீண்டும் அவரின் தனிப்பட்ட வேறு ஒரு உலகத்தில் அவர் மூழ்கினார். இந்த கண்மூடிய நேரத்தில் யோகர்சுவாமி என்ன செய்து கொண்டிருப்பர் என என்னுள் ஆவல் உண்டாயிற்று. அவர் தியானம் தான் செய்கிறாரோ என்று ஆச்சரியமுற்றேன். நான் இதுதான் கேள்வி கேட்கச் சரியான தருணம் என எண்ணிய பொழுது, அவர் உடனே பேச ஆரம்பித்தார்!

இந்த மரங்களைப் பார். இந்த மரங்கள் தியானம் செய்கின்றன! தியானம் என்பது அமைதியாகும். நீ எப்பொழுது உனக்கு ஒன்றும் தெரியாது என்று உணர்கிறாயோ, அப்பொழுது தான் நீ உண்மையாகத் தியானம் செய்கிறாய். இந்த உண்மையே அமைதிக்கான சரியான அத்திவாரமாகும்; அமைதியே தியானமாகும்.

சுவாமி ஆர்வமுடன் குனிந்து சொன்னார், ''நீ கட்டாயம் எளிமையாக இருத்தல் வேண்டும். உன் உள்ளுணர்வுக்கு நீ முற்றிலும் நிர்வாணமாகத் தெரியவேணடும். எப்பொழுது உன்னை ஒன்றுமற்றதாக ஆக்குகிறாயோ --- எப்பொழுது உனது நான் மறைந்து விட்டதுவோ --- எப்பொழுது நீ சூனியமாகி விட்டாயோ --- அப்பொழுது நீயே உனக்குக் கடவுள் ஆகிவிட்டாய்! ஒன்று மில்லா மனிதனே கடவுளை உணர்கிறான்; கடவுள் என்பது ஒன்றுமில்லை; ஒன்றுமில்லை என்பதே எல்லாமாகும். நான் ஒன்றுமில்லை, நீ பார்! நான் ஒரு பிச்சைக்காரன்; நானே எல்லாவற்றிக்கும் சொந்தக்காரன். எனவே ஒன்றுமில்லை என்பது எல்லாமேயாகும். புரிந்துகொள்!''

எனது நண்பர் கேட்டார்; ''இந்த ஒன்றுமில்லாத நிலைபற்றி சொல்லவும்?'' உண்மையாக நீ ஒன்றிலும் விருப்பமில்லா நிலையாகும். இது, உண்மையாக உனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லும் நிலையாகும். இந்த ஒன்றுமில்லா நிலைக்கு நீ ஒரு முயற்சியும் செய்ய விரும்பவில்லை என்றும் பொருள்படும்.

இதிலிருந்து நான் எதிர்பார்த்தது, சுவாமியின் இந்த, ''ஒன்றும் தெரியாது'' என்பது, ''தூய நிலை''; இது ''தூய நிலையாவது'' என்பதிலும் முற்றிலும் மாறானது என்று.

''நீ நினைக்கிறாய் உனக்குத்தெரியும் என்று; ஆனால் உண்மையில் எப்பொழுது உன்னைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிகிறதோ, அப்பொழுது நீயே உனது கடவுளாகிறாய்.'' என்று சுவாமி சொன்னார்.

சுவாமி அடிக்கடி இந்த மௌன நிலையை மறைமுகமாகச் சொல்லியுள்ளார். அவரின் முழுவாழ்வும் இதுதான் என்ற வகையில் பேசியுள்ளார். இந்தச் சமாதி நிலைபற்றி அனுபவப்படாதவர்கள் எவருக்கும் எந்த மாதிரியான விளக்கமும் ஒரு சுருக்கமான கருத்தாக மட்டுமே தெரியும். சுவாமியின் முன்னிலையில் ஒருவர் பேரானந்தத்தினை ஒரு நொடிப்பொழுதேனும் அனுபவிக்க முடியும். இது சுவாமியின் ஆத்ம உணர்வு (consciousness) விரிவடைந்து தன் முன்னிலையில் இருப்பவர்களுக்கும் விரிவதால் ஏற்படுகிறதா அல்லது இந்த விவரிக்க முடியாத உயர்நிலை

*அனுபவம் அல்லது அமைதியான பேரானந்தம் அல்லது சமாதி என்பன சுய ஏமாற்றத்தின் (self - deception) அடிப்படையில் உண்டாவதா என்பது இலகுவில் தீர்மானிக்க முடியாத விடயமாகும்.*

*அநேகமாக சுவாமி கூறியதெல்லாம் ஆச்சரியமாக மிகவும் எளிமையாக இருந்தாலும்; அந்த கூற்றுக்களின் நடைமுறை தாக்கங்களை எல்லோரும் தற்காலிகமாக மறந்துவிடுவார்கள்!*

*ஒருசில கணத்தின்பின், வேறு ஒரு கேள்வியும் கேட்காமல் எனது மனதின் தனித்தன்மையை உறுதி செய்யும் வண்ணம், சுவாமியின் கூற்றுகளை என் மனதில் அலசிப்பார்த்தேன். இந்த மவுனநிலை என்பது தெய்வத்தின் கருணையால் உண்டாவதா? இந்நிலைக்கு ஒருவர் தன்னைத்தானே தூண்டலால் அடையமுடியுமா? அல்லது இந்நிலை தற்செயல் நிகழ்வாகப் பிறமுயற்சியின் தூண்டலற்று நிகழ்வதா? இந்த மவுனநிலையை தூண்டும் முயற்சி அதே நேரத்தில் மறுதலையாக எமது அகம்பாவத்தையும் தூண்டிடாதா? என்று என்னுள் கேள்விகள் எழுந்தன!*

*எனது எண்ண ஓட்டங்களை அறிந்த சுவாமி, எனது சந்தேகங்களைத் தீர்க்க உடனடியாக எனக்கு உதவுவதற்காக, மறக்கமுடியாத ஆற்றல் மிக்க கருத்தினைக் கூறினார். ''எப்பொழுது, நீ எதையும் பெறவோ இழக்கவோ இல்லை என்ற நிலையை உணரும்பொழுது தான் மவுன நிலை உருவாகும்.''*

*எங்களது, சம்பாசணை மிகவும் சுவைமிகுந்ததாக மாறும் பொழுது, ஒரு மனிதர் குடிலுக்குள் வந்ததால் தடைப்பட்டது. அந்த மனிதர் சுவாமியின் தீவிரபக்தர். அவர் ஒரு தீபத்தை ஏற்றினார், மல்லிகைப் பூக்களை நிலத்தில் வைத்து, சுவாமியை அந்த குளிர்ந்த சிமெண்ட் தரையில் வீழ்ந்து வணங்கி, பின் சுவாமியின் பாதங்களை முத்தமிட்டார்.*

*சுவாமி, ''அடி முட்டாள்! இது ஒன்றும் பலிபீடம் இல்லை! நீ என்னைக் கும்புடுகிறாயா அல்லது உன்னைக் கும்புடுகிறாயா? ஏன் இன்னொருவரைக் கும்புடுகிறாய்?'' எனக் கர்ச்சித்தார்! அந்தப்*

பரிதாப மனிதர் மிகப்பக்குவமாகப் பின்வாங்கி அக்குடிலின் மூலையில் போய் நடுங்கியபடி நின்றார்.

சுவாமி தொடர்ந்தார், ''மற்று ஒருவரை வணங்குவதன் மூலம் நீ கடவுளைக் காணமுடியுமா?'' தீபமேற்றல், மலர்கள் அர்ப்பணித்தல் போன்ற முட்டாள் தனமான சிறுமையான காரியங்களால்--- கையூட்டல் கொடுப்பதன் மூலம் கடவுளைக் காணமுடியுமா?

இப்படியான சந்தர்ப்பங்களில், யோகர்சுவாமியின் கண்டிப்புகள்; அவரது குருமுறைக்கான கற்பித்தல் அல்லது ஒரு ஆத்மீக ஆசிரியருக்கான பல சீடர்கள் எதிர்பார்ப்பது போல் இல்லாமல், வேறு விதமாக இருக்கும்! இவை, மனிதர்களின் முட்டாள்தனமான தவறுகளைப் பார்த்து அதன்மேல் சாதாரண தற்செயலான வெளிப்பாடுகளாய் வருபவை.

உண்மையாக, யோகர்சுவாமி தனது வார்த்தைகளைப் பதிவு செய்ய வேண்டாம் என்று தடுப்பார். அது ஒன்றும் அவ்வளவு முக்கியத்துவம் உடையதல்ல என்றும் கூறுவார். அவர் இப்படியான சந்தர்ப்பங்களில் சொல்லும் வார்த்தைகள், அந்தந்த தனிப்பட்ட திரும்பவராத சூழ்நிலைகளைப் பொறுத்துவரும், அந்த நேரத்திற்குரியவையாகும்.

யோகர்சுவாமி தன்னை வணங்கிய அந்த மனிதரைப் பார்த்து, அவரின் செயலை ஏற்கவில்லை என்ற கருத்தினை உணர்த்தும் வண்ணம் கையசைத்து. பின் தன் நடுங்கியகைகளை எடுத்துத் தன் இதயத்திற்கு எதிரே பிடித்து அறிவுறுத்தும் சைகையுடன் சத்தமாகச் சொன்னார், ''பார், இது இங்கே இருக்குது! கடவுள் இங்கே இருக்கிறார்! இது இங்கே இருக்குது!'' என்று.

சுவாமி பின் சிறிதுநேரம் கண்மூடியபடி இருந்தார். இப்படியான இடைவெளிகள் பெரும்பாலும், தான் சொன்ன வார்த்தைகளின் கருத்துக்கள் அங்கு கேட்பவர்களின் மனதில் மெதுவாக உள்சென்று இறங்கும்படி செய்வதற்காக என்று உணரப்படும். அவர் கண்ணை மூடித் தியானத்தில் அமரும்போதெல்லாம் ஒரு வித்யாசமான ராஜகம்பீரமான புத்தர் போன்ற கண்ணியம் தோன்றும் - வளையாத முள்ளந்தண்டுடன், கால்கள் குறுக்காக அமர்ந்த இருக்கையில்

தூங்குவதுபோல் தெரியும், ஆனால் உண்மையில் அது மிகவும் அதிஉயர் விழிப்பு நிலையாகும்.

நேரம் குறைவு ஆனால் பாடமோ பெரிது! (The time is short but the subject is vast) என்று சுவாமி அதீதிவீர ஈர்ப்புடன் சொன்னார். இந்த அதிர்ச்சிகரமான வாக்கியம் என்பது, கடவுளை அறிந்து கொள்வது என்ற பாடமோ அல்லது உண்மையை அறியும் பாடமோ மிகவும் பெரிது! ஆதலால், ஒருவருக்குரிய நேரம் குறைவானது! எனவே இதனை அதிமுக்கியமற்ற செயல்களில், அதாவது சம்பிரதாயங்கள், விழாக்களில் வீண் செலவு செய்யவேண்டாம், எனவும் எடுத்துக் கொள்ளலாம்.

என்னுளே ஒரு கேள்வி; அதைக்கேட்க நான் மிகவும் தயங்கினேன். ஆனால் அது மிகவும் முக்கிய கேள்வியாக அந்த நேரத்தில் தோன்றியது. ''எப்படி மனவழுத்தத்தை வெல்வது?'' என்பதே அக் கேள்வி. இக்கேள்வி என் மனத்தில் உதித்தவுடன், சுவாமி உடனடியாகப் பின்வரும் மறுமொழியைக் கூறினார்.

இப்பொழுது, மனவழுத்தம் என்றால் என்ன? நீ அவநம்பிக்கையைத் தானே கருதுகிறாய்? நம்பிக்கை அவநம்பிக்கை இரண்டும் ஒன்றே! இது இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கமே! நீ அவநம்பிக்கையிலும் பார்க்க நம்பிக்கையுடைவனாக, இருந்தால் என்ன; நம்பிக்கையிலும் பார்க்க அவநம்பிக்கையுடையவனாக இருந்தால் என்ன; இரண்டு நிலைகளிலும் நீ சிறந்து இல்லை. நம்பிக்கை, அவநம்பிக்கை என்பதன் விளைவு முறையே மகிழ்ச்சி, துக்கம் என்ற வித்தியாசமான விளைவுகளின் மூலம் நீ வாழ்க்கையைப் பார்க்கிறாய். ஆனால் வாழ்க்கை என்பது இதுவுமல்ல அதுவுமல்ல. நீ வாழ்க்கையை அது எப்படி இருக்கோ அப்படியே பார்! இந்த வேறுபட்ட இருவேறு கோணங்களில் பார்க்காதே! இந்த இரட்டைத்தன்மையில் பார்ப்பதை விட்டுவிடு! அப்பொழுதுதான் வாழக்கை நம்பிக்கை அவநம்பிக்கை இரண்டும் அற்றுவிடும்!

இப்படியாக சுவாமி போதித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு வயதான அமெரிக்கன் பெண்மணி தனது காலணிகளை விரைவாகக் கழற்றிவிட்டு, உள்ளே வந்து தரையில் அமர்ந்து எங்களுடன் சேர்ந்து

கொண்டார். நன்கு பழகியவர்போல அங்குள்ள அனைவரையும் பார்த்துச் சிரித்தார், அதேபோல முதலே பலதடவைகள் இந்தக் குடிலுக்கு வந்தவர்போல சுவாமியையும் வணங்கினார்.

யோகர்சுவாமி அவரிடம் சற்று விளையாட்டாகக் கேடடார்; ''நீங்கள் என்ன செய்தீர்கள்?''

அதற்கு அப்பெண்மணி சொன்னார்; ''நான் பக்கத்தில் உள்ள இந்துக் கோயிலுக்குப் போனேன், அங்கு மிகவும் அமைதியாக இருந்தது.''

சுவாமி, சிரித்தபடியே கேட்டார்; ''நீ அந்தக் கல்லுக் கோயிலைச் சொல்கிறாயா?''.

''நீ அந்தக் கல்லுக்கோயிலில் உள்ள கல்லுக்கடவுளையா போய்க் கும்பிட்டாய்?''.

''இங்கு ஒரு கோயில்தான் உண்டு; அந்தக் கோயிலும் உன் உள்ளேயே உண்டு''.

''கடவுளைக் காண்பதற்கு; நீ இந்தக் கோயிலைப் பற்றி அறிய வேண்டும்''.

''இங்கு வேறு கோயில்கள் இல்லை; ஒருவரும் உன்னைக் காப்பாற்ற முடியாது!''.

அதற்கு அப்பெண்மணி கேட்டார்; ''கிறித்து, புத்தர் பற்றி என்ன? அவர்கள் எங்களுக்கு உதவமாட்டார்களா?'' அவரின் செய்கைகளில் இருந்து அவர் கேட்ட கேள்வியின் நோக்கம்; பதிலை அறிய வேண்டும் என்றில்லாமல், சுவாமியின் விடையினால், அவரின் புண்பட்ட சமய நம்பிக்கையில் உண்டான தாக்கத்தின் எதிர் விளைவு!

புத்தரும், கிறித்துவும் தங்கள் முயற்சியின் மூலம் தங்களைத்தான் காப்பாற்றினார்கள். அதன் பின்னர் வந்த மதகுருமார்கள் குப்பைகளை எடுத்துக் கொண்டு அதனைத்தான் பிரச்சாரம் செய்கிறார்கள். இது குருமாரின் முட்டாள் விளையாட்டு! அவர்கள் ஒவொருவரும் தங்களுக்கான சமயவியாபாரம் செய்கிறார்கள். எனவே, உனக்கு உதவி செய்கிறோம் என்று சொல்பவர்கள் யாரையும் நீ நம்பாதே! ஒருவரும் உதவி செய்யமுடியாது;

ஏனென்றால் ஒருவராலும் உதவ முடியாது. வேறு ஒருவர் உனக்கு வழியைக் காட்டிடலாம் ஆனால் நீ தான் நடந்து போகவேண்டும்.

யோகர்சுவாமி தொடர்ந்து பேசினார்; நாங்கள் அவரை மிகவும் மெய்மறந்த நிலையில் கவனித்து, அவரின் ஒவ்வொரு சொல்லையும் அசைபோட்டுப் பார்த்தோம்; அந்தச் சிறுகுடிலில் செலவிட்ட ஒவ்வொரு கணநேரத்தையும் பெரும் பொக்கிசமாகக் கருதினோம். பலர் அந்தக் குடிலின்வாசலில் நின்றார்கள், அதேநேரத்தில் அந்தச் சிறுகுடில் விரைவாக அளவுக்கதிக மக்களால் நிரம்பியது.

சுவாமி கேட்டார், ''நீங்கள் எல்லோரும் ஏன் என்னைக் காண வருகிறீர்கள்?'' இந்தக் கேள்வி அங்கு பிந்திவந்தவர்கள் அல்லாது, அங்குள்ள யாவரையும் நோக்கிக் கேட்கப்பட்டது.

''நான் உங்கள் எல்லோரையும் போல ஒரு முட்டாள். நானும் தேடுகிறேன், இருட்டில் தடவுகிறேன், புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன். என்னால் உங்களுக்கு உண்மையாக உதவ முடியாது. நான் உங்களுக்குத் தருவதற்கு இங்கு ஒன்றும் இல்லை. இங்கிருந்து உங்களால் ஒன்றையும் எடுத்துச்செல்ல முடியாது. ஒருத்தரும் நான் ஒரு முட்டாள் என்பதை நம்பவில்லை; நான் ஒரு முட்டாள்''.

உடனே அந்த அமெரிக்கன் பெண்மணி பொறுமை இழந்து, சுவாமியின் பொய்யான அடக்கத்தினை மறுத்துச் சொன்னார், ''ஆனால் நீங்கள் அப்படியில்லை'' என்று. சுவாமி சொன்னார்; ''அப்படியே, நான் ஒரு வகையான வித்தியாசமான முட்டாள்-தனது முட்டாள்தனத்தை விரும்பி ஏற்றுக்கொள்கிற ஒரு முட்டாள்.''

யோகர்சுவாமி 1964ல் மறைந்தார். ஆனால் அவரைச் சந்தித்தவர்களுக்கு, அவரின் சாதாரணமான தன்மையாக வழங்கப்பட்ட கருத்துக்கள் எப்பொழுதும் ஒரு வாழும் உண்மையாக, உற்சாகமூட்டும் மூலமாக இருக்கும். ஒரு வாழும் குருவுடன் நடந்த மிகவும் சிறந்த நேர்காணல் அனுபவமானது, பல நூல்களில் சொல்லப்பட்ட வயதிலாத ஆத்மீக-தத்துவ அறிவுகளை வாசித்து அறியும் அறிவிலும்பார்க்க மிகவும் மேலான அறிவூட்டக்கூடியது.

மிகவும் வித்தியாசமான, முரண்பாடான, குழப்பமான மனிதரின் வாழ்வு இது! அவரை ஏதாவதொன்றாக எடுப்பதும், அவரை நாங்கள் அறிந்துள்ளோம் என்பதும் எங்களது பெரிய முட்டாள் தனமாகும்.

சுசுநாகா வீரபெருமா, "Yoga Swami: The Strange Saint of Sri Lanka" என்ற இன்னொரு கட்டுரையில் யோகர்சுவாமியின் சுருக்கவரலாற்றை பின் வருமாறு குறிப்பிடுகிறார்:-

புகழ்பெற்ற ஞானியும் ஆத்மீககுருவுமான யோகர்சுவாமியின் ஆரம்ப கால வாழ்வுபற்றி மிகவும் குறைந்த தகவல்களே கிடைத்துள்ளன. (1872 -1964). இவர் சிறுகுழந்தையாக இருந்தபொழுதே தன் தாயை இழந்துவிட்டார். அதன் பின்னர் இவர் தன் சிறியதகப்பனாருடன் வசிப்பதற்காக கொழும்புத்துறை அனுப்பப்பட்டார். அவர் தனது மாமியாரால் சைவ நம்பிக்கை ஊட்டப்பட்டார். முதலில் இவர் தமிழ் பாடசாலையில் ஆரம்பித்து, பின்னர் கிறித்தவ புனித பற்றிக் கல்லூரியில் (St.Patric College, Jaffna) கல்விபயின்றார். அங்கு கிறித்தவத்துக்கு அறிமுகம் பெற்றிருக்கவேண்டும். இவர் பாடசாலையில் ஏழு அல்லது எட்டாம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை என்றாலும; தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் திறமை பெற்று இருந்தார்.

இவர் கிளிநொச்சியில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில், களஞ்சியஅறைப் பொறுப்பாளராக மிகவும் திறமையாக, கடமையுணர்ச்சியுடன் வேலை செய்தார். அந்தக்காலத்தில் தன் எஞ்சியநேரங்களை தமிழ், சமக்கிருதம் போன்றவற்றில் உள்ள சுலோகங்கள், சமயப்பாடல்கள் என்பவற்றை ஞாபகம் செய்வதிலும், தியானத்திலும் செலவிட்டார். இவர் தன் பிற்காலங்களில் அவற்றினை மிகவும் சமய உற்சாகத்துடன் விரும்பிப் பாடுவார்.

1897ம் ஆண்டு, மேற்குலகில் இந்துசமய விற்பன்னர் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டமொன்றில் செய்த சொற்பொழிவினைக் கேட்டார். அதிக நிகழ்ச்சிநிரல்கொண்ட சுவாமி விவேகானந்தர், தனது சொற்பொழிவை ஆரம்பிக்கும்

*பொழுது ''நேரமோ குறைவு, பாடமோ பெரிது'' (Time is short but subject is vast) என்று கூறியவுடன், யோகர் அந்த வசனத்தின் உட்பொருள் நன்கு புரிந்ததால், உடனேயே அங்கிருந்து வெளியேறிவிட்டார். யோகர் உடனேயே கடவுள்பாடம் மிகவும் அளவற்றது, முழு வாழ்நாள்கூட கடவுளை உணர்வதற்குப் போதாது என்று உணர்ந்தார்.*

*யோகர் தன்குருவை ''செல்லப்பா'' என்று அழைப்பார். அவர் அழுக்கான கந்தல் உடை அணிந்திருப்பார், பாரம்பரிய சந்நியாசிகள் போன்று பிச்சை எடுத்து வாழ்ந்தவர். பலரும் செல்லப்பாவை ஒரு வித்தியாச மனிதராகத்தான் பார்த்தார்கள். அவர் புனிதமும், மிகவும் விசித்திரத்தன்மை கொண்டவராக, தம்மை அண்டுபவர்களைக் கல்லால் எறிந்தும், கெட்டவார்த்தைகளால் பேசியும் கலைப்பார். மிகவும் குறைவான நெருங்கிய பக்தர்கள் மட்டும் அவரை அணுகும் தைரியம் பெற்றனர். செல்லப்பா ஏன் ''விசர் மனிதர்'' எனப் புகழ் பெற்றார் என்பதை விளங்கிக்கொள்வது சுலபம். ஆனாலும் அவர் உண்மையில் ஆத்மீகத்தில் மிகவும் உயர்நிலையில் இருந்த ஆத்மாவாகும்.*

*செல்லப்பா, யோகரின் நோக்கம், உண்மையான ஈடுபாடு, பொறுமை என்பவற்றினை மிகவும் பல கடுமையான வழிகளில் சோதித்து பார்த்தவர். இருவரும் சேர்ந்து உணவு சமைத்துச் சாப்பிடுவார்கள். செல்லப்பா, சிலநேரங்களில், சாப்பிடுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் சமைத்த உணவுள்ள பானை சட்டியை தூக்கிப்போட்டு துண்டுகளாக உடைப்பார். அது மட்டுமல்லாமல், சில நேரங்களில் ஒரு நல்ல குளியல் எடுத்துவிட்டு வருவோம் வா என்று சொல்லி யோகரைத் தகிக்கும் வெய்யிலில் பல மைல்கள் நடத்திச் சென்று குளிக்காமல் பின் திரும்ப அப்படியே அழைத்து வருவார். செல்லப்பா முன்னிலையில், யோகர் சில சமயம் தொடர்ச்சியாக நாற்பது நாட்கள் வரை ஆத்மீகப்பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். செல்லப்பாவின் சில பண்புகளை, யோகரும் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.*

*யோகர்சுவாமி, பனை தென்னை நிறைந்த கரைகளையுடைய இலங்கை தீவின் நீள - அகலம் எங்கும், அலைந்து திரியும் ஒரு*

துறவிபோலச் சென்றுள்ளார். பல கோவில்களையும், புனிதத் தலங்களையும் சென்று தரிசித்து பின்னர் கடைசியாக யாழ்ப்பாணம் திரும்புவார். இவர் *1934 -1940* ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிற்கு யாத்திரை போனார். ஒருமுறை இவர் இந்தியாவில் புகழ்பெற்ற திருவண்ணாமலையில் வசித்த, ரமணமகரிசி அவர்களையும் சென்று தரிசித்தார். யோகர்சுவாமி, தான் ரமண மகரிசியை, எந்த ஒரு விருப்புமில்லாமல் சென்று, அங்கு சும்மா போய் இருவருக்கும் இடையில் ஒரு பேச்சும் அற்று அவர் முன்னிலையில் ஒரு மணிநேரம் அமர்ந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார். யோகர், ரமணர் ஒரு ''மகா வீரன்'' (Great Hero) எனக் கூறியுள்ளார். யோகரினதும், ரமணரதும் போதனைகள் இரண்டும் பெரும்பாலும் ஒன்றாகவே இருந்தன. விசேடமாக, ''சும்மா இரு'', ''அதுவாய் இரு'', ''நீயே அது'', ''வெறுமனே இரு'' என்பன. இது, சகஜசமாதியில் இருக்கும் ஒரு விழிப்படைந்த மனிதனின் சாந்த அமைதி நிலையாகும். விழிப்படைந்தநிலை, தெரிவில்லாதது, முயற்சியற்றது. அது தான் ''சும்மா இரு'' (Summa iru), ''அமைதியாக இரு'' (Be Still) என்பதன் பொருள். இதை விவரிப்பதற்காக, ரமணரும், யோகரும் பைபிளில் உள்ள இந்த வசனத்தை விரும்பி குறிப்பிடுவார்கள், ''அமைதியாக இரு, நானே கடவுள் என உணர்'' (Be still, and know that I am God) (Psalms 46:10).

யோகர்சுவாமி தனது விருப்பமான பழமொழிகளை வைத்திருந்தார், இவற்றினைத் தனது பக்தர்களோ அல்லது புதுமுகங்களோ அவரை நாடும்பொழுது திரும்பத்திரும்பக் கூறுவார். தனது குருவான செல்லப்பாவிடம் இருந்து முதலில் இந்த வரிகளைக் கற்றுக்கொண்டார். இவை மகாவாக்கியங்களாக அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு ஆத்மீக உண்மைகள், இக்காலத்தில் அடிக்கடி சொல்லப்பட்டாலும், இவைகள் தான் யோகர்சுவாமியின் போதனையின் சாறாகும்:-

**1. ஒரு பொல்லாப்பும் இல்லை :-**

இங்கு ஒரு தீமையும் இல்லை. ஒன்றும் தவறு இல்லை. நன்மையும், தீமையும் மனிதர்களால் உருவாக்கப்படட வித்தியாசங்கள்.

பரிபூரணத்தின் பார்வையில் அங்கு நல்லதும் இல்லை தீயதும் இல்லை. நாங்கள் ''தீமை'' என்று அழைப்பது எல்லாம் லீலையின் ஒரு அம்சம் அல்லது கடவுளின் நாடகம். அவரின் இந்த முடிவையும் செயலையும் யாரும் அறியமுடியாது. ஒருவர் மோசமான அல்லது ஆட்சேபிக்கத்தக்கது என்பது, உண்மையில் தெய்வீக நோக்கமாகும், அது ஒரு மாறுவேடத்தினால் ஆன ஆசீர்வாதமாகும்.

**2. முழுதும் உண்மை:-**

எல்லாம் உண்மையாகும். ஒரு முற்றிலும் உணர்ந்த ஞானி, முழு உலகையும் இறைவனின் வெளிப்பாடாகக் காண்கிறார். அவர் உலகினில் இருந்து தனிப்பட்டவர் அல்ல, அவரே பிரபஞ்சமாவார். இந்த உருவாக்கப்பட்ட பிரபஞ்சம், வெளிப்படுத்திய, வெளிப்படுத்தப்படாத இரண்டும் உண்மையில் படைப்பவரின் விரிவாக்கமே. எனவே ஒரு ஜீவன்முக்தர், கடவுளை எல்லா மரங்களிலும், ஒவ்வொரு மண்துகளிலும், ஒவ்வொரு உயிரினத்திலும், ஒவ்வொரு உயிரில்லா பொருளிலும் காண்கிறார். கடவுள் தான் உருவாக்கியதில் இருந்தும் மாறுபட்டவர் அல்ல.

**3. நாம் அறியோம்:-**

எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எங்களது மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய மனதினால், நாம் பிறக்கவிருப்பதையும், இன்னும் படைக்கப்படாதவை பற்றியும், எல்லையற்றவை பற்றியும் அறியமுடியாது. எங்களது மனம் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு அளவுகோல், அது சாதாரண இயல்பினை அறியும் திறன் மட்டும் உடையது. ஆனால் மனம் கடவுளைக் கண்டறிய முடியாது. மேலும், நாங்கள் கடவுளின் வழிகளை அறியும் பக்குவம் அற்றவர்கள்.

**4. எப்பவோ முடிந்த காரியம்:-**

இந்த நிகழ்வு எப்பவோ முற்றுபெற்றுவிட்டது. இது பல நெடுங்காலத்தின் முன்பேயே முடிந்து விட்டது. எல்லாம் முன் நியமப்படி ஆகிவிட்டது. மனிதன் நினைக்க விரும்பலாம், தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்கலாம் என்று, அத்துடன் பொது

அறிவாக மனித விவகாரங்களைத் தான் மாற்றமுடியும் என்று. மனிதன் தன் கர்வத்தினால் தன் எதிர்காலத்தை மாற்றி அமைக்கலாம் என்று நினைப்பான். ஆனால் மனிதன், கடவுளின் கையில் உள்ள ஒரு சிறு ஆயுதமே! கடவுள் ஒருவரே கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவர். நான் என்னும் நினைப்புள்ள மனிதன் தனக்கு சுதந்திரம் உண்டென எண்ணி பெருமிதம் கொள்ளலாம்; உண்மையில் அவன் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியின் கைபொம்மை ஆவான். ஒருவன் இந்த உண்மையை ஏற்றுத் தன்னைக் கடவுளிடம் சரணடைவதே உத்தமம் ஆகும்.

**சுசுநாகா வீரபெருமா** ஒரு இலங்கையர் என்றாலும், தன் பெரும்பாலான காலத்தை, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழ்ந்துள்ளார். லண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரமும்-- அரசியல் விஞ்ஞானமும் என்ற பிரிவில் பட்டமேற்படிப்பு முடித்தபின், நூலகர் தேர்விலும் தேர்ச்சிபெற்றார். அதன் பிறகு லண்டனில் உள்ள பிரிட்டிஷ் நூலகத்தில், ஒரு உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தார். பின்னர் அடிலெய்டு என்ற இடத்தில உள்ள தெற்கு ஆஸ்திரேலியாவின் பாராளுமன்ற நூலகர் ஆனார்.

பிற்காலத்தில் இவர் ஒரு சிறந்த எழுத்தாளராக பலவகையான வேறுபட்ட தலைப்புகளில் எழுதியுள்ளார். இவர் கற்பனை, கற்பனை இல்லா எழுத்துக்கள் இரண்டிலும் திறம்பட எழுதியுள்ளார். இவர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி பற்றி, அவரின் போதனைகள், நூலியல், விளக்க உரைகள் உட்பட ஏழு நூல்கள் எழுதியுள்ளார். இவை மிகவும் பிரபல்யம்பெற்று வேறு பல மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டன. பெரும்பாலான இந்திய சமயங்கள் (Major Religions of India) என்ற நூலில் இந்தியாவில் உருவாகிய இந்து சமயம், பௌத்தம், ஜெயினிசம், சீக்கியம் போன்றவற்றிற்கு மிகவும் சிறந்த அறிமுகம் எழுதியுள்ளார். அத்துடன் இவர் பௌத்தம் பற்றியெழுதிய நூல்களும் பெரும் வரவேற்பு பெற்றவை.

இவர் ஒரு ஆசியா - இலங்கை தேசத்தவர் என்றாலும், உள்ளத்தில் ஒரு உலகப் பிரசையாவர். காந்திய வழியில், போர்களால் சிதறுண்ட இந்த உலகில், சமாதானத்துக்காகப் பாடுபடுபவர். உயிரினங்களின் மேலுள்ள அபிமானத்தால் இவர் ஒரு சைவ உணவாளர் ஆகவும், பிராணாயாமப் பயிற்சிகள் மூலம் சக்திபெற்று ஒரு யோகியாக வாழ்கிறார். இவர் ஒரு எழுத்துக்களின் பிரம்மா, வாழ்நாள் மாணவன்; புகழாலும் பொருளாலும் ஒரு பாதிப்பும் அடையாது தனது மன, மெய் வேலைகளைப் பெரிதும் விரும்புபவர்.


இந்த பல்முக மனிதர், ஓர் சூழலியல் ஆர்வலர், இயற்கைத்தாயின் அபரிதமான அளப்பெரும் அழகினை ஆராதிப்பவர். இவர் பிரான்சில் உள்ள ஒரு அமைதியான இடைக்காலக் கிராமம் ஒன்றில் கதயோகம், தியானம், எழுத்து, இயற்கைத்தோட்டம் போன்றவற்றில் ஈடுபட்டுவருகிறார்.

இவரின் மனைவியின் பெயர் கிளாடியா வீரபெருமா, சுவிற்சர்லாந்து பெர்ன் நகரில் 1961ம் ஆண்டு பிறந்தவர். இவர் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், ஜேர்மன், சமக்கிருதம் ஆகியற்றைப் படித்து அதில் புலமை பெற்றவர். இவரின் முனைவர் பட்டத்துக்கான ஆராய்ச்சி ''கிறித்துவம் இசுலாம் ஆகியவற்றின் பிராத்தனையின் எதிர்பார்ப்பு'' என்பதாகும், இவரும் ஒரு மிகவும் சிறந்த படைப்பாற்றல் கொண்ட ஓர் ஓவியரும் - எழுத்தாளரும் ஆவார். தன் கணவனின் பல புத்தகங்களை ஜேர்மன் மொழியாக்கம் செய்துள்ளார். தற்பொழுது இவர் புத்தரின் போதனைகள். தூய பௌத்தம், ஜென் போன்வற்றில் ஆத்மீக திருப்தியுடன் தன் கணவனுடன் பிரான்சில் வாழ்கிறார்.

**சுசுநாகா வீரபெருமா எழுதிய நூல்களின் பட்டியல் இங்கு தரப்பட்டுள்ளது:-**

*Being Blissful As the Years Pass By*
*Enrich Your Inner Life*
*Major Religions of India*
*Divine Messengers of Our Time*
*The Pure in Heart*
*Miraculous Waters of Lourdes*

*Servant of God Swami Ramdas*
*J. Krishnamurti as I Knew Him*
*Sayings of J. Krishnamurti*
*Living and Dying from Moment to Moment*
*That Pathless Land*
*Bliss of Reality*
*Jiddu Krishnamurti: A Bibliographical Guide*
*The Art of Persuasion*
*Some Ethical Aspects of Vegetarianism*
*Does Buddhism Condone or Condemn Meat Eating?*
*Why Suffer from Depression?*
*Meditations on the Practice of Meditation*
*Modus Operandi of Meditation*
*The Art of Real Meditation*
*Nothing either Inside or Outside*
*Be Mindful Always*
*Wars Begin in the Minds of Men*
*In Praise of Pacifism*
*Buddhist Blueprint for World Peace*
*The Buddha Denounced the Destruction of Life*
*My Philosophy of Life*
*Why Be Possessed by Possessions?*
*Swimming in the Sea*
*Saida of Marrakesh : a Novella*
*Sunil the Struggling Student : a Novel*
*Muni An Incredible Buddhist Boyhood: a Novel*
*The Stranger and Other Stories*
*The Holy Guru and Other Stories*
*Mysterious Stories of Sri Lanka*
*The Homeless Life and Other Stories*
*The Pleasures of Life: a One-Act Play*



# சிவாய சுப்ரமுனியசுவாமி

## *Sivaya Subramuniyaswami (1927 - 2001)*

1949ம் ஆண்டு புகழ்மிக்க சித்தயோகியும், சிவனைவழிபடுபவருமான யாழ்ப்பாண ஞானகுரு யோகர்சுவாமியிடம் இருந்து சந்நியாச மாற்றம் பெற்றார். யோகர்சுவாமி 20ம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த ஒரு பெரும் விசித்திரமான ஞானியாக விளங்கியவர்.

இவரின் இயற்பெயர் றோபேர்ட் கன்சென் (Robert Hansen). 5 ம் திகதி ஜனவரி 1927ம் ஆண்டு ஒக்லாண்ட, கலிபோர்னியாவில் பிறந்தவர். இவருக்கு கரோல் கிரிஃபின் என்ற ஒரு சகோதரி கலிபோர்னியாவில் வாழ்ந்துள்ளார். இவர் தனது ஆறாவதுவயதில் இருந்து தன்னை ஒரு வெளிப்புற ஆகர்சணசக்தி ஒன்று ஆக்கிரமித்து அது தன்னுள் தொடர்ந்து வலிமை கொண்டுவிட்டது எனக்கருதினார்.

இவர் சிறுவயதில் தன் பெற்றோரை இழந்து அனாதையானபின் தனது தாயாரின் நண்பரினால் வளர்க்கப்பட்டார். றோபேர்ட்டின் தாய்தந்தையின் குடும்பநண்பி ஒருவர் மேற்கத்திய நடனங்களில் ஈடுபாடு கொண்டவர். அவர் பின்னர் இந்தியநடனத்தில் ஆர்வமுற்று, 1920ல், இந்தியாவிற்கு மைசூர் மகாராஜாவால் அழைக்கப்பட்டு, அங்கு அரண்மனையில் தங்கி, இந்திய

நடனங்களான பரதநாட்டியம், மணிப்புரி, கதகளி, யோகம், ஆன்மீக படிப்பினைகள் போன்றவற்றில் மிகவும் தேர்ச்சிபெற்ற ஒரு மிக அற்புதமான நடனஆசிரியர் ஆனார்.

றோபேர்ட்டுக்கும் இளவயதில் இருந்தே நடனத்தின் மீது அதீத நாட்டம் இருந்ததால்; இவர் இந்த பெண்மணியிடம் தனது நடனப் பயிற்சியைத் தொடங்கி, அவரிடம் இருந்து மேற்கத்திய, கிழக்கத்திய நடனங்கள், தியானம், விழிப்புநிலை, யோகா, இந்திய கலாச்சாரம், சங்கீதம், கலை, நாடகம் போன்ற எல்லாவகையான இந்திய வாழ்வியலை, தொடர்ந்து நான்கு வருடங்கள் முறையாகவும், அர்ப்பணிப்புடன் கற்றார். இக்கால இளம்பருவத்தில் இவர் முழுமுதற் கடவுளான சிவனைப்பற்றியும், ஆடல் தெய்வமான நடராசர் பற்றியும் அறிந்து அவரை வழிபடத் தொடங்கினார். தொடர்ந்து வேதாந்த தத்துவங்களில் ஈடுபாடு கொண்டு, சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள வேதாந்த சங்கத்தில், இந்திய சுவாமிகள் கொடுக்கும் விரிவுரைகளிலும் கலந்துகொண்டார். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை, அவரின் புத்தகங்களும், பிரசங்கங்களும் விசேடமாக அவரின் ''சந்நியாசியின் பாடல்'' என்ற கவிதை தன்னை மிகவும் கவர்ந்தன எனக்கூறியுள்ளார்.

இளம்வயதில் இவர் கிழக்கத்திய, மேற்கத்திய பாரம்பரிய நடனத்தில் எடுத்த பயிற்சியும், யோகாவினால் உருவான சீரொழுக்கமும், இவரை ஒரு நல்ல நடனர் ஆக்கியது. இதனால் இவர் சான் பிரான்சிஸ்கோ பலே நடனக்கம்பெனியில் சேர்த்து பலேநடனம் பயின்று பின் அதிலேயே 19 ம் வயதில் பிரதான நடனராகச் சேர்ந்தார். 20 வது வயதில், இரண்டாம் உலகப்போரின் பின்னர் இந்தியா செல்லும் முதல் கப்பலில் அங்கு பயணித்தார். 21வது பிறந்தநாளை கரை இறங்குவதற்கு சிலநாட்கள் முன்பு கப்பலில் கொண்டாடினார். பம்பாய் (இன்று மும்பை) துறைமுகத்தில் இறங்கி இந்தியா சென்றார். அங்கிருந்து தென்இந்தியா சென்று சிலமாதங்கள் அலைந்து பின் மார்ச் 1947 இலங்கை, கொழும்பு சென்றார்.

*இலங்கை விசயம் 1947 –1949*

*இவர் ஏறக்குறைய மூன்றுவருடங்கள் இலங்கையில் ஆத்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டார். இங்கு ஒன்றரை வருடம் தயானந்த பிரியதாசி என்ற ஓர் சிங்கள-பௌத்த ஆசிரியரிடம் தியானம், அமானுசம் (occultism) படித்தார். இந்த ஆசிரியர் 1930 மத்திய பகுதியில் அமெரிக்கா சென்று பல தேடுனர்களை ஆட்கொண்டவர், அவர்களில் ஒருவரான 'கிரேஸ் பர்ரோவுக்ஹ்ஸ்' என்பவர் இதனை ஒழுங்கு செய்தார்.*

*தயானந்த ஒரு சவாலான ஆசிரியராக; இளம் அமெரிக்கரை மிகவும் தாக்குதலான புதிய சிந்தனைகளும், தனிப்பட்ட சோதனைகளையும் கொடுத்து, இவரை ஒரு நேர்மறையாக உலகில் செயலாற்றும் கலையையும், ஒரு ஆத்மீககுரு எப்படித் திறமையாகச் செயல்புரிய வேண்டும் என்பதனையும் கற்றுக்கொடுத்தார்.*

*இவர் தியானப்பயிற்சிகளில் இறங்க முற்பட்ட போது, ஆசிரியர் இவரைக் கிராம மக்களுடன் சேர்ந்து உள்ளூர் அபிவிருத்திகளில் உதவி செய்யும் படி பணித்தார். இளம் தேடுனரான இவர் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு காரியத்தையும் திறம்பட முடித்தார். வந்த ஒரு சிலமாதங்களில் கண்டியில் கிராம சிறுவர்களுக்கு இரு பாடசாலைகளை அமைத்தார். மங்கிய நிலையில் இருந்த 'கண்டிய நடனத்தை' புத்துயிர் அளிக்க உதவி செய்தார். உள்ளூர் தச்சர்களுக்கு மின்சாரத்தில் இயங்கும் அரிவாள்களை அறிமுகம் செய்தார். அதே நேரத்தில் தனது பலே நடனக்குழுவுடன் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்து நடனநிகழ்ச்சிகள் நடத்தினார். இவர் இந்தப் புதிய மண்ணில் கண்டவை, அனுபவித்தவை எல்லாம் வியப்பு அளித்தன. இங்குள்ள மக்களின் அன்பு, விருந்தோம்பல், கலாச்சார ஈர்ப்பு என்பன இவரை மிகவும் கவர்ந்தது. இப்படியாக இரண்டு ஆண்டுகள் கழிந்த பின், இவை தன் இலங்கை வந்த குறிக்கோளான ஆத்மதேடுதலான, கடவுளை உணர்தல் என்ற தீராத வேட்கைக்குத் தடை எனத் தோன்றியதால், இச்செயற்பாடுகளில் இருந்து விலகி ஏதேனும் ஒரு குகையில் தங்கி தியானம் புரிய தீவிர ஏக்கம் கொண்டார்.*

*அத்துடன் பல புத்தகோவில்கள், மடங்களுக்கும் சென்று அவர்களின் வாழ்வுமுறைகள் பற்றி நன்கு அறிந்தார். இந்த அனுபவங்கள்தான் பின்னாட்களில் தனது சொந்த சந்நியாசிகள் மடத்தினை ஆரம்பித்து நடத்த உதவியது எனக் கூறினார்.*

*பின்பு ஒருநாள் 'அன்பகரா' என்ற தனது நெருங்கிய முசுலீம் நண்பரின் துணையோடு சென்று ''மஸ்தான்'' என்று அழைக்கப்படும் ஒரு முசுலீம் சுஃபி ஞானியை, தன் அடுத்த வழிகாட்டியை, ஜெய்லானி, குறகள, பலாங்கொடை, என்ற இடத்திலுள்ள குகையில் சந்தித்தார். இந்தக்குகை கொழும்பிலிருந்து 150 கிலோமீட்டர் தென்கிழக்கு திசையில் ஒரு தூரமான அடர்காட்டில் உள்ளது. இது இன்றுவரை ஒரு புனிதமான இடமாகக் கருதப்படுகிறது!. அது சுஃபி ஞானிகள் கூடும் இடமாகும். இப்படியான ஒரு இடத்தையே இவர் தேடினார். இங்கு இவர் பார்த்த இடம், மற்றும் காட்சிகள் பற்றி "R.H. Bassett in Romantic Ceylon, Its History, Legend and Story, published in 1929" என்ற நூலில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. றோபேர்ட் இங்கு; தான் தன் வீட்டிற்கு வந்ததைப்போல் உணர்ந்தார்.*

*இவர்கள் இருவருக்கும் அவரின் முசுலீம் நண்பர் 'அன்பகரா' அரபி/ஆங்கில மொழி பெயர்ப்பாளராக உதவிசெய்தார், மஸ்தான் ஒருபோதும் குளித்தது இல்லை எனச் சொன்னார்கள், ஆனால் அவரிடமிருந்து மிகவும் நல்ல பூவின்வாசனை போன்ற ஒரு நறுமணம் வந்தது. இவரைப் பார்த்தவுடன் மஸ்தான் சொன்னார் ''உன்னைப்பற்றி நான் ஒரு கனவு கண்டேன்'' எனக்கூறி அதைத் தான் குறித்து வைத்துள்ளதாக, தன் சிறுகுறிப்புப் புத்தகத்தினைக் காட்டினார். இவரும் கூறினார், தானும் அவரைப்பற்றிச் சில நாட்களின் முன்னர் கனவு கண்டதாகவும், அதனை இவரும் குறித்து வைத்துள்ளதாகக் கூறி, தன் குறிப்புப் புத்தகத்தைக் காட்டினார். மஸ்தான் சொன்னார் தன் கனவு கடைசி பௌர்ணமி அன்று நிகழ்ந்ததாக. இவரும் தனது கனவுத் திகதியைப் பார்த்தபோது, அதுவும் அதே பௌர்ணமி நாள் தான் என உறுதி செய்து; இருவரும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒரே மாதிரி, இருவரும் சந்திப்பதைக் கனவில் தம் ஆழ்மனதில் உறுதி செய்தனர்; அன்றைய கனவு இரவில்; என்பதை அறிந்து கொண்டார்கள்.*

மஸ்தான் இவருக்கு முறையாக மிக ஆழமான பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுத்து மூன்றாவது கண்ணினைத் (Third Eye) திறந்து அதை எப்படிப் பாவிப்பது, மனதின் உள்முக வலிமைகளையும், சக்கரங்களைத் (Chakras) திறந்து அதன் வலிமையையும், ஆற்றலையும் எப்படிப் பாவிப்பது எனக் கற்றுக்கொடுத்து; பல இரவுகள் இருவரும் சேர்ந்து குகைகளில், மலைவெட்டுகளில் மிக நீண்டநேர தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். அத்துடன் குரானில் கூறப்பட்ட தியான வழிமுறைகளையும் இவருக்குப் பயிற்றுவித்தார். இந்தக் குகைகளில் தான் ''அப்துல் காதிர் ஜெய்லானி'' என்பவர் நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்து தியானம் செய்து ஒரு ஞானப்பள்ளியும் வைத்திருந்தார். இப்படியான குகை ஒன்றில் இருந்து தான் தன்னை முற்றிலுமாக உணர முடியும் என்று தீர்க்கமான முடிவு எடுத்தார். தான் ஒருநாள் ஆழமான தியானத்தில் அமர்ந்து இருந்தபொழுது ஒரு பெரிய மலைப்பாம்பு தன் கால்களின் மீது ஊர்ந்துசென்று மலையை நோக்கிப் போனதாகவும் இவரின் நண்பர் 'அன்பகரா' இவரிடம் கூறினார். நாட்கள் செல்லச் செல்ல இவர் மேலும் மேலும் பேரானந்தத்தினையும், ஒரு சக்திவாய்ந்த காந்தத்தினால் கவரப்பட்டுத் தனது ஆத்மாவின் உண்மையான உள்மையத்திற்கு இழுக்கப்பட்டதாகவும் உணர்ந்தார். ஒரு நாள் காலையில் எழுந்தபோது தான் அக் குகையை விட்டுப் போகவேண்டுமென்பதையும், பின் திரும்பித் தனியே வந்துதான் தன் கடைசிப் படியை அடைய வேண்டும் என உணர்ந்து; நண்பருடன் உடனே கொழும்பு திரும்பினார். அங்கு தனது முந்தைய பௌத்த ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய சில பணிகளை நிறைவேற்றிய பின் தன்னை சுதந்திரமாக விடுவித்துக்கொண்டார்.

அங்கிருந்து திரும்பி, தனியாக ஜெய்லானி குகையைநோக்கி, தன் இறுதி இலக்கான, தன்னை அறியாமல், ஆத்மாவை முற்றிலும் உணராமல், கடவுளை அறியாமல் திரும்புவதில்லை என்று ஒரு வகை மகிழ்வான கொழுந்துவிட்டு எரியும் வேட்கையுடன்; தீர்க்கமான ஒரு உறுதி எடுத்துக்கொண்டு பிரதானவீதியில் இருந்து குகையை நோக்கி அந்தக் கடைசி பதினைந்துமைல் தூரத்தையும் நடந்து, கையில் உள்ள தன் பொருட்கள், பணம், எல்லாவற்றையும்

வழியில் கிராமத்தவர்களிடம் கொடுத்துவிட்டு வெறும் கையுடன் உள் புகுந்தார்.

அப்போது அங்கு மஸ்தானோ, வேறு ஒருவரும் அங்கில்லாததைக் கண்டார். தான் தனியாக இருப்பதை உணர்ந்து, மீண்டும் உறுதி எடுத்து, தன் இறுதிநிலையை அடையும்வரை எவ்வளவு காலமானாலும், உணவு ஒன்றும் எடுப்பதில்லை என்ற தீர்மானத்துடன் உறுதியாகத் தியானத்தில் அமர்ந்தார். அப்படியே அவர் மெல்ல மெல்ல தன் உள்ளேயே மிக ஆழமாக உட்புறமாக உள் அடிஆழத்தினை அடைந்து, சுவாசம் இல்லா நிலையை உணர்ந்து, இறுதியாக அவர் தேடியதினை உணர்ந்தார், அறிந்தார். தன்னையும் பரசிவத்தினையும் முற்றிலுமாக உணர்ந்து அனுபவித்தார்.

பின் சுயநினைவு திரும்பிய பின் வெளியேவந்து மறுநாள் காலை மலை உச்சி ஒன்றில் நின்றார். அதை அறுநூறு அடிகள் கீழிருந்து பார்த்த கிராமத்தவர்கள், இவரை ஒரு புனிதசுவாமியாகக் கருதி, இவருக்கு பல்வகையான உணவு, பானம் ஆகியவற்றினைக் கொண்டுவந்து கொடுக்க, இவர் அவர்களுடன் சேர்ந்து பெரிதும் கொண்டாடி மகிழ்ந்தார். சில வாரங்களின் பின்னர் இவர் வேறு ஒரு வெளிநாட்டு முசுலீம்யாத்திரி ஒருவருடன் சேர்ந்து கொழும்பு திரும்பினார். அதன்பின்னர் இவர் மஸ்தானை திரும்பச் சந்திக்கவில்லை. ஆனால் மஸ்தான், முதல் சந்திப்பிலேயே இவர் தன்னை உணர்வதற்குத் தேவையான எல்லாப் பயிற்சிகளையும், மிகவும் ஆழமாகவும், உறுதியாகவும் வழங்கிவிட்டார்.

இதன் பின்பு கொழும்பில் ''நான் முன்பு பார்த்த மாதிரி இப்பொழுது ஒன்றும் தெரியவில்லை, நான் வேறு ஒரு பரிமாணத்தை உணர்ந்தேன், எல்லாமே வித்தியாசமாகத் தோன்றியது. நான் எதோ ஒன்றை இழந்துவிட்டேன்: என்னை உணர்வதற்கான விருப்பத்தை இழந்தேன். நான் பரிபூரணத்தை உணர்ந்தேன், நான் தனிமையை உணர்ந்தேன்'' எனக்கூறினார்.

கொழும்பு YMCA இல் தங்கியிருந்து, அங்கு தனது அறைவாடகை செலுத்துவதற்காக ''ஹத யோக'' வகுப்புகள் எடுத்தார். தனது நடனக் குழுவின் தொடர்புகளைவிட்டு அங்கிருந்து இந்துசமயப்

பக்கம் திரும்பி, கொழும்பில் புறக்கோட்டையில் உள்ள சைவக் கோவில்களைப் பற்றி அறிய முனைந்தார். குறிப்பாக அங்குள்ள பிள்ளையார் கோவிலுக்குத் தினமும் சென்று அதன் தத்துவ விளக்கங்களை அறிய முயன்றார். ஒரு நாள் தன் கனவில் ஒரு மயிலினை அதன் முழுமையான தோகை விரிப்புடன் கண்டார். இதனைப்பார்த்த மறுநாள் காலை கோவிலில், இலங்கையின் இந்துக்கள் அதிகம் வாழும் வடக்கிலிருந்து வந்த வியாபாரியும், ஆங்கில ஆசிரியருமான, YMCA இல் தங்கி இருந்த கந்தையா செட்டியார் என்பவரைச் சந்தித்தார். கந்தையா செட்டியார், தமிழில் பாண்டித்தியம் பெற்ற, நன்கு படித்த, ஆன்மிக விழிப்புணர்வு, தத்துவங்களில் கூர்மை உள்ளவர். இவர் யாழ்ப்பாணம் செல்லாச்சி அம்மையாரின் கீழ் நெடுங்காலம் சீடனாகப் பயிற்சிபெற்றவர். அதன் பலனாக 5' 8'' உயரம் உடையவர், தியானம் செய்யும்பொழுது, நிமிர்ந்த முதுகுடன், கல்லாக மாறிவிடுவார். இவர் தான், இந்த இளம் அமெரிக்கன்சாதுவின் வாழ்வின் அடுத்த முக்கியமான வழிகாட்டியாகிறார். யோகர்சுவாமிதான், கந்தையா செட்டியாரை, றோபேர்ட்டை தேடிக்கண்டுபிடித்து வரும்படி அனுப்பியிருக்க வேண்டும் என்று சிலர் பின் நினைத்தார்கள்! செட்டியார் தான், இந்து/சைவசமயங்கள், தத்துவங்கள், கோயில், தெய்வங்கள், கிரியைகள், விக்கிரக வழிபாடுகள் பற்றிய அனைத்தையும் இந்த இளம் அமெரிக்கருக்குக் கற்பித்தார். இவர்கள் இருவருக்கும் இடையே ஒரு மிக அன்னியோன்யமான இணைப்பும், மற்றவர்மேல் நன்மதிப்பும் கொண்டு இவர்களுக்கு இடையே ஒரு தந்தை மகன் உறவாகமாறி இறுதிவரை தொடர்பில் இருந்தார்கள்.

செட்டியார் தொடர்ந்து திருமூலர், திருவள்ளுவர், அவ்வையார், மற்றும் பல தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் அவர்களின் நூல்கள், சித்தர்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, இப்படி ஒரு சித்தரின் ஆசிர்வாதம் பெறுவது பெரும் பாக்கியமாகும் என்று அறிவுறுத்தினார். அத்துடன் மிகக் கவனமாக யோகர்சுவாமி என்ற ஒரு ''விசர்மனிதர்'' யாழ்ப்பாணத்தில் இருப்பதாகவும் அவரின் தன்மை, செயல்பற்றியும், அவர் செல்லப்பாசுவாமியின் சீடர் என்றும் கூறினார். இதனால் றோபேர்ட்டுக்கு யோகர்சுவாமியைப் பார்க்கும் ஆர்வம் உள்ளூர உண்டாயிற்று. ஒருநாள் செட்டியார்

இவரைத் தன் காரில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்சென்று தன் அளவெட்டி வீட்டில் தங்க வைத்தார். றோபேர்ட்டுக்கு யாழ்ப்பாண வாழும்முறைகளைப் பழக்கி, அங்குள்ள பல இந்துக்கோவில்களுக்கு கூட்டிச்சென்றார். அவர் தனியாகத் தியானம் செய்வதற்காகத் தன் வளவின் பின்பகுதியில் ஒரு குடிலிலான ஆசிரமம் ஒன்றை அமைத்துக்கொடுத்தார். றோபேர்ட் பெரும்பாலும் அதிகாலையில் எழுந்து அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அதிகாலைப் பூசைபார்த்து வணங்கிவிட்டு வந்து, நாள் முழுதும் தன் சிறிய ஆசிரமத்தில் தியானத்தில் இருப்பார். றோபேர்ட் இந்த ஆச்சிரமத்திற்கு ‘‘ஆனந்தா ஆசிரமம்’’ எனப் பெயரிட்டு அழைத்தார்.

றோபேர்ட் சைவ சமூக, கலாச்சாரச் சூழலில், தான் தன் வீட்டில் இருப்பதாக உணர்ந்தார். இந்த மக்களும் இவர்களின் மிக உயர்ந்த ஆத்மீகமும், நன்கு பிடித்துக் கொண்டதால், தானும் இவர்களுடன் முறையாக ஐக்கியமாக விரும்பினார். ஒரு நாள் இவர், செட்டியாரிடம் சொன்னார், ‘‘என் இளவயதில் இருந்து இதுவரைக்குமான பயிற்சியால் நான் ஒரு இந்துவாக ஏற்கனவே உணர்கிறேன், நான் ஒரு இந்துவாக மாற விரும்புகிறேன், என்னை சட்டபூர்வமாக ஒரு இந்துவாகமாற்ற ஒழுங்குசெய்ய முற்றிலும் உணர்ந்த, தூய்மையான குருக்கள் ஒருவரிடம் அழைத்துச்செல்ல முடியுமா?’’ எனக்கேட்டார். அதற்குச் செட்டியார் சொன்னார்; ‘‘நீர் சொல்கிற மாதிரி, கடவுளை அனுபவித்து உணர்ந்த குருக்கள் யாரும் எங்கள் கோவில்களில் இல்லை. கொஞ்சம் பொறு; அதற்கான நேரம்வரும்’’. செட்டியார் என்னை எனது குருவிடம் அழைத்துச் செல்ல உறுதியாக உள்ளார், ஆனால் அதற்கான நேரத்தையும், சமிக்கைகளையும் பார்த்துக் கொண்டிருப்பதாக; உணர்ந்தார்.

பல நாட்களின் பின்னர், ஒருநாள் கடைசியாகச் செட்டியார் சொன்னார் ‘‘யோகர்சுவாமியைப் பார்ப்பதற்கு இன்று நல்ல நாள் போலத் தெரிகிறது’’, என்று சொல்லி, தான்வராமல் தன்மகன் விநாயகமூர்த்தியை அழைத்துச் செல்லும்படியும், அதற்கான அறிவுரைகளை அவரின் மகனிடம் கூறினார்.

*1949ம் ஆண்டு மே மாதம், யோகர்சுவாமியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடக்கும் மாதம், தெற்கில் புத்தரின் ஞானம் பெற்ற வருடாந்திர வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெறும் நாள் அது. அன்று மாலை, 3 மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பி, மல்லாகம் சந்திக்கு நடந்துசென்று, யாழ்ப்பாண பஸ் பிடித்து குமாரசூரியன் என்ற வழக்கறிஞர் வீட்டிற்குச் சென்று, அவருடன் சேர்ந்து மூவரும் அவரின் மாட்டுவண்டியில் போகும்வழியில், நல்லூர் கந்தசாமி கோவிலில் மாலை ஆறு மணிப் பூசை பார்த்த பின், ஏழு மணியளவில் யோகர்சுவாமியின் குடிலுக்குச் சென்றனர். சூரியன் மறைந்து, முழு நிலவின் ஒளி எங்கும் படர்ந்து வீசியது. விளக்குகள் ஏற்றப்பட்டு, அந்த மாலை நேரம் அடியார்கள் சுவாமியிடம் வந்திருந்தனர். சுவாமியின் பிரசன்னத்தால், அச்சூழ்நிலையில் ஒருவகை மின்காந்த சக்தி அலை பாய்ந்து கொண்டிருந்தது. அண்ணளவாகப் பதினைந்து பக்தர்கள் அங்கு சுவாமியுடன் இருந்தார்கள்.*

*மாட்டுவண்டில் சக்கரங்கள், ‘‘க்ரீச்’’ எனச் சத்தமிட்டு நின்றவுடனேயே, குடிலில் இருந்து சுவாமி உயர்ந்த தெளிவான தொனியில், ‘‘வா,வா,வா; நான் உனக்குத்தான் காத்திருக்கிறேன்’’, ("Come, come, come; I am waiting for you.") எனச் சொன்னார். ஆசிரமத்தின் உள்ளே மூவரும் போனவுடன், யோகர்சுவாமி, றோபேர்ட்டிடம் உயர்ந்த குரலில் கேட்டார்; ‘‘என்னை எங்கையாவது பார்த்திருக்கிறாயா?‘ ("Did you see me anywhere?"), அதற்கு றோபேர்ட் சொன்னார்; ‘‘ஆம், நல்லூர் கோவிலில்’’ என்றார். அதன்பின் அவர்கள் இருவருக்கும் இடையில் ‘‘நீ என்னில் இருக்கிறாய், நான் உன்னில் இருக்கிறேன்’’ என்று இருவரும் மாறி, மாறித் தங்களுக்கு இடையில் கூறினார்கள். இது அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது, ஏனெனில், யோகர்சுவாமியுடன் யாரும் நேரும் எதிருமாகத் தைரியத்துடன் பேசியது இல்லை.*

*உடனே, சுவாமி, அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக, ‘‘வந்து யாழ்ப்பாண வயதான பிச்சைக்காரருடன் இரு’’ (Come and sit with Jaffna's old beggar) எனக்கூறினார். அப்போது றோபேர்ட் அவரை விழுந்து வணங்க முற்பட்டபோது அதைத்தடுத்து, ‘‘நீ அதைச்*

செய்யத் தேவை இல்லை, நீயும் நானும் ஒன்றுதான்'' எனக்கூறி, தன்னருகில் உள்ள பாயில் அமரும்படி கூறினார்.

யோகர்சுவாமி அன்றிரவு மிகவும் சந்தோசமான மனோ நிலையில் இருந்து தன்முன் வரும் அனைவரிடமும் சிரித்து, மகிழ்ந்து விசேட கொண்டாட்டத்துடன் இருந்தார்! அங்கிருந்த திராட்சைக் குலைகளை எடுத்துக் கொடுத்து அந்த மூவருக்கும் சாறுபுழிந்து கொடுப்பித்தார்.

அன்று இருபது நிமிடங்கள்வரை இருவரும் அத்வைதம், துவைதம், சித்தாந்தம் போன்றவற்றைப் பற்றிப் பேசிய பின்னர்; யோகர்சுவாமி தன்னிடமுள்ள ''பதஞ்சலி யோகசூத்திரம்'' புத்தகத்தைக் காட்டினார், ''நான் அதைப் படித்துள்ளேன்'' என்று சொன்னேன். எங்களுக்கு இடையில் அற்புதமான, ஆழ்மன உள்மன சங்கமம் இடம்பெற்றது. அவர் என்னைப் பெரும்பாலும் ஒரு சகோதரன்போல நடத்தினார். இது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை, ஆனால் மற்றவர்கள் ஆச்சரியப்பட்டனர்'' எனக்குறிப்பிடுகிறார்.

அதன்பின் யோகர்சுவாமி இவருக்கு ஒரு சந்நியாசியாக தீட்சை கொடுத்து அவரைத் தன்பரம்பரையின் வழியில் சேர்த்துக்கொண்டார். யோகர்சுவாமி இவருக்கு சுப்ரமுனிய (Sri Subramuniya swamy) என்னும் முருகனின் மறுநாமத்தை அளித்து அதன் பொருளையும் விளக்கினார். 'சுப்ரா' என்பதன் பொருள் மூலத்தில் இருந்து வெளிப்படும் ஒளி; 'முனி' என்பது ஒரு மௌனமான குரு; 'யா' என்பது கட்டுப்படுத்துவது; எனவே, ''சுப்ரமுனிய'' என்பது ''ஒரு சுய கட்டுப்பாடுடைய ஆத்மா அது மௌனமாக இருக்கும் அல்லது உள்ளுணர்வால் பேசும், உள்ளே உள்ள சித்த ஆகாசத்தில் இருந்து பேசுபவர், எனப் பொருள்படும்''.

''அவர் தன்னுடன் சேர்ந்து உணவருந்தும்படி செய்தார். அவரை விட்டு வருமுன் நான் அளவெட்டியில் ஒரு ஆசிரமம் தொடங்கியுள்ளதாகக் கூறி அதற்கு அவரின் ஆசியை வேண்டினேன். அதற்கு அவர், ''மிச்சம் நல்லது; அது ஒருநாள் மூன்றடுக்குக் கட்டிடமாக வரும். நீ உலகம் முழுக்கச் சுற்றி வருவாய், நீ பல்லாயிரம் பேருக்கு உணவளிப்பாய். நீ மாளிகைகள் கட்டப்போகிறாய். நீ அமெரிக்கா திரும்பிச்

சென்று அங்கு ஒரு சிங்கம்போல் கர்ச்சனை செய்வாய். இங்கு நீ திரும்பி வரும்பொழுது ஒன்றையும் பெறமாட்டாய், ஒன்றையும் இழக்கமாட்டாய்'', என எதிர்வு கூறினார். இப்படியான நேர்மறையான அறிவுறுத்தல்கள் குருவிடம் இருந்து பெறும் பொழுது நான் மிகவும் மகிழ்வுற்றேன். ''நேரமாகி விட்டது நீங்கள் நீண்ட தூரம் போக வேண்டும்'' என்றுக் கூறி எங்களை அனுப்பி வைத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரும்பிச் செல்லும் வழியில், செட்டியாரின் அறிவுறுத்தல் படி, றோபேர்ட்டை, யோகர்சுவாமியிடம் கூட்டிச் சென்ற வழக்கறிஞர் குமாரசூரியனுக்கு ஒரு சந்தேகம் வந்து, இவரிடம் கேட்டார்; ''நீ எப்பொழுது யோகர்சுவாமியை, நல்லூர் கோவிலில் கண்டாய்?'' என்று. றோபேர்ட் சொன்னார், ''அன்று மாலை, நாங்கள் மூவரும் மூலத்தானத்தில் தரிசனம் செய்த பொழுது, மூலத்தான வேலுக்குப் பின்னால் யோகர்சுவாமியின் காட்சி தனக்குத் தென்பட்டதாகவும், அப்பொழுதுதான் முதல் முறை அவரைக் கண்டதாகவும் சொன்னார்''. இது எப்படி இவருக்கு மட்டும் தெரிந்தது! தனக்கும், மற்றவருக்கும் தெரியவில்லையே! என அவர் ஆச்சரியப்பட்டார்.

எனது குருவுடனான இரண்டாவது சந்திப்பில், நாம் இருவரும் தியானத்தில் ஈடுபட்டு, இருவருக்கும் இடையில் மிக அழகான உள் மன பரிமாற்றம் நிகழ்ந்து எமது நேரத்தை மிகவும் சுவாரசியமாகச் சந்தோசமாகக் களித்தோம்!

எனது மூன்றாவது சந்திப்பில், நான் போக வேண்டிய வழிமுறைகள் பற்றி அழகான சம்பாசணை இடம்பெற்றது. பின்பு நான் அவரின் ஆசிரமத்தை விட்டுக் கிளம்பும் போது, அவர் வெளியே வந்து என்னை வழி அனுப்பும்போது, என் முதுகில் நான் முன் எப்பொழுதும் யாரிடமும் பெற்றிராத ஒரு பலமான அடி ஒன்றை ஓங்கி என் தோள்பட்டைகளுக்கு இடையில் உள்ள முதுகுத்தண்டில் அடித்தார். அது மிகவும் வலிமையானதாய் இருந்தது. நான் மிக உயரமானவனாக இல்லாவிடில் முகம்குப்புற விழுந்திருப்பேன். அங்கு நின்ற சில பக்தர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். ஏனெனில், இதுதான் முன்னெப்பொழுதும்

இடம்பெறாத மிகவும் சக்திவாய்ந்த தீட்சையாகும். அத்துடன் வேறும்சில சக்திவாய்ந்த அறிவுரைகளையும் கூறி; இந்தச்சத்தம் அமெரிக்காவில் எதிரொலிக்கும் எனக்கூறி; இப்பொழுது போ; என வாழ்த்தி அனுப்பினார். இந்தத்தீட்சையுடன் அவர் என்னை ஒரு சந்நியாசியாக அமெரிக்காவிற்கு அனுப்பினார். அப்பொழுது என் வயது 22, அவரின் வயது 77.

தீட்சைகள் நான்கு வகைப்படும், ''எண்ணம், பார்வை, சொல், தீண்டுதல்'' என்பன! யோகர்சுவாமி தன் முழுத்தீட்சை களையும் பூர்த்தியாக்கிவிட்டார், நல்லூர் கோவில் காட்சி மூலம் எண்ணத்தாலும், பின்னர் நேரில் சந்தித்த போது, பார்வையாலும், பேச்சாலும், மூன்றாவது சந்திப்பில் முதுகில் அடித்து, தீண்டுதலாலும் நான்கு வகையான தீட்சைகளும் இவருக்குக் கொடுத்து, இவரைப் பூரணப்படுத்தி, முடிசூடி, ஒரு குரு தன் சீடனுக்குக் கொடுக்க வேண்டிய முழுமையான ஆசியையும், சக்தியையும் கொடுத்துவிட்டார்.

நான் நான்காம்முறை சென்றபோது, யோகர்சுவாமி தனிமையில் மிக ஆழ்ந்த தியானத்தில் இருப்பதைக் கண்டேன். ஆசிரமக் கதவினை அண்மித்தபோது, சுவாமி தன் கண்களைத்திறந்து ''நான் வீட்டில் இல்லை'' (I'm not at home.) என்று கர்ச்சித்தார். திடுக்கிட்டு நான் திரும்ப முற்பட்டபொழுது, திரும்பவும் உடனே மேலும் மிகவும் சத்தமாக ''நான் வீட்டில் இல்லை'' (I'm not at home,) என்றார். அவரின் செய்தி எனக்கு மிகத்தெளிவாகப் புரிந்தது! இருவரும் சந்திக்கும் நேரம் முடிந்துவிட்டது என்று. எனவே என் குருவின் ஆசிரமத்தை விட்டுக் கடைசியாக வெளியேறினேன்.

யோகர்சுவாமி, ''நீ ஒரு குருவாகும் பொழுது, ஒருபோதும் ஓர் அமெரிக்கன் தாய்போல இருக்க வேண்டாம்'' என்று அறிவுறுத்தியுள்ளார். இவருக்கு அதன் அர்த்தம் சரியாகப் புரியாத போது, ''உனக்குத் தெரியுமா?, அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பிறத்தியாரிடம் விட்டுவிட்டு அங்கும் இங்கும் சுத்தித்திரிவார்கள். உனது ஆசிரமத்தில் உனது சீடர்களிடம் நெருங்கி இரு. எப்பொழுது உனக்கு நான் தேவையோ, அப்பொழுது நான் உன்னுடன் இருப்பேன்'' என்றும் கூறியிருந்தார்.

*1949ம் ஆண்டு சுப்ரமுனிய, கந்தையா செட்டியாருடன் இணைந்து ''உலக விவகாரங்களுக்கான இலங்கைப் பணியகம்'' (Ceylon Bureau of World Affairs), என்ற அமைப்பினை ஆரம்பித்து அதன் தாரகமந்திரமாக (Motto) ''கிழக்கும், மேற்கும் சந்தித்து விட்டன, இதன் விளைவு சிறந்ததே'' (East has met West and all that has transpired has been for the best) என அறிவித்தனர். அத்துடன் ''ஆனந்தா ஆசிரமம்'' (Ananda Ashram) என்ற நிலையத்தை அளவெட்டியில் உருவாக்கினர் இந்த ஆசிரமம் ஆத்மீக, சமூக மேம்பாட்டிற்காக பாடுபடும். எந்தச் சமயத்தவரும் இந்த அமைப்பில் உறுப்பினர் ஆகலாம். கந்தையா செட்டியார் இந்த அமைப்பினை உருவாக்கியவர். அவரின் மகன் விநாயகமூர்த்தி இதன் செயலாளர். உலகளாவிய அன்பினைப் பரப்புவதே இந்த ஆசிரமத்தின் முதல் கடமையாகும் என அறிவிக்கப்பட்டது.*

*சுப்ரமுனிய சிலகிழமைகள் யாழ்ப்பாணத்தில் இருந்தார். பின் கொழும்பு திரும்பி செப்டம்பர் 1949ல் அங்கு மீண்டும் நடனம் ஆடினார், அத்துடன் மீண்டும் ஒன்றுசேர்ந்த நடனக்குழுவுடன் கண்டி சென்று அங்கு கலைநிகழ்ச்சிகள் நடத்தினார். ஆனால் இவை எல்லாம் முன்னையவைபோல இல்லை. யோகர் சுவாமியுடனும், செட்டியார் குடும்பத்துடனான இவரது நேரம், இவரை முற்றிலும் மாற்றிவிட்டது.*

*இவர் யோகர்சுவாமியிடம் தீட்சையும் பெற்று, செட்டியார் குடும்ப உறுப்பினராக மாறிய பின்னர் இவருக்கு தனது நடனத்துறையின் மீது இருந்த நாட்டமும் கலைந்து, அமெரிக்கா போக வேண்டிய தேவையும் இல்லாததால், இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தார். இதற்காகச் செட்டியார், இவரைப் பிரதம மந்திரியின் அலுவலகம் கூட்டிச் சென்று அவருடன் நேரடியாகக் கதைப்பிக்கவும் செய்தார். நான்கு மாதங்களாகியும் பதில் வராததால், செட்டியாரின் நண்பர் இவரை மீண்டும் உரிய அலுவலகத்திற்குக் கூட்டிச்சென்று விசாரித்தபோது. இவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படாமல் அப்படியே அலுமாரியில் கிடந்தது. இதனால் இவர்கள் யோகர்சுவாமியைத் தொடர்புகொண்டபொழுது, ''போய் பாலம் அமைக்கவும்'' (Go build a bridge) என்று கூறினார். எனவே*

இவர் இலங்கையைவிட்டு அமெரிக்காவிற்கு கப்பலில் போஸ்டன் நகர் சென்று அங்கிருந்து விமானமூலம் சான் பிரான்சிஸ்கோ நகர் சென்றடைந்தார்.

யோகர்சுவாமி இவருடன், கந்தையா செட்டியார் ஊடாக தனது கடைசிக்காலம் 1964ம் ஆண்டுவரை தொடர்பில் இருந்தார். இவர், நந்திநாத சம்பிரதாய கைலாச குருபரம்பரையின் 162 வது ஜெகதாச ார்யராகக் கருதப்படுகிறார்.

**சான் பிரான்சிஸ்கோ (San Francisco) (1949-1970)**

1949ம் ஆண்டின் இறுதியில் இவர் அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்று ஏழு வருடங்கள் தனிமையில் யோகாவிலும் தியானத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். 1950-1957 காலப்பகுதியில் தன் முப்பதாவது வயதுவரை ஒரு போதனையிலும் ஈடுபடாதவாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், அந்நேரத்தில் தான், மௌனமாக இருக்கும் படி பணித்தலால் அவ்வாறே நடந்து அந்நேரத்தில், அமெரிக்கா எங்கும் பயணம் செய்து மற்றும்பல பாரம்பரிய மற்ற சமயங்களை அறியும் முயற்சியில் ஈடுபட்டு; கிறித்துவ விஞ்ஞானம், தத்துவஞானம், மனோதத்துவ விஞ்ஞானம், தன்னை அறியும் கலை, ஒற்றுமை, சமய விஞ்ஞானம், ஆன்மிகம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றார்.

1956ம் ஆண்டு கொலோராடோவில், இவர் தான் ஒரு மாபெரும் ஆத்மீக அனுபவம்பெற்று ஆத்மீக உடம்பும், பௌதீக உடம்பும் ஒன்றானதாக உணர்ந்துள்ளார். அடுத்த ஆண்டு சான் பிரான்ஸிஸ் கோவில் ஹிமாலயன் அகாடமியை தொடங்கி, அமெரிக்காவில் முதல் இந்துக்கோவிலை ஆரம்பித்தார்.

1957ம் ஆண்டில், குரு சுப்ரமுனிய என்ற நிலைக்கு மாறி, தான் கற்ற இருவகையான சமயவழிகளையும் கலந்து, இந்து -- வேதாந்த தத்துவங்களை மேற்கத்தைய மக்களுக்கு ஏற்றவாறான மொழியில் போதிக்க ஆரம்பித்தார். இவரின் போதனைகள், அமெரிக்காவின் மனோதத்துவ அறிவுவழி முறைகளில் 19ம் நூற்றாண்டு இறைஞான அறிவியலுக்கும் (Theosophy) 1970ன் பிற்பகுதியில்

ஆரம்பிக்கப்பட்ட புதிய தலைமுறை இயக்கத்துக்கும் (New Age Movement) இடைப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இவர் 1957ல் சான் பிரான்சிஸ்கோவில் இந்துக்களுக்கு ஒரு நிலையமும், கிறித்தவர்களுக்கு ஒரு நிலையமும் தொடங்கி சுப்ரமுனிய யோகா ஆர்டர், கிறித்தியன் யோகா சர்ச் என ஆரம்பித்து, ஞாயிற்றுக்கிழமைகளில், கிறித்தவப் பாடல்கள், புதிய கோட்பாடு பைபிள் வாசிப்பு, பின்னர் பகவத் கீதா அல்லது உபநிடதம் என்பனவற்றைக்கூறி, கிறித்தவ இந்து ஆன்மீக வாதங்களை பிரசங்கிப்பார். இக்காலத்தில் இவர் ''பாதர் சுப்ரமுனிய'' என்றும் அழைக்கப்பட்டார்.

1968ம் ஆண்டில் இவர் சுவிற்சர்லாந்தில் இருந்து ஆழ்மனதின் பக்கங்களை பெயரிட்டும், படமாகவும் காட்டும், தியானத்திற்கு உரிய ஒரு அதிசய மொழியை எழுதினார்.

இவரின் 1970ம் ஆண்டிற்கு முன் பிரசுரிக்கப்படட ஆரம்பகால நூல்களான The Self-God (1959), Cognizantibility (1958), Gems of Cognition (1958), The Clear White Light (1968) என்பன சைவசித்தாந்தம், சிவம், இந்து சமயம் என்பன பற்றி ஒன்றும் கூறவில்லை. இவை ஒன்றிலும் இவர் தன்னைப்பற்றியோ, தனது குருநாதனைப் பற்றியோ அல்லது தன குரு பரம்பரை பற்றியோ குறிப்பிடவில்லை. இவை தியானம், அத்வைதத்தின் அடிப்படையில் ஒருமை கொள்கையையும் (Monoism), யோகம் பற்றியே விவரித்தன. இந்து சமயத்தைப் பற்றியோ, சமய சார்பினையோ, கோவில் வழிபாடு முறைகளையோ, அவரது பிந்தைய பதிப்புகளில் பெரும்பான்மையாக இருப்பதைப்போல, இவை கொண்டிருக்கவில்லை.

### குவாய் (Kauai)(1970-2001)

இவர் 1970 இல் தனது ஆசிரமத்தை கவாய் (Hawai) தீவுக் கூட்டங்களில் நாலாவது பெரிய தீவான குவாய் (Kauai)இல் இந்துமடம், குவாய் ஆதீனம் என்று 458 ஏக்கர் நிலத்தில் கோவில் -- மடம் கட்டி ஆரம்பித்தார். இது இங்குள்ள மங்கிய எரிமலையின் அடிவாரமாகும். 1979ம் ஆண்டு சந்நியாசிகளின்

புனித வழிகாட்டி (Holy Orders of Sannyas) என்பதைப் பிரசுரித்து அதில் இந்துத் துறவியின் கொள்கைகள், எதிர்பார்ப்புகள், உறுதிப்பிரமாணங்கள், வழிமுறைகள் என்பனவற்றை வரையறை செய்தார். 1979ம் ஆண்டு "Hinduism Today" என்ற சஞ்சிகையை ஆரம்பித்து, அவரது உலக சுற்றுலாவின் பின்னர் 1980ல் இருந்து இந்த சஞ்சிகையின் குறிக்கோளாக; தேசியம், பிரிவு, மொழி கடந்து உலகில் உள்ள எல்லா இந்துக்களையும், இணைத்து எழுச்சி ஊட்டவும், போதிப்பதற்கும் வழி செய்தார். இதன் குறிக்கோள் பற்றிய எண்ணங்களை இவ்வாறு பகிர்கிறார், ''சைவத்தை வலுப்படுத்தவும், அத்துடன் மற்றைய மூன்று பிரிவுகளையும் வலுப்படுத்தவும் ஆகும், ஏன் என்றால் எங்களின் தத்துவம் சிவன் எல்லாரிலும் உறைகிறார் என்பதற்கு வலுவூட்டுகிறது. நாங்கள் எல்லா இந்துப்பிரிவுகளையும் சமமாக ஆதரிக்கிறோம். எங்களின் தத்துவங்கள், கொள்கைகள், கலாச்சார அணுகுமுறைகள் சில இடங்களில் வேறுபட்டாலும், எங்கள் வலிமையே உலகிலுள்ள எல்லா இந்துக்களின் ஒருமைப்பாடே! இது ஒட்டுமொத்த இந்து மேல் எழுச்சிக்கு நன்மை பயக்கும், இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் உத்வேகம் பெற்று வலிமையுறும்பொழுது ஒவ்வொன்றும் வலிமை அடைந்து ஒன்றுபட்ட இந்து சமயத்திற்கும், புகழையும், உறுதியையும், முன்னேற்றுவதற்கான, தைரியத்தையும், நம்பிக்கையையும் தரும். இதுதான் இந்துக்களின் ஒற்றுமையாகும். இதுதான் எங்களின் இதயபூர்வமான அர்ப்பணிப்பாகும்.

இவரை எல்லோரும் ''சற்குரு'' என்று அழைத்தனர். சற்குருவை அமெரிக்காவில் உள்ள மற்ற சமயத்தலைவர்கள், ''மரபுவழி இந்து சமயத்தின் தூண்'' (a pillar of orthodox Hinduism) எனக்கருதினர். 1965ல் இவர் ஹிமாலயன் அக்கடமி (Himalayan Academy) அமைத்து சைவத்தையும், சிவவழிபாடையும், இந்து சமயத்தின் ஒருபிரிவாக, வகுப்புகள், சொற்பொழிவுகள், வீட்டுப்பாடம், கலந்துரையாடல் முகாம்கள், போன்றவற்றாலும்; குவாய், இந்தியா போன்ற இடங்களுக்கு படிப்பினை யாத்திரை வழிகளால் முன்னெடுத்து பிரபல்யப்படுத்தினார். 1970ல் தன் அமைப்பின் தலைமையகத்தை குவாய் (Kauai) தீவிற்கு மாற்றினார்.

*1970ல் இவர் ''இந்து மோனாஸ்ட்ரி'' (Hindu Monastry) என்பதை அமெரிக்காவிலுள்ள குவாய் தீவில், அமைத்து ''ஹிந்துயிசம் டுடே'' (Hinduism Today) என்ற ஓர் இதழையும் தொடங்கி நடத்தினார்.*

*1979ல் ''புனித சந்நியாசிகள் அமைப்பு'' (Holy Orders of Sannyas) என்ற பதிப்பினை வெளியிட்டு இந்து சந்நியாசி மடத்தின் நோக்கங்கள், அபிலாசைகள், உறுதிமொழி ஆகியவைபற்றி முன்னெப்பொழுதும் இல்லாத தெளிவுடன் வரையறுத்தார்.*

*1985ம் ஆண்டில், அமெரிக்காவில் இவர் சைவசித்தாந்த சர்ச் (Saiva Siddhanta Church) என்ற அமைப்பை உருவாக்கி, அதன் தலைவராக இருந்த முதல் சைவ--குரு ஆவார். இதன்கிளைகள் இன்றும் பலநாடுகளில் இயங்கிவருகிறது. இவர் 'சர்ச்' என்று பெயர் வைத்ததற்கான காரணம் அச்சொல்லானது மேற்குநாட்டவரின் காதுகளுக்கு இலகுவாக இருக்குமென்று கருத்தியதால்.*

*இலங்கையில் 1949ம் ஆண்டில் இவர் நிறுவிய முதல் அளவெட்டி ஸ்ரீ சுப்ரமுனிய ஆசிரமம் (Anantha Asram) உட்பட உலகம் முழுவதும் பல தனிப்பட்ட இந்துக் கோவில்களையும், நிறுவனங்களையும், தன் மேற்பார்வையில் நடத்திவந்தார். உலகெங்கும் உள்ள தன் பக்த சீடர்களால் சற்குரு என அன்புடன் அழைக்கப்பட்டவர். சற்குரு என்பதன் பொருள் உண்மையைப் போதிப்பவர் (Teacher of Truth), அதற்கு இணங்க, இவர் ஒரு உயர்ந்த, அரசர் போன்று, பட்டு வெண்மையுடனான சிகையுடன் தனது வாழ்நாளை இந்து/சைவ சமய உண்மைத் தத்துவத்தினை உலகெலாம் பரப்பிட தன்வாழ்வினை அர்ப்பணித்தவர். டென்மார்க்கில் இருந்து நியூசிலாந்து வரை இலங்கையில் இருந்து வந்த பல தமிழ் அகதிகளுக்காகக் கோவில்கள் கட்டுவதற்கு உதவிகள் செய்துள்ளார். தனது இந்துமடத்தின் கிளைகளையும், முப்பத்திரண்டு இந்து மிசனரிகளையும் ஏழு நாடுகளில் நிறுவியுள்ளார்.*

*சற்குரு, இந்த அமைப்பானது யாழ்ப்பாணத் தமிழர்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாகும். இது அளவெட்டியில் உள்ள ஸ்ரீ சுப்ரமுனிய ஆசிரமத்தின் கிளை. இந்த நூற்றாண்டில் வெளிநாடுகளில் பெருகி வாழும் சைவமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவானது என்றும் கூறியுள்ளார்.*

*1986ல் இந்து சமுத்திரத்தில் உள்ள மொரிசியஸ் (Mauritius) தீவின் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று; அங்கு மங்கிப்போயுள்ள இந்து சமயத்தை மீட்சிபெறச் செய்வதற்காக ஒரு இந்து சந்நியாச மடத்துடன் கூடிய ஆத்மீகப்பூங்கா ஒன்றை அங்கு ஏழுஏக்கர் பரப்பளவில் "Spiritual Park & Pointe de Lascars" என்ற பெயரில் அமைத்து தம் நிறுவனத்தின் ஒரு பிரிவாக உருவாக்கினார். இவர் அண்ணளவாக முப்பது சைவ--இந்து சமய தத்துவ நூல்களை எழுதியுள்ளார். இவர் இந்தியாவிற்கு வெளியில் சைவசமயத்தை பிரபல்யமாக்கியவர்களில் முதன்மையானவர்.*

*1975ல் குவாய் தீவில், சற்குரு சிவபெருமான் அங்கு நடப்பது போல் ஒரு காட்சி கண்டார்; அதன் அடிப்படையில், அங்கு சிவனுக்கு ஒரு கோவில்கட்டும் எண்ணம் உதித்து, அதன்படி ‘‘சன் மார்க்க இறைவன் கோவில்’’ (the San Marga Iraivan Temple) ஒன்றை குவாய் தீவில், இந்தியாவிற்கு வெளியே முற்றிலும் வெள்ளைக் கருங்கல்லால் ஆன கோவிலாக அமைக்க எண்ணம் உருவானது. அதற்கு மாமல்லபுரம் சிற்பக்கலை கல்லூரியின் அதிபராக இருந்த கணபதி சிற்பியைக் கொண்டு வடிவமைத்து முற்றிலும் மனிதக்கைகளால் மட்டும் செய்யும் வேலைகளைக் கொண்டு, வேறு இயந்திரங்கள் பாவிக்காது உருவாக்க தீர்மானம் எடுத்தார். இது சோழர்களின் கோவில் அமைப்பில் உருவாக்கப்பட்டது.*

*இதற்காக பெங்களூரில் 1990ம் ஆண்டு முதல் கருங்கல் செதுக்கும் வேலையை ஒருகிராமத்தில் சம்பிரதாயமாக தொடங்கிவைத்தார். இந்த வேலைப்பாடுகள் தொடர்ந்து பதினைந்து வருடங்களாக அங்கே நடைபெற்றது. இதற்கான வேலைகள் இன்றும் தொடர்ந்து செல்கிறது.*

### *பஞ்ச கணபதி கொண்டாட்டங்கள் (Pancha Ganapathy Festivel)*

*இவர் இந்துக்களுக்கான கிறித்மசென அழைக்கப்படும் குளிர்கால பஞ்சகணபதி திருவிழா என்ற குழந்தைகளுக்கு நன்கொடை வழங்கும் ஐந்துநாட்கள் குடும்ப கொண்டாட்டம் ஒன்றை அறிமுகம் செய்தார். டிசம்பர் 21 முதல் 25ம் திகதிவரை, இந்துக்கள் தங்கள் வீடுகளில் பஞ்சமுக விநாயகரைவைத்து தினம் ஒரு நிற ஆடைகளால் அலங்கரித்து, இனிப்பு, பலகாரங்கள், பழவகைகள் படைத்து,*

விளக்குகள், சாம்பிராணிகள் கொளுத்தி, குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் சகிதம், தெய்வீகப் பாடல்கள் பாடி, சங்கீத வாத்தியக் கருவிகள் இசைத்து, மேளதாளங்கள், நடனம், நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தி மகிழ்ந்து, பழையகுறைகள் நீங்கி, புதுவாழ்வு பெறுவதற்காக கணபதியை வணங்கி, குழந்தைகள் நண்பர்களுக்கு, பரிசில்கள் கொடுத்து, வாழ்த்துஅட்டை கொடுத்து, அனைவரும் சேர்ந்துத மகிழ்ந்து சமய, கலாச்சாரங்களை அறிந்து கொண்டாடும் முறையை அறிமுகம்செய்து அதனை வருடந்தோறும் தொடரும் வண்ணம் அறிவுறுத்தினார்.

இவர் 1980களில் பல சர்வதேச சமயமாநாடுகளில் சைவ சித்தாந்தத்தின் தொன்மையையும், அதன் ஆணித்தரமான ஒருமைத்தன்மை கொள்கையையும்; மற்றைய பண்டிதர்களின் ''சித்தாந்தம் முற்றிலும் பன்முகத்தன்மை கொண்டது'' என்ற வாதத்திற்கு எதிர்வாதிடுவார்.

1983ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை இனக்கலவரத்தின் பின்னர் தன்னாலான துயர்நீக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கும் தமிழ் அகதிகளுக்கு தன் வழிகாட்டல்களைக் கொடுத்தார். இந்தநிலையில் உள்ளவர்களை, அவர்களின் குழந்தைகளை இந்து/சைவ வழிகளில் வளர்க்கும்படி ஊக்கமளித்து, அவர்கள் தங்களுக்கு தேவையான வழிபாட்டிற்குரிய கோவில்கள் அமைக்கப் பெரிதும் உதவிசெய்தார்.

1990ல் இவர் விசேடமாக, இந்துக்கோவில் குருக்கள்மாரும், பூசாரிகளும், மற்றைய சமயபோதகர்களுக்கு நிகரான மரியாதைகள் பெற்று, கௌரவமாக நடத்தப்பட வேண்டுமென்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

1991ல் இவர் நந்திநாத சூத்திரங்கள் என்ற 365 பழமொழிகள் கொண்ட; இந்துவாழ்க்கை முறைபற்றிய நெறிமுறைகளைப் பதிப்பித்தார். 2000ல் ''எப்படி ஒரு இந்துவாகலாம்?'' (How to become a Hindu?) என்ற நூலைப்பிரசுரித்து ''நீ இந்துவாகப் பிறந்தால்தான் இந்துவாக முடியும்'' என்ற கருத்தினை முறியடித்து, இந்து மதத்தை அறிந்து அதில்சேர முன்வருபவர்களுக்கு வழிகாட்டினார். அதே வருடம் நவம்பர்

மாதம் "Hindu Press International (HPI)", என்ற உடனடிச் செய்திகளை, சுருக்கமான இலவச தினச்செய்தியாக ஈ-மெயில் மூலமாகவும், இணையவழி மூலமாகவும் அனுப்ப ஒழுங்கு செய்தார். இவரின் சர்ச், அவர்களின் உறுப்பினர்களையும், உள்ளூர் கிளை நிறுவனங்களையும், ஐந்து கண்டங்களையும் சார்ந்த எல்லோருக்கும் தமது பிரசுரங்கள், செய்திகள் போய்சேரும் வண்ணம் உருவமைத்தார்.

1994ம் ஆண்டு ''இந்து பாரம்பரிய அறக்கட்டளை'' (Hindu Heritage Endowment) உருவாக்கி உலகெங்கும் உள்ள இந்து ஆச்சாரியர்களுக்கு, கோவில்களுக்கு, அனாதை இல்லங்களுக்கு நிரந்தர வருமானம் வரும்படி ஒழுங்குசெய்தார்

1995ம் ஆண்டு இந்தியாவில் இருந்து திரும்பியபின் இவர் கிழமையில் உள்ள ஏழுநாட்களும் தொடர்ந்து மூன்றுவருடங்களாக முயன்று 3,000-பக்கங்கள் கொண்ட சிவனுடன் நடனம், சிவனுடன் வாழ்வு, சிவனுடன் ஐக்கியம் (Master Course trilogy of Dancing with Siva, Living with Siva, and Merging with Siva) என்ற, இந்துதத்துவம், கலாச்சாரம். யோகம் என்பன பற்றிய தினசரி பாடங்களைக் கொண்ட மூன்று தொகுப்புகளைப் பதிப்பித்தார்.

1995ல் இவர் ''சைவ தர்மசாத்திரம்'' என்ற நூலின் கடைசிப் பதிப்பினைப் பிரசுரித்து அமெரிக்கன் தேவாலயங்களின் நடைமுறைப்படி, தனது நிறுவனத்தை சமூக நடைமுறைகளுக்கு ஏற்றவாறு திறமையாக இயங்குவதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கினார். இதன்படி எதிர்கால நடைமுறைகளை முடிவு செய்து, தன்பணிகளுக்கான விரிவுபடுத்திய குடும்பக் கட்டமைப்புகளை அமைத்து தன் மூன்று மூத்த சன்னியாசிகளை தன் வாரிசுகளாக அறிவித்தார்.

1997ல் அமெரிக்கா அதிபர் கிளின்டன் மனித நகல் (Human Cloning) உருவாக்கத்திற்கான நெறிமுறைகள் பற்றிய கருத்துக்களை வரவேற்றபொழுது இவர் தன்கருத்தினைத் தெரிவித்தார்.

அதே வருடம் யோகர்சுவாமியின் 125வது பிறந்த வருடாந்திர கொண்டாட்டமாக சுவாமியின் தங்கத்திருவுரு ஒன்றினைச்

செய்து அதனை உலகம் முழுக்க யாத்திரையாக எடுத்துச் சென்று கடைசியாக இலங்கையில் முடிவுறச் செய்தார்.

1998ல் பெற்றோர் தம்பிள்ளைகளை அடிக்கக்கூடாது, அது பிள்ளைகளின் உரிமை என்றுகூறி அதற்கான பெரும் பிரச்சாரம் செய்தார்.

2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முழுக்க ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து பலவகுப்புகளை எடுத்துவிட்டு குவாய் திரும்பிய பின்னர், அக்டோபர் 6ம் திகதி தனக்கு மிகவும் அதிகரித்த, சுகப்படுத்த முடியாத குடல் புற்றுநோய் உள்ளதை மருத்துவ வல்லுனர்களிடம் உறுதிப்படுத்தியபின்; தைரியமாக முடிவெடுத்து, பழைய யோக சம்பிரதாய முறைப்படி ''ப்ராயோபவேச'' (prayopavesa) என்னும் ஊட்டச் சத்து இல்லாமல் நீர்மட்டும் அருந்தி உணவின்றி உண்ணாத்தவம் இருந்து 32 நாட்களின் பின் பக்தர்கள், சந்நியாசிகள் சூழ்ந்திருக்க 12 நவம்பர் 2001, அன்று 74வது வயதில் இறைபதம் அடைந்தார். இந்த உண்ணாத்தவம் தொடங்கிய முதல்வாரத்திலேயே தன் பிரதான சீடரான போதிநாத வேலன் சுவாமிகளை (Bodhinatha Veylan Swami) பிரதான சற்குருவாக நியமனம்செய்து, தனது பொறுப்புகள் அனைத்தையும் முறையாக அவரிடம் மாற்றிக்கையளித்து, உரிய அறிவுரைகளையும் சொல்லிவைத்தார். சற்குரு இறுதி நேரம் வரை தன் நகைச்சுவை உணர்வினைக் கொண்டிருந்தார்.

யோகர்சுவாமி பூதவுடல் விட்டு நீக்கிய மார்ச் 1964ம் ஆண்டிற்கு பின், சற்குரு அவர்களை, இலங்கை வரும்படி யோகர்சுவாமியின் அடியார்கள் பலர் வேண்டிக்கொண்டனர். யோகர்சுவாமிக்கு பின்னர் இவரை அவரின் நேரடிச்சீடராகவும், தங்களின் குருவாகவும் ஏற்று, அங்குவந்து தங்களுக்கு வழிகாட்டும்படி கோரிக்கை விடுத்தனர். சிலர், இவரைத் தங்களின் கனவுகளில் காண்பதாகவும் இவரிடம் கூறியுள்ளனர். ஆனால் இவர் தன்பணி மேற்கு உலகில் தான் என்று உணர்ந்து அங்கயே நின்றார். ஆனாலும், பலவருடங்களின் பின் இலங்கை செல்ல வேண்டும் என்ற உள்ளுணர்வு தோன்றியபொழுது; 1969ம் ஆண்டு தன் சீடர்களின் அனுபவப் படிப்பிற்கான முதலாவது இந்தியன் யாத்திரையை ஒழுங்குபடுத்தி,

அத்தருணம் இலங்கைக்கும் தன் சீடர்கள் 65 பேருடன் வந்து திரும்பினார்.

இவர் உலகம்முழுக்க இடம்பெற்ற பல சர்வதேச இந்துசமய மாநாடுகளில் முக்கியமான பேச்சாளராகப் பங்குபற்றிப் பல கௌரவங்களையும், பட்டங்களையும் பெற்றார். 1986ம் ஆண்டு புது டெல்லியில் நடந்த உலக சமயங்களின் பாராளுமன்ற (World Religious Parliament) கூட்டத்தில்; கடந்த 25 வருடங்களாக இந்தியாவிற்கு வெளியில் இந்துசமயத்தினை மிகவும் திறம்பட முன் எடுத்துச் சென்ற ஐந்து இந்துசமயத் தலைவர்களில் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டார்.


1995ல் டெல்லியில் நடந்த ''உலக சமய பாராளுமன்றம்'' இவரின் மிகவும் தரம்வாய்ந்த பதிப்புக்களை மதித்து ''தர்மசக்கர'' விருதினை வழங்கிக் கௌரவித்தது.

முக்கியமாக 2000ம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையால், அதன் முன்னைநாள் பொதுச் செயலாளர் உ-தாண்ட் பெயரில் வழங்கப்படும் சமாதானத்திற்கான கௌரவம் இவருக்கு வழங்கப்பட்டது. இதனை முன்னர் அன்னை தெரசா, தலைலாமா, பாப்பரசர் போப் ஜான் பால்-II, மைகேல் கோர்பச்சேவ், நெல்சன் மண்டேலா போன்ற வேறு பலரும் பெற்றனர்.

சற்குரு தன் சந்நியாசிகளுக்கும் மற்றைய பக்தர்களுக்கும், தான் இவ் உலகை விட்டு நீங்கினாலும், உங்கள் எல்லோரும் உள்ளேயே இருந்து ஒருநாளின் 24 மணிநேரமும் வேலைசெய்வேன் என்று. உறுதிகொடுத்தார். அவரின் பெரும் சித்தசக்தியை, பல்லாயிரம் பக்தர்கள் சான்றளிப்பார்கள். கடவுளை நோக்கித் தூண்டும் அவரின் நம்பமுடியாத சக்தி, தங்களிடம் உண்டாக்கிய அளப்பெரும் மாற்றங்கள், தங்கள் வாழ்வின் வழிகாட்டும் ஒளிவிளக்காக, தங்கள் உள்ளேயே இருக்கும் தூய ஆனந்தமான ஆன்மாவை உணர்ந்து அனுபவிக்க வழிகாட்டிய தெய்வமாக, ஒரு தாயாக, தந்தையாக, நண்பனாகப் பலர் உணர்கிறார்கள்.

இந்துசமய உலகில், சற்குரு உண்டாக்கிய மிகப்பெரிய தாக்கம், இவர் தன்னுடன் தொடர்பு கொண்டவர்கள் எல்லோரதும்

உள்ளங்களையும் மனதையும் மிகவும் தொட்டவர். சந்தேகம் எள் அளவும் இல்லமால் இவர் வழமைக்குமாறான ஒரு பெரிய ஆத்மா! தான் பிறவி எடுத்தது இந்த வேலைக்காகவே *"Born for the job"*, என்று இவர் தன்னைப் பற்றியும் தன் சந்நியாச சங்கம் பற்றியும் சொன்னார். இதற்கும் மேலாக அவர் தன் பயணத்தின் ஒவ்வொரு நிமிடங்களையும் நன்கு அனுபவித்தார். தனது ஆரமபகால பயிற்சிகளும், அனுபவங்களும் தன்னை இந்த வரலாறு படைக்கும் சாதனைகளுக்கு தயார் படுத்தியது என்று பகிர்ந்துள்ளார்.



# ஜேர்மன் சுவாமி கௌரிபாலா கிரி (நாய்க்குட்டி)

***German Swami Gauribala Giri (1907-1984)***

***at his ashram Summāsthān in 1981***

ஜேர்மன் சுவாமிகள் என்ற பெயரில் பிரபலமாக அழைக்கப்பெற்ற இவருக்கு சுவாமி கௌரிபாலா கிரி என்ற பெயரும் உண்டு. 20ம் நூற்றாண்டில் இலங்கையில் மிகவும் பிரபல்யமான ஒரு மனிதராகத் தெரிந்தவர். ஒரு திறமையான வேடிக்கைமனிதர், ஒரு குறும்புக்காரர் அதேநேரம் ஆன்மீகப்பயணத்தில் மிக ஆழமாக அமிழ்ந்து இருப்பவர்.

இவர் ஜேர்மன் நாட்டில் பெர்லின் நகரில் 15ம் திகதி செப்டம்பர் மாதம் 1907ம் ஆண்டில், ஜேர்மனிய அரசுடன் செல்வாக்குள்ள ஒரு மேல்மத்தியதர யூத குடும்பத்தில் பிறந்தார். இவரின் பெயர் பீட்டர் ஜோச்சிம் ஸ்சோயினபில்டட் (Peter Joachim Schoeinfeldt). இவரின் இளமைப்பருவம், பெர்லினில் ஒருவகையான அறிவார்ந்த கலைசார்ந்த மிகவும் குழப்பநிலையான சூழலாகும். வாலிபவயதில் இவர் ஜேர்மன் கவிஞர்கள் தங்களின் கவிதைகளை அச்சடிக்கும் ஒரு சிறு நிறுவனத்தில் புத்தகம் தைப்பவராகப் பயிற்சி பெற்றார். அப்பொழுது இவர் பலகவிஞர்களின் கவிதைகளைப்படித்தும், அக்கவிஞர்களோடு தொடர்பும் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் ஜேர்மனியின் மிகவும்புகழான ஸ்டீபன் ஜோர்ஜ் (Stephen George) என்ற கவிஞரின் அறிவாளிகள் வட்டத்தில் புகுந்தார். அவரின் கவிதைகள் ஜேர்மனிய மக்களின் ஆத்மாவினை ஆழம்பார்த்தன. இப்படியான கவிதைகள் இளம் பீட்டரை மிகவும் ஆக்கிரமித்துக் கொண்டன. கவிஞர் ஜோர்ஜ், இந்த உலகை மாற்றுவதே தன் பிறப்பின் நோக்கமென நம்பினார். அவர், ஆத்மபலம் கொண்ட பாதிரி-அரசர் (Priest - King) ஒருவர் வருவார் எனவும், அவரே ஒரு இரகசியமான அல்லது ஒரு ஆத்மீகமான ஜேர்மன்நாட்டினை உருவாக்குவார் என தன்னுடைய இரகசிய-ஜேர்மன் (Secret-German) என்ற நூலை 1922 ம் ஆண்டு பதிப்பித்து ஏதிர்வுகூறினார். பின்னர் பலநாசிகள் இக்கூற்றுதான் கிட்லர் உருவானதற்கு அடிப்படையானது என நம்பினார்கள்.

இக்கவிஞரின் புகழ் மேலும் உயர்ந்தபோது அவர் ஒரு மௌனியானார். பல இளைஞர்கள், இவரின் எதிர்காலநோக்கான இரகசிய-ஜேர்மன் (Secret-German) என்ற இலக்கினை அடைவதற்காக இவருடன் கூட்டுச் சேர்ந்தனர். அவ்வாறு சேர்ந்தவர்களில் இந்த பீட்டரும் ஒருவர்.

கவிஞர் ஜோர்ஜ்இன் உயர்வட்டாரங்கள் தங்களுக்கான இரகசியமான சம்பிரதாய பழக்கங்களையும், செய்முறைகளையும் உண்டாக்கினர். அவரைப் பின்பற்றுவோர் இரகசியப்பிரமாணம் எடுத்துத் தங்களின் நிபந்தனையற்ற விசுவாசத்தை வெளிப்படுத்தினர். ஜோர்ஜ்இன் விருப்பத்துக்கு மாறாக, நாசிகள் அவரைத் தங்களின் வெற்றியாளனாகவும் முன்னோடியாகவும் கொண்டாடினர். கிட்லர் இவருக்கு நாசி அக்கடமியின் எழுத்தாளர்களின் தலைவர் பதவி வழங்கியபொழுது, அதை மறுத்து நாட்டைவிட்டு வெளியேறிச்சென்று சுவிச்சர்லாண்ட்டில் வாழ்ந்து, பின் அங்கயே இறந்தார்.

பீட்டர் தன் 20வது வயதில், ஒரு சந்தர்ப்பத்தில் சோமர்செட் மோகம் எழுதிய "The Razor's Edge" என்ற நூலினை வாசித்த பொழுது ஒரு மென்மையான, விளங்கிக் கொள்ள முடியாத, தெளிவற்ற ஒரு பரவசம் இவரின் உள்ளத்தில் உண்டாயிற்று. இதனைத் தொடர்ந்து சிறிதுகாலத்தில் கேர்மன் கேசே எழுதிய சித்தார்த்தா (Herman Hesse's Siddhartha) என்ற நூலினை

வாசித்தபொழுது அவரின் உள்ளத்தில் ஒருவிதமான புரிய முடியாத ஒரு மயக்கமும், உணர்வும் உள்புகுந்து பெரும்தாக்கத்தினை ஏற்படுத்தின. பின்னர் இவரும் வேறுசிலரும் புத்தமதத்தில் ஆர்வம்கொண்டு தங்களின் உண்மையானவழி சுயமாற்றமே யொழிய அரசியல் மாற்றமில்லையென முடிவெடுத்தனர்.

எனவே 1930களில் கிட்லரின் வருகையால் அந்நேரத்தில் பீட்டர் போன்ற மற்றைய ஜேர்மன் யூதர்களுக்கு, சிறை அல்லது மரணத்தை தவிர்ப்பதற்குரிய ஒரேவழி உடனடியாக ஜேர்மனியை விட்டு வெளியேறுவதுதான். நாசிப்படைகளின் பயமுறுத்தும் பார்வைகளில் தப்பி இவரும் இவரைச் சேர்ந்த சிறுகுழுவும் கிழக்கு நோக்கிய பயணமாக (Pilgrims to East), கப்பல் மார்க்கமாக இந்தியா சென்றனர்.

இவரைப் பின்தொடர்ந்து இவரின் தம்பி மால்டே (Malte) இந்தியா சென்றார். அங்கு இவர்கள் சிலகாலம் சுற்றித்திரிந்து பல சுவாமிகள், யோகிகள், குருமார்கள், துறவிகள் போன்ற பலரைப்பார்த்தும், உள்ளே எழும் கேள்விகளுக்கும் கொந்தளிப்புகளுக்கும் ஒரு ஆறுதலும் கிடைக்காமல், அடுத்தபடியாக இலங்கை வந்தார்கள்.

இலங்கை சென்ற இவரை அந்நாளில் புகழ்பெற்ற ஜேர்மன் பிக்கு வண. ஞானதிலோகா (Nyanatiloka) வரவேற்று, தேரவாத பௌத்தம் மீது நாட்டம் கொள்ளத்தூண்டி, போதனைக்குட்படுத்தி பின்பு இவரையும் இன்னொரு ஜேர்மன்-யூதரையும் கிக்கடுவா (Hikkaduwa) பக்கமாகவுள்ள பொலகசடுவா, டொடந்துவா (Polagasduwa, Dodanduwa) என்ற இடத்தில் உள்ள புத்தசரணாலயத்தில் புத்தபிக்குவாக 4 ஜூன் 1936 அன்று பிரகடனம் செய்தார். இவருக்கு ஞானக்கிட்டோ (Nyanakhetto) என்றும் அடுத்தவருக்கு ஞானபோனிக (Nyanaponika) என்றும் பெயர் சூட்டப்பட்டது. இதன்பிறகு இவரின் தம்பி மால்டேயும் (Malte) இங்கு புத்ததுறவியாக மாறி ஞானமலிட (Nyanamalita) என்று நாமம் பெற்றார்.

1939ல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியபொழுது இலங்கையில் இருந்த எல்லா ஜேர்மனியர்களும், பிரித்தானிய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு தியத்தலாவ (Diyatalawa)

என்ற இடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். ஜப்பானியர்கள் சிங்கப்பூரைப் பிடித்தபின்பு இவர்கள் எல்லோரும் இந்தியாவில், இமாலயமலை அடிவாரத்தில் உள்ள டெஹ்ரா டுன் *(Dehra Dun)* என்ற இடத்தில் இருந்த மாபெரும் தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டார்கள். இங்கு இவருடன் 'திபெத்தில் ஏழு வருடங்கள்' *(Seven Years In Tibet)* என்ற புகழ் பெற்ற புத்தகத்தினை எழுதிய கெயின்றிச் கர்ரேர் *(Heinrich Harrer)* என்ற ஜேர்மனியரும் உடனிருந்தார்.

இவர் அங்கிருந்து தன் துறவி ஆடைகளைக்களைந்து, மேலும் ஐந்து ஜேர்மனியக் கைதிகளுடன் தப்பியோடப் பலமுறை முயன்று பிடிபட்டு, பின் ஐந்தாவது முயற்சியில் வெற்றி பெற்று தொலைவிலுள்ள திபெத்நாட்டிற்குச் சென்று அதன் எல்லையிலுள்ள ஒரு புத்த மடாலயத்தில் உலகப்போர் முடியும்வரை தங்கியிருந்தார். இக் காலப்பகுதியில் இவர் முதல்முறையாக அங்கு தந்திரப்பயிற்சி *(Tantric Practice)* பயின்றார். போர் முடிந்தபின்பு இந்தியா சென்று வடஇந்திய ஆதிசங்கரரின் தசநாமிமடத்தில் *(Dasanami Monastic Order of Adi Sankaracharya)* சேர்ந்து சுவாமி கௌரிபாலகிரி என்னும் நாமம் பெற்றார்.

பின்பு பலகாலங்கள் செல்லுமுன்பே சகோதரர்கள் இருவரும் புத்தமதம் தங்களுக்கான வழிமுறையல்ல என்பதனை உணர்ந்தார்கள். தென்னாட்டு புத்தமதம் கிட்டதட்ட கிறித்துவ-புராட்டஸ்டன்ட் மாதிரி வாதிடலாலும், விவாதத்தாலும், கருத்து வேறுபாட்டினாலும் உருவானது. இக்கருத்தாடல்களும், உரையாடல்களும், அறிஞர்களுக்கும், புத்திஜீவிகளுக்கும் திருப்தி கொடுக்குமேயொழிய ஆத்மநிறைவைத்தராதெனக் கருதினார்கள். இறுதியாக இருவரும் புத்ததுறவி நிலையைக் கைவிட்டார்கள். தம்பி மால்டே, கொழும்பில் உள்ள ஜேர்மன்தூதரகத்தில் அதிகாரியாகச் சேர்ந்து பணிபுரிந்து ஒய்வுபெற்ற பின்புகூட இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்து செப்டம்பர் 1989 ம் ஆண்டு இறந்தார்.

ஆனால் பீட்டரின் தேடுதல், உள்ளத்தே தொடர்கனலாக எரிந்து கொண்டிருந்தது. ஆத்மதாகத்தை அணைப்பதற்காக அவர் பின்பு தொடர்ந்து இந்து சமயங்களைப் பற்றி அறியமுயன்றார். இதற்காக

மீண்டும் பலமுறை இந்தியாசென்று பலகாலம் சுற்றித்திரிந்து பாண்டிச்சேரி அரவிந்தர், திருவண்ணாமலை ரமணமகரிசி உட்படப் பல மகான்களையும், ஞானிகளையும் சந்தித்தும் அவரால் ஆத்ம திருப்தி அடையமுடியவில்லை.

பின்பு இலங்கைதிரும்பி பல்வேறு இடங்களிலும், எல்லா றொக் (Ella Rock) இல் உள்ள ராவணனின் குகையிலும், குயின்பரி தோட்டம் கொத்தமலையில் (Queensbury Estate Kotamale) உள்ள வனத்திலும் பலகாலம் மிகவும் கடுமையான தவம், தியானம் போன்ற பயிற்சிகளில் வெகுதீவிரமாக ஈடுபட்டார். எனினும் அவருக்குப் பூரண திருப்தியும் மனநிறைவும் எட்டிடவில்லை.

இவர் யோகர்சுவாமியைச் சந்தித்ததுபற்றி இருவிதமான தகவல்கள் காணப்படுகிறது! இதில் எது சரியென உறுதி செய்ய முடியாத நிலையில் அந்த இரண்டையுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்!

**முதலாவது :-**

இலங்கையில் யாழ்ப்பாணம் சென்றபொழுதுதான் அவருக்கு வாழ்வில் ஒரு திருப்புமுனை உண்டாயிற்று. ஒருநாள் காலையில் காங்கேசன்துறை வீதியில் உள்ள பிரபலமான ஸ்ரீலங்கா புத்தக சாலையில் (Sri Lanka Book Depot) சமயப்புத்தகங்கள் பகுதியில் உள்ள புத்தகங்களைப் பார்வையிடும்போது; ஒரு வயதான வெண் முடியுடனான கடும்பார்வை கொண்ட முன் அறிமுகமில்லாத ஒருவர், இவர் கையில்வைத்திருந்த புத்தகத்தைப் பறித்து, நீ ஒரு முட்டாள், இது புத்தகங்களில் காணமுடியாது; நீ சும்மா இரு! (You bloody fool! it's not found in books! Nee Summa iru!) என்று சொன்னார்.

இது தான் யோகர்சுவாமியுடனான இவரது முதல் சந்திப்பு அத்துடன் இவரது தேடலும் முடிவுற்றது, இவர் பல சோதனைகள், பக்குவப்படுத்தல்களின் பின்னர் யோகர்சுவாமியைத் தன் குருநாதனாக ஏற்றுக்கொண்டார்.

**இரண்டாவது :-**

பல வருடகாலம் கடும்முயற்சிகள் சாதனைகள் செய்தும், பீட்டர் இன்னமும் திருப்தியடையாத ஒரு தேடுனராகத்தான் (seeker)

உள்ளார். ஒருநாள், கிழக்கினை ஒரேயடியாகவும், முடிவாகவும் விட்டு ஐரோப்பா திரும்பிப்போகும் தீர்மானத்துடன் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் புகைவண்டிக்காகக் காத்துநின்றார். அந்த முக்கியமான நேரத்தில் அவரின்விதி அவருக்கு வேறுதிட்டத்தினை வைத்திருந்தது! வேட்டி உடுத்த முன்அறிமுகமில்லா ஒரு மனிதர், மஞ்சள்நிற துறவி உடைதரித்து நின்ற வெளிநாட்டினரை அணுகி வலுக்கட்டாயமாக உரையாடினார். இவரின் விரக்திநிலையையும், பொறுமையின்றி வெளியேறும் நிலையையும்கேட்டு, அந்த அறிமுகமில்லாத் தமிழர் இவரிடம் கேட்டார், ''எப்பவாவது கொழும்புத்துறை யோகர்சுவாமியைப் பார்த்ததுண்டோ என?''. பீட்டர் சொன்னார் ''எல்லாச் சுவாமிகளும்; போக்கிரிகளும், மோசடிக்காரர்களும் *(Roughs and Humbugs)*; நான் இனி யாரையும் பார்க்கப்போவதில்லை'' என. அதற்கு, அந்த பிறமனிதர் சொன்னார், ஆமாம், நீ சொல்வது சரிதான்! ஆனால் யோகர் சுவாமிதான் எல்லோரிலும் பார்க்க மிகவும் பெரிய மோசடிக்காரர் *(Greatest Humbug of them all)* ! எனவே நீ போகமுன் அவரை மிகவும் கட்டாயம் பார்க்கவேண்டும். இந்த புதிரான அபத்தமான கூற்று, பீட்டரை மிகவும் ஆரவாரப்படுத்தியது. ஏனெனில் அவர் முதல் முறையாக ஒரு புனிதமனிதரை மோசடிக்காரர் எனக் கூறுவதைக் கேள்விப்படுகிறார். எனவே அவரை என்னவிலை கொடுத்தும் கட்டாயம் பார்க்கவேண்டும் என நினைத்தார்.

கொழும்பு  செல்லவேண்டிய புகையிரதம் நடைமேடையில் வந்து நின்று அதில் அந்த தமிழ்மனிதரும் ஏறிச்சென்றுவிடடார். ஆனால் பீட்டர் மட்டும் அங்கேயே தன்னைமறந்து மிகஆழ்ந்த எண்ணத்தில் நின்றிருந்தார்!

உடனடியாக அவர் கொழும்புத்துறைக்குப் போனார், அங்கு ஒரு சிறு குடிலில் ஒரு தாடியுடனான பருத்தமனிதரைப் பார்த்தார். ஆனால் இவரைப் பார்த்தவுடன், ''நீ யார்? - இங்கு ஒன்றுமில்லை!'' *(Who are you? There's nothing here!)* என யோகர்சுவாமி கர்ச்சித்தார்!

இவர் உடனடியாகச் செயலற்று வாயடைத்துப் போனார் (dumb pounded). ஏனெனில் பீட்டரை எப்பொழுதும் கிழக்கத்திய சாதுக்கள், வெளிநாட்டு சீடர்களைச் சேர்ப்பதற்காகச் சந்தோசமாக

வரவேற்பார்கள். ஆனால் இங்கு இவர், சுயமரியாதையை இழக்கும் வண்ணம் அவமானப்படுத்தப்பட்டார். அடுத்து வந்த ''வெளியே போ! உன்னை, நீ யாரென முதல் அறிந்த பின், இங்கு வா!'' (Get Out! Find out who you are first before you come here) என்ற வார்த்தையால் அதிர்ந்துபோனார்.

இப்படியான முறையில்லாத, வழமையில்லாத தொடக்கத்தினால், தடையுறாமல், பீட்டர், கண்ணுக்குத்தெரியாத ஒரு சக்தியினால் திரும்பத்திரும்ப யோகர்சுவாமியைப் பார்க்க ஈர்க்கப்பட்டார். பலமுறை சென்றும் திருப்பி விரட்டப்பட்டார். இறுதியில் ஒருநாள் உள் அழைக்கப்பட்டு, யோகர்சுவாமி முன் சென்று அமர்ந்தார்.

1947ல், அன்று தொடங்கிய தொடர்பால், இவரின் பலவருடத் தேடுதல் முடிவுற்றது. ஒரு பயமில்லா விசித்திரமான குருவுக்கும் சீடனுக்குமான உறவு உருவாகி, பீட்டரின் வாழ்வு முற்றிலுமாக மாறி, தன் இறப்புவரைக்கும் இலங்கையிலே வாழ்ந்தார்.

ஒருநாள் யோகர்சுவாமி இவரது சீருடையான (uniform) மஞ்சள்நிற பிக்கு உடையைக்களைந்து மற்றவர்கள் போல எளிமையான வெண்மை ஆடைகள் உடுக்கும்படியும், எப்பொழுதும் யாதுமில்லாதவர் (Nobody) போலிருக்கும்படி பணித்தார்.

இவர்களுக்கிடையே தொடர் பாடல்கள் நேரடியான முறைப்படுத்தப்பட்ட படிப்புகள் அல்லாமல்; பெரும்பாலும் கண்டிப்புகள், எச்சரிக்கைகள், கடும்சொற்கள், கோபமான வசைகள், சுடுமொழிகள் போன்று கூர்மையானதாக உள்ளே ஊடுருவிச் சென்று கடினமாகிப்போன 'ஜேர்மனிய நான்' எனும் அகங்காரத்தைத் தவிடு பொடியாக்கும் வண்ணம் இருந்தன. சிலவேளைகளில் கொஞ்சம் நேரடியான இவர் கடைப்பிடிக்கவேண்டிய சுட்டல்களும், வழிகாட்டுதல்களும் இருக்கும்.

ஜேர்மன் சுவாமி சில வேளைகளில் சிறுவர்க்கோ, தெரிந்த விருந்தினர்களுக்கோ அல்லது தான்செல்லும் வீட்டு உரிமையாளர்களுக்கோ அன்றி வேறு ஒருபோதும் நேரடியான போதனைகளையோ அல்லது விளக்கங்களையோ கொடுத்தது

இல்லை. அவரைச்சந்தித்த பலபேருக்கு அவர் ஒரு சிறந்த களிப்பு ஊட்டுபவராக, மகிழ்வூட்டுபவராக அல்லது அருவருக்கத்தக்க நையாண்டி செய்பவராகக் காணப்பட்டார்.

இவர் தன் சில நெருங்கிய நண்பர்களுடன் இருக்கும்பொழுது பிராந்தி போன்ற மதுவகைகள் அருந்துவார், அப்பொழுது எல்லாவற்றிலும் எல்லை மீறாமல் மிதமாக இருத்தல் அவசியமெனப் போதிப்பார். சில நேரங்களில் அவரது விரும்பிய யாழ்ப்பாணச் சுருட்டையும் புகைப்பார்.

ஒவ்வொருவரும் தங்கள் பழக்கவழக்கங்களில் நல்லதோ, கெட்டதோ சமநிலை பேணவேண்டும். இப்படியான சந்தர்ப்பங்களில் சம்பிரதாய மக்கள் இழிசொல் கூறுவார்கள். ஆனால் துறவியானவன் அவர்களை எல்லாம் கண்டுகொள்ளாது பயமின்றி தனித்து துணிந்து எதிர்கொண்டு தூத்தலையும் போற்றுதலையும் சமமாகப்பாவித்து வாழவேண்டும் என அறிவுரை சொல்வார். யாரும் இந்தமாதிரி அவரை ஒரு தெய்வீக மனிதராகக்கருதினால் அவர்களின் எண்ணத்தை மாற்றக் கடுமையாக முயல்வார், இது அவர்களுக்குத் திகைப்பினை உண்டாக்கும்.

ஜேர்மன் சுவாமி எல்லா வகைகளிலும் ஒரு புதிரான வண்ணமயமான ஆளாகப் பலதசாப்தங்களாக இலங்கை முழுக்க நன்கு அறியப்படடவர். இவரின் கோமாளித்தனமான கூத்துக்களும், பழைமையான உருவ வழிபாடுகள், ஐதீகங்கள் மறுப்பாளராகவும் நடக்கும்தன்மை, இவரின் மறுபக்கத்தை மறைத்துக்காட்டும். உண்மையில் இவர் தத்துவ சித்தாந்தங்களில் *(Philosophia Perennis)* ஒரு தலைசிறந்த மாணவன். இவர் சிகிரியா, கதிர்காமம் பற்றி விளக்கிய தத்துவக் கொள்கைகள், பழைமை வாத அறிவார்ந்த அறிஞர்களின் அறிவிலும் பார்க்கப் பல தசாப்தங்கள் முன்னோடியானவை. இவரின் கதிர்காமத்தைப் பற்றிய புரிந்துணர்வுதான் ஒரு புத்தகத்திற்கு மூலகாரணமானது. போல் விர்ஸ் *(Paul Wirz)* என்பவரால் ஜேர்மன்மொழியில் எழுதப்பட்ட புத்தகம் ''கதிர்காமம்: இலங்கையின் மிகவும் புனிதநகரம்''. *(Katarakama: Tha Holiest City In Ceylon)*. இந்தப்

*புத்தகத்தை ஜேர்மன் சுவாமிதான் முதலில் ஜேர்மன் மொழியில் போல் விர்ஸ்க்கு சொல்லச்சொல்ல அவர் எழுதினார்.*

*ஜேர்மன் சுவாமியின் மறுபெயரான ''கௌரிபாலா'' என்பதன் பொருள், கௌரியின் பிள்ளை. (கௌரி என்பது பிரகாசிக்கும் பெண் தெய்வம் எனக்கருதப்படும்) அதற்கு இணங்க இவர் ஒரு சக்தியின் பக்தர். தெய்வீக பெண்சக்தியை இவர் ஆராதிப்பவர்; அது எங்கும் தீர்க்கமற நிறைந்திருந்தாலும், விசேடமான சில சக்திபீடங்களில் மட்டும் அவள் காட்சிகொடுப்பாள் எனக்கூறுவார்.*

*அக்காலத்தில் சந்தசுவாமி எனப் பின்னாளில் பெயர் பெற்ற, இலங்கை ஆளுநராக இருந்த சோல்பரி பிரபுவின் மகன் ஜேம்ஸ் ராம்ஸ்போதம், இவரைப்பற்றி வெளிநாட்டில் கேள்விப்பட்டு இலங்கை வந்து கதிர்காமத்தில் இவரை 1950ம் ஆண்டு சந்தித்தார். இருவர் வாழ்விலும் இது ஒரு முக்கியமான சம்பவமாகும்.*

*சந்தசுவாமி இவருடன் சேர்ந்து வேட்டி உடுத்து, வெண்ணீறணிந்து பாயில்படுத்து, மடத்தில் உணவருந்தி, கதிர்காமம் அப்பாசுவாமி மடத்தில் தங்கியிருந்தனர். இந்த நேரத்தில்தான் புலிக்குட்டி என்று பின்நாளில் அறியப்பட்ட சாம் விக்ரமசிங்கே என்ற கொழும்பு சிங்களரும், இவர்கள் இருவரையும் கதிர்காமத்தில் சந்தித்து நண்பர்கள் ஆனார்கள்.*

*பின்னர் ஜேர்மன் சுவாமிதான் மற்ற இருவரையும் யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று யோகர்சுவாமியைச் சந்திக்க வைத்தார். அவர்களும் பின்னர் யோகர்சுவாமியின் நெருங்கிய சீடர்கள் ஆனார்கள்.*

*1956வரை ஜேர்மன் சுவாமி கதிர்காமத்தில் தங்கி இருந்தார். அதன் பின்னர்தான், சந்தசுவாமியுடன் சேர்ந்து செல்வச் சந்நிதியில் வசிக்க ஆரம்பித்தனர். அதன்பிரகாரம் ஜேர்மன் சுவாமியும், சந்தசுவாமியும், தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் வளாகத்திற்கு அண்மையில் குடிலமைத்து வாழ்ந்தார்கள். இங்கு சந்தசுவாமிதான் ஜேர்மன் சுவாமிக்கு ''வில்லா பெர்லின்'' (Villa Berlin) என்ற பெயரிலும் தனக்கு ''குயின்ஸ் காட்டேஜ்'' (Queen's Cottage) என்ற பெயரிலும், நரிக்குட்டி, புலிக்குட்டி போன்ற*

பிறநண்பர்கள் வந்தால் தங்குவதற்காக இன்னொரு குடிலும் அமைத்து, அங்கு யோகர்சுவாமி காட்டியமுறையில் ''சும்மா இருக்கும்'' முயற்சியில் ஈடுபட்டனர்.

சிலகாலங்களின் பின்னர் யோகர்சுவாமி இருவரையும் கண்டித்து, இருவரும் சேர்ந்து இருப்பது இருவர் ஆத்மீக முன்னேற்றத்தை பாதிப்பதாகக்கூறி, அவர்களைப் பிரித்து சந்தசுவாமியை, தனக்குப் பக்கமாக இருக்கும்படி யாழ்ப்பாணம் அழைத்து கைதடியில் தங்க வைத்தார். ஜேர்மன் சுவாமி மட்டும் செல்வசந்நிதியில் தனித்து விடப்பட்டார்.

யோகர்சுவாமி, இவரை *"Mr.Nobody"* ஆக இருக்கும்படி கட்டளையிட்டார். அதே நேரத்தில் கௌரிபாலா (உலக மாதாவின் குழந்தை, சக்திமாதா தான் உலகின் எல்லா உண்மைக்கும், காட்சிகளுக்கும் காரணமானவர்) என்ற நாமத்தையும் இவர் பயன்படுத்தும்படி அறிவுறுத்தினார். இது தன்னை மகாயான, தந்திர, சிறுகுழு கிறிஸ்டியானிட்டி *(Esoteric Christianity)* நோக்கி, சக்தி வழிபாடு நெறிப்படி போகும்படி யோகர்சுவாமி கூறிய தனக்கான ஒரு வழிகாட்டல் என ஜேர்மன் சுவாமி இதைப்பற்றி, பின்னாளில் புலிக்குட்டி சுவாமியிடம் விளக்கியுள்ளார்.

பின்னர் ஜேர்மன் சுவாமியின் வசிப்பிடம் ''வில்லா பெர்லின்'' என்ற பெயரைக் கைவிட்டு, சும்மாஸ்தன் *(Summasthan)* என்று பெயர் மாற்றப்பட்டு இறுதிவரை அப்பெயரில் தான் அழைக்கப்பட்டது. அதாவது கணத்திற்குக்கணம் சும்மா ஏகாந்தத்தில் லயித்துதிருக்கும் இடம் என்ற பொருளில்; *Nobody* ஆக இருக்க முயலும் இடம் என்பதே.

ஜேர்மன் சுவாமிக்கும், குரு யோகருக்கும் இடையில் உண்டான பெரும்பாலான சந்திப்புகள் மிகவும் குறுகியகால அளவுகள்தான், நீண்ட அறிவுபூர்வமான உரையாடல்கள் எதுவும் இடம்பெற வில்லை. ஆனால், ஜேர்மன் சுவாமி, தனக்கு யோகரிடம் இருந்து பல தகவல்கள் மௌனமான முறையில் வார்த்தைகளற்று உட்பாய்ந்ததாகவும்! தனது பல குழப்பமான கேள்விகளுக்கு, தான் கேளாமலே அதற்கான விடைகள் கிடைத்து தன்னை வாழ்க்கையில் வழிநடாத்தியதாகத் திடமாக நம்பினார்.

*ஜேர்மன் சுவாமி தன் இடது உள்கையில் ''சும்மா இரு'' (Summa Iru) எனத் தமிழில் பச்சைகுத்தியிருந்தார். அவர் ''சும்மா இருக்க சூத்திரம்'' (Summa Irukka Suttiram) என்ற பெயரில் தமிழில் ''சும்மா இருத்தல்'' பற்றிய முக்கியத்துவத்தினை உணர்த்தும், பழைய நூல்களில் உள்ள பல கருத்துள்ள வசனங்களை எல்லாம் சேர்த்து ஒரு தொகுப்பினைப் பதிப்பித்து வெளியிட்டார். முதலில் 100 பிரதிகளும், பின்னர் ஒரு 100 பிரதிகளுமாக மொத்தம் 200 பிரதிகள்மட்டும் வெளியிடப்பட்டன.*

*இவரின் வாழும் முறைகள், மரபு ஒழுக்கங்களுக்கு முரணானவை எனப் புகழ் பெற்ற படியால் (Bohemian Reputation), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பழமைவாத சைவர்கள் இவரை வெளிப்படையாகக் கண்டித்துத் தூற்றினார்கள்! ஆனால் இவர் அவர்களின் கருத்துக்கள் எதனையும் காதில் எடுக்காமல், கண்டுகொள்ளாது, தான் ஒரு சக்தி உபாசகனாக, இந்த பிரபஞ்ச சக்தியிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு அங்கமாக கணத்திற்குக்கணம், தனது இதயம் என்ன சொல்கிறதோ அதனையே செய்தார்.*

*தனது ''சும்மாஸ்தன்' குடிலுக்கு வரும் சில விருந்தினர்களுக்கு 'Courvoisier Cognac' என்னும் உயர் மதுபானத்தைப் பகிர்ந்து கொடுத்து வியப்பில் ஆழ்த்துவார். இவ் மதுபானப் போத்தல்கள், இவரின் கொழும்பு வாழ் நண்பர்கள் இவருக்கு அன்பளிப்பாக அனுப்பியவையாகும். சில நேரங்களில் இப்படியான தொன்றும் தன்வசம் இல்லாவிடில், மாலை வேளைகளில் தன் விருந்தாளிகளை அருகிலுள்ள கள்ளுக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று ''என் பனை அமிர்தம்'' (My Palmyrah Elixir) எனக்கூறி பனம்கள் அருந்தியவாறு அங்கு ஒரு பாயில் அமர்ந்து ஆத்மீக அனுபவங்களையும், சமயப்பின் புலங்களையும், தத்துவக் கருத்துக்களையும், கதைகளையும் மிகவும் நகைச்சுவையாகவும், ரசிக்கும் வண்ணம், ஏளனமாகவும், பகிடியாகவும் கூறி மகிழ்விப்பார்.*

*சிலசமயம் தன் கொழும்பு நண்பர்களின் அழைப்பை ஏற்று, யாழ்ப்பாணத்தின் பனைஓலைகளின் தொடர் ஓசையில்*

சலிப்படைந்து ஒரு மாற்றத்திற்காக அங்கு செல்வார். அங்கு இவருக்கு செல்வந்தர்கள் வாழும் கறுவாக்காடுப் பகுதியில் ஒரு பெரிய உயர்மட்ட நண்பர்கள் குழாம் ஒன்று உண்டு. இவர் அங்கு ஜேர்மன் பீர்கள் அருந்துவார் அல்லது சில கொண்டாட்டங்களில் உள்புகுந்து கலந்து நடனமாடி, பின் நட்சத்திர விடுதிகளில் அதிஉயர் விருந்துண்டு முடிவடையும். பல தடவைகளில் அறிஞர்களும், மெத்தப்படித்தவர்களும் இவரைச் சுற்றிச் சூழ்ந்து, கேள்விக் கணைகளால் துளைப்பார்கள். இவரும் சலிக்காமல் சமய, ஆத்மீக, தத்துவங்களின் கருத்துக்களையும், விளக்கங்களையும், மிகவும் நகைப்புடனும், தெளிவுடனும் விளக்கிச் சொல்வார்.

சிலசமயம் தன்னை யாரும் ''புனிதமானவர்'' என்று கருதும் விம்பத்தை உடைப்பதற்காக, வேண்டுமென்றே குடிகாரன், முட்டாள், பைத்தியம் போலவும் நாடகமாடுவார்.

சமயசீல வாழ்க்கை முறையை விட்டுவிலகி. இடைக்கிடை இவ்வாறு களியாட்டங்களில் ஈடுபடுவதனை; இவர் மிக இளவயதில் ஆத்மீக அறிவினைத் தேடித் தன்னை மறுத்து, மேற்கத்தைய உயர் வாழ்வினை விட்டுக் கிளம்பியபடியால் காலம் தாழ்த்தி அனுபவித்துப் பார்க்கிறாரெனக்கருதி இவரின் நண்பர்கள் சிலர் இவரின்மீது பரிதாபப்படுவதும் உண்டு.

இப்படிப் பல ஆன்மீக சாகசங்களுடன், ஏற்கப்பட்ட பழமையான நடைமுறைகளுக்கு மாறாக இவர் சில வேளைகளில் நடந்து கொண்டாலும், இவர் ஒரு மிகவும் ஆழமான சமய, மத உணர்வாளர்.

யோகர்சுவாமி போல இவரும் செல்வச்சந்நிதியில் இருந்து கதிர் காமத்திற்கு வருடாந்திர கரையாத்திரை என்று அழைக்கப்படும் பாதயாத்திரையைத் தொடர்ந்து 25 வருடங்கள் நடந்து போய் அங்கு திருவிழாக்காலத்தில் நடக்கும் தீ மிதிப்பிலும் பங்கு பற்றித் தானும் தீ மிதிப்பார். பின்பு வயது முதிர்ச்சி காரணமாக 55 நாட்கள் நடைப்பயணத்தைத் தாக்குப்பிடிக்க சரீரம் இடம் கொடுக்காதபடியால் நிறுத்திவிட்டார்.

இவருக்கு சமயம் என்பது உள்ளார்ந்த ஒரு தனிப்பட்ட தொடர்பாகும்; தெரியாத ஒன்றின் மீதுள்ள ஒரு இரகசியமான

காதல்; பிறரிடம் இருந்து மறைத்து, மற்றவர்களின் கண்காணிப்பில் இருந்தும், மதிப்பீட்டிலும் இருந்தும் கடினப்பட்டு கவசமிடல் வேண்டும் எனக்கருதி வாழ்ந்தார்.

''ஆழமான சமயவாதிகள் சமயமற்றவர்கள்'' (Deeply religious people have no religion) என்பது இவர் அடிக்கடி சொல்லும் வார்த்தை. ஒரு துறவி ஆடையணிந்த இவர், செய்யக் கூடாததைச் செய்யும் பொழுது மற்றவர்கள் கண் இமையை உயர்த்துவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

தியானமானது பொதுவாக விளங்கிக் கொள்ளப்பட்டது போல, தியானத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு நேரம், ஒரு செய்முறை கிடையாது. இவர் தன் நண்பர் ஒருவருக்குச் சொன்னார், தனது முழுவாழ்வும் ஒரு தியானமே என; எல்லாமே ஒரு உள்தியானமே (vipaasana)! ஒரு தொடர்ந்த நினைப்புநிலையே! தன்னையறிந்த ஒரு விழிப்புநிலையே! அத்துடன் அவரின் பார்வையில் எல்லாமே புனிதமானதும் பரிபக்குவமானதும் ஆகும்.

இவரின் அறிவுத் தேடல்கள் பலவாகும், அதேபோல அறிஞர்கள் சுற்றம் இவருக்குத் தூண்டுதல் அளித்தன. விசேடமாக சிகிரியா பற்றிய இவரின் ஆராய்ச்சி இவர் வாழ்வில் முக்கிய பகுதியை எடுத்தது. இவர், சிகிரியாவை உருவாக்கிய காசியப்பா அரசரின் முதன்மைப் படைத்தளபதியாக, தன் முன்பிறவியில் இருந்ததாக தனக்கு நினைவு வருவதாக மிகவும் வெறித்தனமாக நம்பினார். அத்துடன் இந்த மலைக்கு அடிக்கடி சென்று வந்தார், அத்துடன் அந்த மலையுச்சியில் தனிமையில் பல இரவுகளைக் கழித்துள்ளார். இவரின் கூற்றுப்படி Sigiriya (SIHINAYA) என்ற சொல்லில் இருந்து வந்திருத்தல் வேண்டும், இதன் பொருள் நினைவு கொள்ளல் அல்லது கனவுகாணல் எனப் பொருள்படும் என்றார். ஆஸ்திரேலியாவில் உள்ள ஆதிவாசிகளின் கனவு-மலை போல, இந்த மலையையும் இவர் நினைவுகூறும்--மலை (Rock of Remembarance) என அழைத்தார். இது சம்பந்தமாக இவர் பல சம்பிரதாயங்களில் இருந்து ஒற்றுமைக்கான ஆராய்வுக்குரிய ஆதாரங்களைச் சேர்த்திருந்தார்.

ஒரு அறிஞர்வட்டம் வெளிநாடுகளில் இருந்து ஜேர்மன் சுவாமியைப் பார்க்க தொண்டமானாறு வருவார்கள். இவர்களில் பலர் தங்களின் தனிப்பட்ட பிரச்சனைகளுக்கு இவரின் ஆலோசனை கேட்பார்கள்; சிலர் ஒரு குறிக்கோள் இல்லாமல் சுற்றித்திரிவார்கள் அல்லது அன்று உலகில் நடப்பதைப்பற்றி ஆச்சரியப்படுவார்கள். வேறு சிலர், எல்லாச் சமயமும் தாங்கள் தான் உண்மையானது என்றும், தங்களால் தான் உண்மையைக் காட்டமுடியும் என்று பிரச்சாரம் செய்தாலும், எல்லாமும் வேறுவேறான சமயசம்பிரதாய வழக்கங்களைப் போதித்து மக்களை ஒற்றுமைப்படுத்தாமல் பிரித்து வைத்திருப்பதாக எண்ணி மனக்குழப்பம் அடைவார்கள்.

சில புத்தியீவிகள் தங்களின் அறிவுச்செருக்கோடு அல்லது அகம்பாவத்தோடு அணுகினால், இவர் அவர்களை தன் கூர்மையான நகைச்சுவையால் கிழிச்சு நார்நாராகச் சிதறடிப்பதைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்கும் என இவரோடு பழகியவர்கள் கூறியுள்ளார்கள்.

யோகர்சுவாமி முன் ஒருநாள் சொன்னார், ‘‘இவர் ஒரு வழிகாட்டியவார்’’ என (That Gauribala will be a signpost). அதேபோல இவர் கிழக்கத்திய, மேற்கத்திய புனித சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் பெரும்பாலும் அறிந்ததால், தன்னை நாடிவந்தவர்களுக்கு அவர்களின் மிஞ்சிய வாழ்நாள் முழுதும் எண்ணிப்பார்க்க எதோ ஒன்றைக் கொடுத்துள்ளார்.

1960இன் மத்தியில் ஒரு ஆங்கில தேடுனர் (English Seeker) பல அலைச்சல்களின் பின்னர், ஜேர்மன் சுவாமியின் சும்மாஸ்தனுக்கு வந்து, இவரிடமிருந்து பலமாதங்கள் ‘‘சும்மா இருக்க’’ மிகவும் கடுமையான ஆன்மீகப் பயிற்சி பெற்றார். பின்பு அவர், பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் சந்தித்த மக்கி லிட்சி (Maggi Lidchi) என்பவரிடம் தான் இங்குபட்ட இன்னல்களையும, விசித்திரமான நெருக்கடிகளையும், வெளிப்பாட்டு அனுபவங்களையும் பகிர்ந்துள்ளார். இந்தப் பகிர்வினை அடிப்படையாக்கி மக்கி லிட்சி ‘‘பூமிமனிதன்’’ (Earthman) என்ற பெயரில் 1967ல் ஒரு நாவல் எழுதியுள்ளார்.

*இது பலராலும் மிகவும் சிறந்ததாகக் கருதப்பட்டு, சோமர்செட் மோகம் எழுதிய ''சவரக்கத்தியின் முனை'' (Somerset Maugham's The Razor's Edge) என்ற மிகவும் புகழ்பெற்ற நாவலுக்கு இணையான, அதில் சொன்னவாறு இந்தியாவில் மேற்குநாட்டவர் ஒருவரின் ஆன்மீகத்தேடலின் அனுபவத்திற்கு இது நிகரானது எனக் கருதுகிறார்கள். Earthman என்ற நாவலில், ஜேர்மன் சுவாமி ஒரு ''ஐரிஷ் சுவாமி'' என சித்தரிக்கப்பட்டுள்ளது. எப்படித் திருவண்ணாமலை பகவான் ரமணமகரிசி, போல் பிரண்டன் எழுதிய "A Search In Secret India", மற்றும் சோமர்செட் மோகம் எழுதிய "The Razor's Edge" என்ற இரு நூல்கள் மூலம் மேற்குலகில் பிரபலமடைந்தாரோ,; அதேபோல, ஜேர்மன் சுவாமியும், இந்த "Earthman" என்ற நூலின்மூலம் மேற்குலகில் நன்கு அறியப்பட்டார்.*

*ஜேர்மன் சுவாமி, இவர் போன்ற சீடர்கள் குழாம், மற்றும் பிற சந்நியாசிகளும், கிரகஸ்தர்களும் யோகர்சுவாமியை மட்டும் தான் ஒரு ஞானியாக வணங்கி வழிபடுவார்கள். யோகரின் முன்னோடிகளான கடைச் சுவாமியோ, செல்லப்பா சுவாமியோ இப்படியான வணக்க வழிபாடுகளை அனுமதிக்கவில்லை.*

*ஜேர்மன் சுவாமி, யோகர்சுவாமியை ஒரு புனிதராகவோ, தெய்வீகமானவர் என்று மாற்றவில்லை. அவர் தனக்கென சீடர்களையோ அல்லது நல்லசெயல்கள் மூலம் பொதுமக்களின் பாராட்டினையோ பெற ஒருநாளும் முனைந்ததில்லை. அவர் தான் இறக்கும் வரையிலும் கூத்தாடினார். தன்னைப் புனிதமானவராக அல்லது சலிப்பூட்டும் சாமியாராகவோ தோற்றமளிக்காமல் ஒரு புதிதான வாழ்வினை எப்பொழுதும் வாழ்ந்துகாட்டிய ஒரேயொரு யோகர்சுவாமியின் சீடர் இவர்தான். இவர் ஒரு மிகவும் சுதந்திரமான ஆவி (Freest Sprit), கொள்கை கோட்பாடுகளில் இருந்தும் கூட சுதந்திரமாக இருந்தார். அவர் ஆற்றினை ஏற்கனவே கடந்துவிட்டார் எனவே அவருக்கு ஒரு ஓடமும் தேவைப்படவில்லை!*

*யோகர்சுவாமி, ஜேர்மன் சுவாமிக்குச் சொன்ன ஒரு மிகவும் விசித்திரமான வார்த்தை, ''நீ விரும்பினதைச் செய்; உனக்கு*

*மறுபிறவி இல்லை! இந்த உலகில் உள்ள ஒரே போர் உள்ளேயே தான்! வெற்றி என்பது மாயையில் இருந்து விடுதலை பெறுவதே!''.*

ரோஸ் கோலின்வூட் (Rose Collinwood) எனும் அமெரிக்கன் இளம்பெண்மணி ஒருவர் 1971ல் ஜேர்மன் சுவாமியின் அறிமுகம் பெற்று நண்பராகவும் பக்தராகவும் பழகிப் பின் தன் நாட்டுக்குத் திரும்பி விட்டார். சுவாமி இவரைப் ''பத்மா'' என்று அழைப்பார். பத்மா என்றால் ரோஜா. 1984ல் அவர் திடீரென ஒருநாள் ஜேர்மன் சுவாமியைத் தன் கனவில் கண்டார். ஆனால், அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா எனத் தெரியாமலேயே அவரைத் தேடி தொண்டமானாறு சும்மாஸ்தன் வந்து ஜேர்மன் சுவாமியை நேரில் சந்தித்தார். அவரைப்பார்த்து அடையாளம் தெரிந்தவுடன், சுவாமி சொன்னார் ''இப்பொழுது நீ வந்திட்டாய், நான் போகலாம்'' எனக்கூறி, தான் சமாதி அடையப்போவதாகவும், அதன் பின்னர் அவர் என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் விளக்கிச் சொன்னார்.

ரோஸினால் நம்பமுடியவில்லை, ஏனெனில் சுவாமி அப்பொழுது மிகவும் திடகாத்திரமாக இருந்தார். தனது வாழ்வை முடிக்கத் தீர்மானித்தவுடன், சுவாமி மூன்று நாட்கள்வரை ரோஸ்ஐ, அதற்காகத் தயார் படுத்தினார். ரோஸ் இதை ஒரு பகிடியாக எடுத்தார்! ஆனால் மூன்றாம் நாளின் பின்னர் திடீரெனச் சுவாமி பாயில் படுத்தார், சடுதியாக அவர் செயல் இழந்தார்; அவரின் கண்களைக் கடைசியாக மூடுவதற்காகப் பக்கத்தில் ரோஸ் அமர்ந்தார்; சுவாமி, ''உமா, உமா, உமா'' எனக் கூறியபடி எந்த உலகின் தாய்சக்தியை மிகவும் அன்பாக ஆராதித்தாரோ அந்த சக்தியிடம் ஐக்கியமாகிவிட்டார்.

ரோஸ், சுவாமி சொன்னவாறு உடனேயே அவரின் இறுதிக் கிரியைகளை அங்கேயே அவரே செய்தார். பின்னர் சுவாமியின் கட்டளைப்படி அங்கு சுவாமி வாழ்ந்ததற்கான எந்த ஒரு தடயங்களும் இன்றி எல்லாவற்றையும் அழித்தார்.

பின்னர் ஒரு இறங்குப் பெட்டியில் உள்ள ஜேர்மன் மொழிப் புத்தகங்களை எடுத்துச் சென்று சுவாமியின் நண்பனான இலங்கையில் கண்டியில் குகையில் வாழ்ந்த சுவிஸ் - ஜேர்மன் நாட்டுப் புத்தபிக்குவான சுமேத என்பவரிடமும்; ஆங்கிலத்தில் சுவாமி அவர் கையால் எழுதிய குறிப்புப் புத்தகங்களை, சுவாமியின் மிக நெருங்கிய நண்பரும், பக்தருமான மாணிக் சந்திரசாகராவிடம் கொழும்பில், சுவாமி கூறியபடி கையளித்து விட்டு அவர் தன்நாடு திரும்பினார்.

சில மாதங்களின் பின் வடமராட்சிப் போர் நடவடிக்கைகள் இந்த ஆசிரமத்தின் பிரதேசத்தூடாகச் சென்ற பொழுது சுவாமியின் சும்மாஸ்தனும் இலங்கை இராணுவத் தாங்கிகளால் முற்றிலுமாகத் தரைமட்டமாக்கப்பட்டது. இதைத்தான் இந்தச் சுவாமியும் பெரிதும் விரும்பினார்! ஏன்னெனில் ஒரு ''திறமையான வேட்டைக்காரன் தன் தடயங்கள் ஒன்றையும் விட்டுவைக்கான்'' என அவருக்கு நன்கு தெரியும், சுவாமியும் வாழ்ந்தவாறே இறந்தார்.

ஜேர்மன் சுவாமி இலங்கையில் பல புகழ்பெற்ற மனிதர்கள் பலரைச் சந்தித்து மிகவும் நட்புடன் பழகியுள்ளார். அந்நாள் அருங்காட்சியகத்தின் ஆணையாளர் ராஜா டி சில்வா, பிரபல சிங்கள நடனக்கலைஞர் சித்திரசேன, இலங்கையின் சிறந்த திரைப்பட இயக்குனர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், நடிகர் காமினி பொன்சேகா போன்றவர்களும் அடங்குவர். ராஜா டி சில்வா பின்னாளில் *"Sigiriya and its Significance"* என்ற நூலினை எழுதுவதற்குத் தான் ஜேர்மன் சுவாமி - கௌரிபாலாவிற்குக் கடமைப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர் இலங்கைத் திரைப்படத் துறைக்கு சர்வதேச மட்டத்தில் புகழ்சேர்த்த திரைப்பட வசனகர்த்தா, இயக்குனர், தயாரிப்பாளர் ''மாணிக் சந்திரசாகரா'' *(Manik Sandrasagara)*. இவர் 1971ம் ஆண்டு தொடக்கம் சுவாமியின் இறுதிக்காலம் வரை அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். இவரின் சுவாமியுடனான தொடர்புபற்றிக் கூறாவிடில், இத் தொகுப்பு பூரணமாகாது!

சுவாமியின் பூர்வீகம், அவரின் ஆழம், ஆளுமை, ஆன்மிகம், சமய தத்துவ அறிவு, அதன் விளக்கங்கள், தன்மை, நடைமுறை, பயிற்சிகள், நட்பு வட்டம் போன்ற பலவற்றை மிக நன்கறிந்த மிகச்சிலரில் இவர் முதன்மையானவர் போல் காணப்படுகிறார். இவர்தான் சுவாமியின் இறுதி விருப்பத்தினை நிறைவேற்றிய ரோஸ் கோலின்வூட் என்ற பெண்மணியை 1971இல் சுவாமியிடம் அறிமுகப்படுத்தியவர். இப் பெண்மணி மூலம்தான் சுவாமியின் இறுதி விருப்பப்படி, அவர் தன் கையால் எழுதிய ஆங்கிலத்தில் உள்ள குறிப்புப்புத்தகங்களையும், அவர் பதிப்பித்த (Summa Irukka Suttiram) என்ற நூலையும் அதில் அவர் கைப்பட எழுதிய குறிப்புடன், இவர் பெற்றுக் கொண்டார்.

மாணிக் சந்திரசாகரா பின்நாட்களில் சுவாமியைப் பற்றியும், அவருடன் தனக்குள்ள தொடர்புகள் பற்றியும், அவருடன் சென்ற சிகிரியா, யாழ்ப்பாணம்-கதிர்காமம் பாதயாத்திரைகள் பற்றியும், நினைவுக் கட்டுரைகள் பலவற்றை, சுவாமியின் மீது அபரிமித பக்திகொண்டு, அவரின் நினைவுநாட்களில் விரிவாக எழுதியுள்ளார். சுவாமியின் மறைவுக்குப் பின்னர் அவர்வழியில் யாழ்ப்பாணம்-கதிர்காமம் கரையோரப் பாதயாத்திரையை, இலங்கையில் போர்க் காலங்களில் கூட பல சிக்கல்கள், சிரமங்கள் மத்தியில் இவர் முன் எடுத்து நடத்தியவர்.

சுவாமி தன்னையும் சில நபர்களையும் சிகிரியா உச்சிக்கு வழிகாட்டி அழைத்துச் சென்று அங்குள்ள சிங்க பூமியில் (Lion plateau) இருந்து அம் மலையின் உள்கிடையான குறியீடு கருதுகோளை (esoteric symbolism of the Rock) விளங்கப்படுத்தி உச்சியில் ஆடிய நடனமே, தான் பின்பு காசயப்பா மன்னரின் கதையை அடிப்படையாக கொண்டு எடுத்த "God King" என்ற ஆங்கிலப்படத்திற்கு கருவானதாகவும், கூறியுள்ளார்.

இவர், சுவாமியை அடிப்படையாகவைத்து எழுதிய "Earthman" என்ற நாவலின் உரிமம்பெற்று அதைத் திரைப்படமாக எடுக்க நடவடிக்கைகள் எடுத்தார், ஆனால் அது முற்றுப்பெறவில்லை. இவரும் எதிர்ப்பாரதவாறு தன் நடுத்தரவயதில் 18 மே 2008 இல் இயற்கை எய்தினார்.

சுவாமியில், 'சுவா'; என்பது சுயம்; 'மி' என்பது மனிதன், சுவாமி என்பதன் பொருள் 'மனிதன் சுயமாக இருப்பது'. எனப் பொருள்படும் என இவருக்கு ஜேர்மன் சுவாமி விளக்கியுள்ளார்.

மாணிக் சந்திரசாகரா ஒரு சம்பவத்தைக் கூறி அது சுவாமியின் சித்தி அல்லது நம்பமுடியாத ஒரு அதிசயமோ என ஐயம் அடைகிறார்.

ஜேர்மன் சுவாமி தனது கொழும்பு வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்த நேரத்தில், இவரின் நண்பரான இலங்கை வானூர்தி விமானி *(Air Ceylon-Captain)* லெஸ்லி டீ சில்வா வந்தபொழுது, ஜேர்மன் சுவாமி கதவினைத் திறந்து பதிலளித்தார். தான் அங்கு இல்லாததால் அவர் உடனே திரும்பிவிட்டார். மறுநாள் அவர் தொலைபேசி அழைப்பில், யார் கதவினைத் திறந்தது என வினவியபோது; ஜேர்மன் சுவாமி பற்றிய விவரம் தெரிவித்து அவருடன் தன் நெடுநாளைய நட்பினை விவரித்தார். அப்பொழுது அந்த விமானி ஒரு விசித்திரமான கதை ஒன்றை இவரிடம் சொன்னார். ''நான் ஒருநாள் யாழ்ப்பாணம் பலாலியில் இருந்து இரத்மலானை வரும் விமானத்தின் விமானியாக இருந்தபொழுது; ஒரு ஐரோப்பிய சுவாமி ஒருவர் விமானத்தில் பயணித்தார். அன்று விமானம் தாமதமாகப் புறப்பட்டதால், அந்தச் சுவாமி, தான் வெளிநாட்டில் இருந்துவரும் கனடாநாட்டுத் தூதுவரை ஒரு மணிநேரத்தில் வரவேற்கவேண்டும் என்பதால், கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தன்னை இறக்கிவிடுமாறு நெருக்கடி தந்தபொழுது; நான் சிரித்தவாறு இரத்மலானையில் இருந்து ஒரு வாடகைவண்டி *(Taxi)* பிடித்துச் செல்லும்படி அறிவுறுத்தினேன். விமானம் கிளம்பிக் கொழும்பை அண்மித்தபொழுது, சற்றும் எதிர்பாராத காலநிலை மாற்றத்தால் உண்டான கடுமையான புகார்களினால், விமானத்தைக் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இறக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று! விமானத்தைவிட்டு இறங்கும்பொழுது அந்த ஐரோப்பிய சுவாமி எனக்கு நன்றி தெரிவித்துவிட்டு நடந்து அப்பால் சென்றார். என்னால் இந்த நிகழ்வை நம்பமுடியாமல் ஊமையாகிவிட்டேன். அதன்பின் நான் இந்தச் சுவாமியைக் கண்டதில்லை. ஆனால் சில வருடங்களின் பின்

நேற்று உங்கள் வீட்டுக் கதவருகில் கண்டபொழுது, எனக்கு அந்த விமானச் சம்பவம் நினைவுக்கு வந்தது'' என்று கூறினார். அன்று மாலையில் விமானி லெஸ்லி தன்வீட்டிற்கு வந்து சுவாமியுடன் சிவாஸ் ரீகல் பானம்பருகி மகிழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பொழுது, ஜேர்மன் சுவாமி எங்களுக்கு, ''எமது வலுவான நம்பிக்கையாலும், ஆழ்ந்தபக்தியாலும் தூண்டப்பட்டு, எமது சாதாரண, பழக்கமான மன-உள்ளுணர்வு, சடுதியான ஒரு அதிஉயர் மனோநிலைக்கு மாற்றமுறும் பொழுது இப்படியான நிகழ்வுகள் நடப்பதற்குச் சாத்தியம் என்றும்; இப்படியான உயர்நிலையை முற்காலங்களில் பல ஞானிகள் அவர்களைச் சித்திரவதைப்படுத்தும் பொழுது அல்லது உயிருடன் எரிக்கும் பொழுது அடைந்தார்கள்'' என விளக்கிக் கூறினார்.

ஜேர்மன் சுவாமியின் பல குறிப்பேடுகள், அவருக்கும், அவரது குருவான யோகர்சுவாமிக்கும் இடையில் நடந்த பல சந்திப்புக்கள் பற்றியும் இந்த குரு-சீட பாரம்பரியம்பற்றிய அடிப்படையான பல தகவல்களை கொண்டுள்ளது. இவரின் இந்தக் கருத்துக்கள் வெளியே பிரசுரமாகாமல் இந்த வழிவந்த ஒரு சிலரின் கைகளில் மட்டும் உள்ளது. ஆனால் ஒருகாலத்தில் அமெரிக்கன் நடனராக இருந்து குரு சுப்ரமுனியாக மாறிய இவராலும், அவர் உருவாக்கிய சைவ சித்தாந்த சர்ச்சாலும், வேறு சிலராலும் மிகப் பெரியளவில் யோகர்சுவாமி பற்றிய பதிப்புகள் வெளிவந்துள்ளது. ஜேர்மன் சுவாமியின் பல குறிப்பேடுகள், வெறும் கூற்றுக்கள், வெளிப்பாடுகள் அல்லாமல் உண்மையாக சந்நியாசி சீடர்களுக்கான பெரும் வழிகாட்டியாக அமையக் கூடியது, என மாணிக் சந்திரசாகரா எழுதியுள்ளார்.

சந்திரசாகரா, சுவாமியுடனான தனது முதல்சந்திப்பு ஒரு மிகவும் அதிசயமாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார். ''நான் சுவாமிகள் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களுக்கு முற்றிலும் வேறுபாடான ஒரு மனிதராகத் தெரிந்தார். அவர் வெறும்மேலுடன், ஒரு வெண்வேட்டி உடுத்து, ஒரு சாய்ந்தகதிரையில் ஒரு நத்தார்தாத்தா (Santa Claus) போலக் காட்சியளித்து, கையில் ஒரு நாற்றம் வீசும் யாழ்ப்பாணச் சுருட்டினைப் புகைத்தபடி இருந்தார். அவரது

இடதுகையின் உள்புறத்தில் ''சும்மா இரு'' என்ற தமிழ்வார்த்தை பச்சை குத்தப்பட்டிருந்தது. நான் இதற்குமுன் இப்படியான தகமை கொண்ட ஒரு சமய--சம்பிரதாய மறுப்பாளரைக் கண்டதில்லை. நான் அப்பொழுது கையில் வாசிக்கவைத்திருந்த புத்தகமான ''ஒரு யோகியின் சுயசரிதை'' என்ற புத்தகத்தைப் பார்த்து நகைப்பாகச் சிரித்தபடி ''தன் சுயநினைப்பை அழிப்பவனே ஒரு யோகி. பின் எப்படி ஒன்றுமற்ற யோகியால் ஒரு சுயசரிதையை எழுதமுடியும்?'' *(An autobiography of a Yogi! A yogi annihilates selfhood. How then can a yogi who is a nobody writes an autobiography?)* என்று கூறினார். இதுதான் அவர் கூறிய முதல்வசனம். மேலும் நான் *"New Age"* என்ற பெயரில் பொப் டிலான் *(Bob Dylan)* மற்றும் பல அமெரிக்கன் சங்கீத சாம்பவான்களின் இசையை இலங்கையில் அறிமுகம் செய்யும் தயாரிப்பில் ஈடுபாடுள்ளதைக் கேட்டு, ''புதிய காலம்--எல்லாம் முட்டாள்தனம்! இது எப்பொழுதோ நிறைவுற்றது. எல்லாம் முடிந்துவிட்டது'' *(New Age - all balderdash! It was completed long ago. All finished)* என்று நையாண்டியாகச் சொன்னார்

இவரைப்பற்றிச் சுவரசியமான மேலும் பலகதைகள் உண்டு! அவற்றில் இவரின் நெருங்கிய நண்பரும், யோகர்சுவாமியின் வேறொரு சீடரான புலிக்குட்டி சுவாமி இவருடனான தன் அனுபவங்கள் பற்றி எழுதிய சில சம்பவங்களை இங்கு பகிர்வதும் பொருத்தமாகவிருக்கும்.

1950ம் ஆண்டளவில் கதிர்காமம், தற்போதுள்ளமாதிரி அல்லாது, சனப்புழக்கம் மிகவும் குறைவான நேரம், தார் போடாத, மண்ணாலான பள்ளம் திட்டியான மோசமான ஒரு தெரு மட்டுமே திசமகராமாவில் இருந்து வந்தது. அப்பொழுது அங்கே காவல் நிலையம், மற்றும் கடைத் தெருக்கள் இல்லை. திருவிழாக்காலங்களில் மட்டும் பெரும்பாலும் வடக்கிலும், மலையகத்திலும் இருந்து தமிழ்ப்பக்தர்கள் வருவார்கள். இதைத் தவிர மற்றநேரங்களில் வெறிச்சோடி இருக்கும். பிரதான கோவிலில் இருந்து சற்றுத் தொலைவில், மாணிக்ககங்கைக்குப் போகும் வழியில் ''அல்விஸ் அப்பு'' என்பவரின் சிறிய

தேநீர்கடையின் முன்னுள்ள மடக்குக் கதிரைகளில்தான் ஜேர்மன் சுவாமியும், அவரின் நண்பர்கள் வட்டமும் இருப்பார்கள். சுவாமி பெரும்பாலும் யாழ்ப்பாண மணிலாச்சுருட்டினை விரும்பிப் புகைத்தபடி இருப்பார். அப்பொழுது ஒருநாள் கிராமவாசி ஒருவர் சற்றுப் பதற்றத்துடன் வந்து இவர் முன்னுள்ள வாங்கில் அமர்ந்து, ''சுவாமி, கதிர்காமதெய்வத்துக்கு இரு மனைவிகள் உண்டென்றால், நாமும் அப்படிச் செய்யலாம்தானே?'' எனக்கேட்டார். சுவாமி, அருகில் இருந்த எனக்குக் கண்சாகை காட்டிவிட்டு, அவரைப்பார்த்து, ''நீ ஏன் இதைக் கேட்கிறாய்'' என வினவினார். அதற்கு அம்மனிதர் சிறிது நேரம் உடம்பை வளைத்து நெளித்து கொஞ்சம் தைரியம் வந்தபின் கூறினார், ''நான் திருமணமாகிவிட்டேன், அத்துடன் ஒரு வைப்பாட்டியும் வைத்திருக்கிறேன். இது என் மனைவிக்குத் தெரிந்து வீட்டிலை ஒரே பிரளயம்'' என்றார். சுவாமி மகிழ்வாகச் சிரித்து, அவரை அக்கறையுடன் பார்த்து ''ஆமாம், நீ செய்யலாம், கடவுள்தான் மனிதனைப் படைத்தது என்றால்; கடவுள் செய்தால்; மனிதனும் செய்யலாம். தவறு ஒன்றுமில்லை, ஆனால் இரண்டிற்கு மேல் செய்யாதே!'' எனச் சொன்னார்.

இன்னொரு நாள் அதே இடத்தில், ஒரு பரிதாப மனிதன், சுவாமியிடம் குழப்பத்துடன் கேட்டார், ''உலகத்தில் ஏன் இத்தனை கொடுமைகள் நடக்கிறது?'' என. சுவாமி அவரின் சமயத்தைக் கேட்டார், அதற்கு அம் மனிதர், ''கிறித்தவம்'' எனச் சொன்னார். சுவாமி கேட்டார், ''இந்தப் பிரச்சனையான உலகத்தைப் படைத்தவன் யார்?'' என. ''கடவுள் தான் இதைச் செய்ததாகச் சொல்லப்படுகிறது'' என்றார் அம் மனிதர். சுவாமி சொன்னார், ''இது என்ன மாதிரியான படைப்பு?, இதில் பல பிழைகள் உள்ளது; நாம் மனிதர்கள் செய்வது போல!''. அதற்கு அம் மனிதர் ஒரு நல்ல கிறித்தவர் போல பதில் சொன்னார், ''கடவுளின் வேலை பரிபூரணமானது'' என. அதற்கு சுவாமி உடனே சொன்னார், ''அப்படியாயின் நீர் நம்பும், இந்த மர்மமான கடவுளின் படைப்பில் ஏன் குறை காண்கிறாய்'' என, அம் மனிதர் வாயடைத்துப் போனார்.

ஒரு ஆடி மாத திருவிழாச் சமயம், ஜேர்மன் சுவாமி, கதிர்காமக் கோவிலின் பிரதானவாயிலின் முன் நின்று பிச்சைப் பாத்திரம் ஏந்தியபடி, சிங்கள மொழியில் ''தர்மம் போடுங்கள்'' எனக் கூவியபடி நின்றிருந்தார். நிறைய சில்லறைக்காசுகள் அவர் தட்டினை நிரப்பியது! ஏனெனில் அவர் வெளிநாட்டு வெள்ளைக்காரப் பிச்சைக்காரர் என்பதால். அப்பொழுது ஒரு உயர்வான உடை அணிந்த முதலாளி போன்ற ஒருவர் வந்தார், அப்பொழுதும் இவர் வழமைபோலக் கூவினார். அந்த மனிதர் இவரைப் பார்த்து, சங்கடப்பட்டு தனது மேல் சட்டைப்பையில் தட்டிப் பார்த்துவிட்டு, தன்னிடம் சில்லறை இல்லை, (No Change) எனக் கூறினார். அதற்கு இவர் உடன் மறுமொழியாக, பக்கத்தில் நின்ற நரிக்குட்டிக்கு கண்ணைச் சிமிட்டிவிட்டு, அவரிடம் ஒரு பாசாங்கான பணிவுடன் சிரித்தபடி, "we also accept big Notes!" என.

பின்னொரு நாள் ஒரு பக்தர் ஜேர்மன் சுவாமியை அணுகி; தான் முதல் முறை கதிர்காமம் கோவிலுக்கு வந்தபோது ஒரு வரம் கேட்டு அது நிறைவேறினால், அதற்குப் பிராயச்சித்தம் செய்வதாக உறுதி எடுத்ததாகவும், அதன்படி தன் வரம் நிறைவேறியதால் அதற்குப் பிரதியாக இப்பொழுது நூறுரூபாவைக் (அந்தக் காலத்தில் அதன் பெறுமதி மிகவும் பெரிது) கொடுக்கவுள்ளதாகவும், அதனைப் பூசைக்கு கொடுப்பதா அல்லது பிச்சைக்காரனிடம் கொடுப்பதா என்று தெரியாமல் குழம்பியுள்ளதாகக் கூறி இவரிடம் அறிவுரை கேட்டார். அதற்குச் சுவாமி அங்கே எரிந்து கொண்டிருக்கும் கற்பூர நெருப்பைக் காட்டி, அப்பணத்தினை அந்த எரியும் நெருப்பில் போடுமாறு சொன்னார். அதைக் கேட்ட அம் மனிதன் பயந்து தடுமாறி, ''எப்படி நான் செய்யலாம்! இது பணம்'' எனக் கூறினான். சுவாமி விளங்கப்படுத்தினார்; நீ, கதிர்காம தெய்வம் உனது கோரிக்கையை நிறைவேற்றியதற்கு, நன்றிக்கடன்தான் கொடுக்கவேண்டும், அதை விடுத்து இந்தக் காசைக்கொடுத்து மேலும் புண்ணியம் சேர்க்க நினைக்கக்கூடாது என்று.

சில வருடங்களின் பின்பு, வழமைபோல இவர்கள் அல்விஸ் அப்பு தேநீர் கடையில் இருக்கும்பொழுது, அதே மனிதன் சுவாமியை அணுகித் தான் யாரெனத் தெரிகிறதா எனக் கேட்டார்?. சுவாமி தெரியவில்லை எனக் கூற; முன் நிகழ்ந்த நூறுரூபா சம்பவத்தைச் சொல்ல; சுவாமிக்கு ஞாபகம்வந்து, அன்று என்ன செய்தாய் எனக் கேட்டார். அதற்கு அம் மனிதர் சொன்னார், ''பல சிந்தனைகளின் பின்னர் நீங்கள் சொன்னபடியே அந்தப் பணத்தை எரியும் கற்பூரத் தீயில் போட்டேன். இன்று நான் மறுபடியும் இங்கு வந்திருக்கிறேன்; நான் இப்பொழுது மகிழ்வாக வாழ்கிறேன். ஏனெனில்; அதன் பின்னர் தான் நான் மிகவும் வசதிபடைத்தவனாக உயர்ந்துள்ளேன்'' என்றார்.

ஜேர்மன் சுவாமி, 'சும்மா இருக்க சூத்திரம்' என்ற தனது நூலில், ***''சும்மா இரு''*** என்பதனைப் பின்வருமாறு விளக்குகிறார்:-

***காய மௌனம் (Body Silence)*** என்பது; ஒரு வேலையும் இல்லாமல், ஒரு பிரயோசனம் இல்லாமல், எந்த நன்மையும் இல்லாமல், எந்த தடையும் இல்லாமல் இருத்தல்.

***வாக்கு மௌனம் (Word Silence)*** என்பது; பேச்சற்று, அமைதியாக சத்தமின்றி இருத்தல்.

***மனோ மௌனம் (Mind Silence)*** என்பது; எண்ணங்கள் அற்று, காரணங்கள் அற்று, எதிர்பார்ப்புகள் அற்று, இலக்குகள் அற்று இருத்தல்.

***சுத்த மௌனம் (Pure Silence)*** என்பது; ஆத்மாவில் இருத்தல், வேறு கவனமற்று, ஏதும் உருவகமாகாமல், அமைதியாய் இருத்தல்.

***பர மௌனம் (Supreme Silence)*** என்பது; எந்த ஒரு விருப்புமின்றி எந்தவொரு பற்றுதலுமின்றி, மனமற்றநிலையில் இருத்தல்.


இவற்றைத்தான் இந்த பூரணமான ''சும்மா இரு'' சொற்றொடர் குறிக்கிறது.



*யாழ்ப்பாணம் செல்வச்சன்னதி கோவில் முன்னிலையில் ஜேர்மன்*
*சுவாமி கவுரிபாலா கிரி தன் சகாக்களுடன்*
*German Swami Gauribala Giri before **Selvasannidhi Murugan Kovil**,*
*Jaffna with associates MK Ganapathypillai (left) and*
*Cinna Swami (centre). Photo September 1983 by Patrick Harrigan*



*ஜேர்மன் சுவாமியின் சும்மாஸ்தன் ஆச்சிரமம் செல்வச்சந்நதி*
*German Swami's kutti residence, the heart of his*
***Selva Sannidhi** ashram Summasthan*



# நரிக்குட்டிசுவாமிகள் *(1930-1994)*
## *Narikutti Swami of Thiruvannamalai*

*இவர் ஒரு ஆஸ்திரேலியா நாட்டவர்; கட்டிடக்கலைஞர் (Architect). யோகரின் குட்டிக்கூட்டத்தில் இவர் தான் நரிக்குட்டி!*

*இவரின் பெயர் ''பர்ரி ஓவென் வின்ட்சர்'' (Barry Owen Windsor), 1930ம் ஆண்டு சிட்னியில் பிறந்தவர். தகப்பனார் ஒரு பள்ளி ஆசிரியர். தாயார் ஒரு சங்கீத ஆசிரியர்; எதிர்பாரதவிதமாக அவர் தன் 45வது வயதில் புற்றுநோயால் இறந்துவிட்டார். அப்பொழுது பர்ரிக்கு 10 வயது; 5 வயதில் ''நோயல்'' என்ற ஒரு தம்பியும் இருந்தான். தாயாரின் இறப்பு குடும்பத்தை உடைத்து சகோதரர்கள் இருவரையும் மிக நெடுங்காலம் பிரித்தது. பர்ரி தனது பாட்டி, மாமன் மாமியாரால் சிட்னியிலும்; தம்பி நோயல் தகப்பனாரால் வேறு ஒரு கிராமத்திலும் வளர்க்கப்பட்டனர்.*

*இளவயதில் தாயின் இழப்பும், தகப்பனதும் தம்பியினதும் பிரிவும் இவர் மனதில் பெரும் தாக்கத்தை உட்படுத்தியிருக்கும்! இப்படியான சூழ்நிலை தாக்கங்களினால் தான், பின்னாட்களில் இவர் மேற்கத்திய வாழ்வைவிட்டு கிழக்கத்திய ஆழ்மனத் தேடுதலால் உண்டாகும் சந்தோசத்தினை நோக்கிப் போயிருக்கலாம் என்று கருதப்படுகிறது.*

பர்ரி, சிட்னியில் கட்டிடக்கலை (Architecture) கல்வி பயின்று அத்துறையில் வேலை பார்த்தார். தம்பி நோயல், விமானப் படையில் சேர்ந்து விமான இயந்திரவியலாளர் ஆனார்.

பர்ரி, 1950களில் சிட்னியில் தியோசோபிக்கல் (Theosophical) நூல்கள் விற்கும் நிலையத்துடன் மிகுந்த தொடர்புகொண்டு, ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியன் ஆன்மீக வளர்ச்சி அமைப்புகளுடன் இணைந்து கொண்டார். இந்திய தத்துவ ஞானம், அத்வைத வேதாந்தம் போன்றவற்றில், பெரிதும் ஈடுபாடு கொண்டு கலாநிதி ஆனந்தா குமாரசுவாமி போன்றோரின் நூல்களை வாசித்தார்.

1957ம் ஆண்டு தன் நண்பரான அட்ரியன் ஸ்நோக்ராஸ் (Adrian Snoktrass) உடன் சேர்ந்து ஒரு கப்பலில் இந்தியா செல்லப் புறப்பட்டார். ஆனால் வழியில் இலங்கையில் கப்பல் தரித்து நின்றபோது, கரையில் ஒரு புத்ததுறவியைக் கண்டனர். அத்துறவி, தான் இவர்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறி இருவரையும் இறக்கி கதிர்காமம் அழைத்துப் போனார். அங்கு இருவரும் யோகர்சுவாமியின் சீடர்களான, சுவாமி கௌரிபாலா என்ற ஜேர்மன் சுவாமியையும், சந்தசுவாமியையும் (Lord Soulbury's son) சந்தித்தார்கள். பர்ரி இலங்கையிலேயே தங்கி ஆத்மீகத் தேடலில் ஈடுபட்டார். நண்பரான அட்ரியன் ஸ்நோக்ராஸ், இவர் கதிர்காமத்தில் தங்கியிருந்த காலத்தில் பூனைக்குட்டி என்று அறியப்பட்டவர். பின்பு இவர் இந்தியா சென்று அங்கு பௌத்தமதம், மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டிடக்கலை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பின்னர் ஆஸ்திரேலிய திரும்பி கட்டிடக்கலைஞராக, பேராசிரியராகப் பணி புரிந்து, உலகப் புகழ்பெற்ற பல கட்டிடக்கலை சம்பந்தமான நூல்களை எழுதினார்.

ஜேர்மன் சுவாமி கௌரிபாலா தான், பின்பு பர்ரியையும், சோல்பரி பிரபுவின் மகனையும் யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று யோகர்சுவாமிகளிடம் அறிமுகம் செய்து வைத்தார். ஆனால், பர்ரிஇன் முடிவிடம் இலங்கையில் யோகர்சுவாமியின் ஆசிரமம் ஆகவே இருந்தது.

*இவர் யோகர்சுவாமி இருக்கும் வரை, அளவெட்டியில் ஆனந்தா ஆசிரமத்தில் இருந்து யோகர்சுவாமியின் வழிகாட்டலின்படி ஆத்மீக சாதனைகளில் ஈடுபட்டார். 1964ல் யோகர்சுவாமி மறைந்த பின்பு, இவர் இலங்கையில் இருந்து இந்தியாவிற்குப் பலமுறை ஆராய்ந்து அனுபவம் பெற்றுவரச் சென்று வந்தார். இறுதியாக 1970ல் இலங்கையை விட்டு தனது இறுதி இடமாக திருவண்ணாமலையைத் தேர்ந்து ரமணமகரிசி ஆசிரமம் அண்மையில் உள்ள மலையுடனான ''லட்சுமி அம்மா குகை'' என்று அழைக்கப்பட்ட ஒரு குகைப் பொந்தில் தன் இறுதிக்காலம்வரை வாழ்ந்தார்.*

*யோகர்சுவாமியின் அணுக்கத் தொண்டர்களான நவரத்தினம் தம்பதியினர் 1983ம் ஆண்டு இலங்கை இனக்கலவரத்தின் பின்னர் பெரும்பாலும் திருவண்ணாமலை ரமணமகரிசி ஆசிரமத்தில் வசித்து வந்தார்கள். நான் அவர்களைப் பலமுறை சென்று பார்த்துவந்தேன். அப்பொழுது ஒருமுறை திருமதி. நவரத்தினம், நரிக்குட்டி சுவாமியை எனக்கு அறிமுகம்செய்து வைத்தார்கள். பின்பு இவரை நான் சில தடவைகள் நேரில் பார்த்ததுண்டு. ஆனால் நான் அவருடன் பெரும்பாலும் பேசியது இல்லை ஒரு புன்முறுவலோடு சரி. அவர் ஒரு சாதாரண நாலுமுழம் வேட்டி உடுத்து தோளில் ஒரு வெண் சால்வை மட்டும் அணிந்திருப்பார்.*

*இவர், மறைந்த முன்னைநாள் இலங்கை காந்திய இயக்கத்தின் தலைவரும், கட்டிடக் கலைஞரும் -- நகர வடிவமைப்பாளருமான திரு. டேவிட் ஐயாவின் (S.A. David) நெருங்கிய நண்பரும் ஆவர். டேவிட் ஐயா சென்னையில் இருந்த காலத்தில் என்னுடன் நெருங்கிப் பழகியவர். 1986ம் ஆண்டில், டேவிட் ஐயா பாதுகாப்பிற்காக சென்னையை விட்டுச் சென்று சிலகாலம் திருவண்ணாமலையில் தமது பழைய நண்பனான நரிக்குட்டி சுவாமிகளுடன் தங்கியிருந்தார்.*

*அப்பொழுது டேவிட் ஐயாவைப் பார்க்கச் சென்றபொழுது தான் ஒரு தரம் மட்டும் நரிக்குட்டி சுவாமியுடன் உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அது என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நல்ல அனுபவமிக்க சமபவமாகும்.*

அவர் அங்கு தேநீர் தயாரித்துத் தந்தார், இருவரும் தேநீர் அருந்தியவாறு அவரது குகைவாசலில் உள்ள கருங்கற்கள் மேல் அமர்ந்தவாறு, மூன்று மணித்தியாலங்கள் அவருடன் மிக ஆழமாக, அன்னியோன்யமாக அளவளாவினேன். அப்பொழுது தான் அவரைப் பற்றியும், அவரது நண்பர்களாகிய யோகர்சுவாமியின் மற்றைய குட்டிகளைப் பற்றிய தகவல்களையும், யோகர்சுவாமி யார், அவரின் தீர்க்கதரிசனகள் பற்றியும் மிக விரிவாகவும், தெளிவாகவும் சொன்னார்; மிகவும் தூய தமிழில்! எனக்கு அவரின் மிக ஆழமான தமிழ் அறிவும், உரைநடையும் ஆச்சரியமளித்தது. பேச்சினில் சில தேவார, திருவாசக, திருமுறைகளையும், திருக்குறளையும் சொல்லி விளக்கும் பொழுது எனக்கு ஒரு வியப்பும் புல்லரிப்பும் தோன்றியது!

தனக்கு யோகர்சுவாமி ஏன் நரிக்குட்டி எனப் பெயர்வைத்த காரணத்தை விளக்கிச் சொன்னார். தன் பெயர் வைக்கும்போது தனக்கு அப்பொழுது அதன் பொருள் விளங்கவில்லை என்றும்; இப்பொழுது தான் தெளிவாகப் புரிகிறதாகவும் கூறினார்.

நரிக்குட்டி சொன்னார் என்னிடம்; தன் கண்களைப் பார்க்கும்படி!. பார்த்தேன்; அவர் கண்கள் இளம்பச்சை நிறத்திலான கண்விழிகள் கொண்டவை!; தனது கண்புருவத்தைப் பார்க்கச் சொன்னார்! அவை அடர்த்தியான புருவமயிர்கள் கொண்டது. நரிகளுக்கு இருக்கும் கண்ணும், புருவமும் போலக் காட்சியளித்தன! பின்பு சொன்னார், நான் இப்பொழுது எங்கு வசிக்கிறேன் பார் என்றார்! குகைப்பொந்தில் எனக் கூறினேன். ஆகா! இப்பொழுது புரிகிறதா யோகர்சுவாமி எனக்கு வைத்த பெயர்! நரி, பொந்தில்தானே வசிக்கும் எனக் கூறிச் சிரித்தார். இது 1960களுக்கு முன் வைத்த பெயர். பல வருடங்களின் பின்புதான், இந்தக் குகைப்பொந்தில் வசிக்கத்தொடங்கிய பிறகுதான் அதன் பொருள் புரிந்தது என்று கூறி வியப்படைய வைத்தார்.

என்போலவே யோகர்சுவாமி மறுசீடர்களுக்கு சூட்டிய பெயரும் அவரின் கூற்றுப்படி உண்மையாயின என்றார்! யானைக்குட்டி என்று பெயர் வைக்கப்பட்டு சந்தசுவாமி என்றும் சோல்பரி சுவாமி என்றும் அழைக்கப்பட்டவர், தற்போழுது இங்கிலாந்தில் காட்டுப்

பிரதேசத்தில் வாழ்கிறார். யானை காட்டில்தானே வாழும்! அதே போல் புலிக்குட்டி, பன்றிக்குட்டி, என்று பெயர் குறித்தவர்களும் அப்படியே அவ்வாறான பெயர்களுக்கேற்றவாறு இருக்கிறார்கள் என்று விளக்கினார்.

பின்பு சொன்னார், யோகர்சுவாமிகளின் கூற்றுக்கள் தீர்க்கதரிசனமானவை! உடன் புரியாதது! அவை அனைத்தும் நிதர்ச னமாக முப்பது/நாற்பது வருடங்கள்வரை ஆகும் எனக் கூறினார்.

மேலும் நரிக்குட்டி சுவாமிகளைக் காணவந்த சிலரின் உரையாடல்கள், பதிவுகளை இங்கு பார்ப்பதன் மூலம் அவரின் நிலையை மேலும் அறியலாம்:-

***அவையாவன:***

நான் ஆஸ்திரேலியாவைக் கைவிட்டு கப்பலில் வெளியேறியதன் காரணம்; அங்கு பணம் மட்டுமே எண்ணப்படுகிறது, நேரம் அல்ல! இலகுவில் காணமுடியாத ஆத்மீக சத்துணவைத் (Spiritual Nourishment) தேடியே நான் இங்கு வந்தேன்.

நான் ஆஸ்திரேலியாவில் ஒரு பயிற்சி பெற்ற கட்டிடக் கலைஞன் (Architect). அப்படியான ஒரு வாழ்க்கை எனக்கானதல்ல என்று உணர்ந்து; நான் எனது 20களில் இலங்கை சென்றேன். அங்கே யோகர்சுவாமி தான் எனது குரு. யோகர்சுவாமி 1964ல் மறைந்த பின்னர், அவர் எப்படி இங்கு வந்தாரோ, அதுபோல நான் இந்த மலைக்கு வந்தேன். அன்றில் இருந்து இங்குதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நரிக்குட்டி இந்து தத்துவத்தில் மிகவும் பரீட்சயமானவர். இவர் பல ஆஸ்திரேலியர்கள், ரமணஆசிரமம் போன்ற இடங்களுக்கு ஆத்ம தேடலுடன் வரும்பொழுது பெரும் வழிகாட்டியாக இருந்துள்ளார். நரிக்குட்டியின் உந்துசக்தியே அவரது தொடர்ந்த நூல்களின் வாசிப்பால் உருவான உள்ள வழிகாட்டலே (Inner Guidance)! அவரது பொருட்கள், அவர் வைத்திருக்கும் நூல்களும், குறிப்புத் தாள்களும் மட்டுமே!

நரிக்குட்டி பல விடயங்களில் மிகவும் கூரான ஆழமான விளக்கம் உள்ளவராக இருந்தது, எனக்கு அவர் மேலே ஒரு ஈர்ப்பினை உண்டாக்கியது. அவர் விடயங்களை மிகவும் தெளிவாக விளக்கும் வல்லமை கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் 10 வருடங்களுக்கும் மேலாகப் பல முறை சந்தித்துள்ளோம்; வழமையாக 3 மணித்தியாலங்கள் வரை மிகவும் வெய்யிலான நேரத்தில் ஒரு தேநீர் கடையில் அமர்ந்தவாறு அல்லது மலையைச் சுற்றிவரும்பொழுது! அவர்மீது மிகவும் உயர்வான மரியாதை என்னில் உண்டாகியது. எப்பொழுதும் நான் அருணாச்சலம் வரும்பொழுது அவரைத் தேடிச் சென்று சந்திப்பது உண்டு.

நரிக்குட்டி ஒரு வேடிக்கையான; உண்மையான ஒரு மிக அறிவார்ந்த முட்டாள். அவர் எதையும் நேர்மறையான நகைச்சுவையாகத்தான் பார்ப்பார். எப்பொழுதுமே அவர் ஒரு சந்தோசகரமான ஒரு குழந்தை போல் இருப்பார்.

அவர் மேலும் சொன்னார் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் பலர் இங்குவந்து வாழ்ந்தார்கள். அவர்கள் போர்க் கைதிகளாகி சித்திரவதைக்குள்ளாகி அல்லது அவர்களுக்கு நடந்த சம்பவங்களினால் மிகுந்தபல பாதிப்புக்குள்ளானவர்கள். அவர்கள் இங்கு முதலில் தங்களைப் பக்குவபடுத்திவிட்டு, பின்னர் இந்த வயதானவர் (ரமணமகரிசி) காட்டியவழியில் பயிற்சிகள்செய்து சும்மா இருந்தார்கள் (Just Being).

**அவரிடம் சிகிச்சையாளர்கள், குருமார்கள், ஆச்சாரியார்கள் பற்றிக் கேட்ட போது பின்வருமாறு கூறினார்:-**

சமய, ஆன்மீக, சிகிச்சைவாதிகளில், மிகவும் கடினமானது; யார் இவர்கள் எல்லோரிலும் உண்மையானவர்கள் என்று அறிவதே! ஏன் எனில் எல்லோரிலும் எதிர்பாராத கறுத்த மறுபக்கம் உண்டு! உனக்கு யார் பொருத்தமானவர் என்று தீர்மானிப்பது அடுத்த கேள்வி? இதற்கு விடை தேடிக்கண்டுபிடித்து இங்கு வர எனக்குப் பல காலமாயிற்று! இப்படியான குரு, ஆச்சாரியார் ஒருவரைத் தேடி தம்மைத் தொலைத்த பல நபர்களை நான் சந்தித்திருக்கிறேன். இப்படியானவர்கள் சென்ற பாதையில், நீ சென்று அலையாமல் உனக்கு உதவமுடிமாயின், நான் உனக்கு விளக்குகிறேன்.

சமயத்தின் ஒரு பங்கு; முதலில் ஒரு குறித்த சில மக்களை ஒன்றாக்கி, சேர்த்துவைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பகிரப்பட்ட ஒரு நோக்கமும், கருத்தும் இருப்பதனை உறுதி செய்வது. கிரியைகள், சமய மந்திரங்கள், பிரார்த்தனைகள், மாலைகள் உருட்டுவது போன்றவற்றால் மக்களை, மனோவசியப்படுத்தி ஒன்றாக ஒட்ட வைத்திருப்பது. ஒவ்வொரு சமயமும், ஒரு வகையான நம்பிக்கையுடைய கூட்டமும் கூட, வாழ்க்கையில் உள்ள அனைத்திற்கும் விளக்கம் கொடுத்து, எப்படி வாழ்க்கையில் உயர்வது, வேலை செய்வது, எதை உண்பது, எதை உண்ணக்கூடாது என்று சொல்கிறது. சமயம் வாழ்வில் எல்லாவற்றிற்கும் ஒரு பொதுவான விளக்கத்தைக் கொடுத்து வாழ்க்கையின் முக்கிய நோக்கம் அடுத்த பிறவியில் நல்ல வாழ்வு கிடைக்கும் என்ற விதியில் நம்பிக்கை கொள்ள வைப்பதே!

இந்த நம்பிக்கையின் நோக்கம் பெரும்பாலும் பயத்தின் அடிப்படையிலே தான்! இந்த பயத்தின் மூலமே சமயங்கள் இந்த உலகத்தில் மிக நெடுங்காலம் தெளிவாக ஒரு வழிமுறையைக் கடைப்பிடித்தன. ஆனால் அவை நிறுவனங்கள் ஆகவும், சில வழிகளில் அவை பள்ளிக்கூடங்கள் ஆகவும் காணப்பட்டன. மேலும் அவைதான் பல முரண்பாடுகளுக்கும் காரணமானது.

இந்தக்காலத்தில், வழிதெரியாத பலர், சமயத்தை நோக்கிப் போவதில்லை, இங்கே வருகிறார்கள். அவர்கள் இங்கு வருவதன் நோக்கம் என்னவென்றால் இங்கு இந்தியாவில் எங்கு திரும்பிப் பார்த்தாலும் சமயம்தான் முதலில் வெளிப்படையாகத் தோன்றுகிறது; இது மேற்கத்தய நாடுகளில் காணாமுடியாதது. இங்கு பல ஆயிரக்கணக்கான கடவுள்களும். பெண் தெய்வங்களும் உண்டு. பெரும்பாலான வெளிநாட்டுப் பயணிகள், தங்களுக்கெல்லாம் ஏதோ பொதுவானதொன்று இந்தியாவில் இருப்பதாகவும் எல்லாச் சமயங்களுக்கும் மூலகாரணமான ஏதோ ஒன்று எல்லோரையும் ஒன்றுபடுத்தி இணைப்பதாக உணர்கிறார்கள். இந்தியாவில் எல்லோரையும் ஒன்றுபடுத்ததி இணைக்கும் அடிப்படையான காரணம் சமயத்தில் அல்ல, ஆனால் தம் உள்ளயே இருப்பதாக விரைவில் உணர்வு

*பெறுகிறார்கள். ஆத்மீகம் உளவியலானது! ஆனால் கடவுள் எல்லார் உள்ளும் இருக்கிறார் என்று இதனை இலகுவாகச் சொல்லிவிட முடியும். ஆத்மீகம்தான் எங்களின் உயர்வு நிலையாகும். இதுதான் நாம் அதுவாக இருக்கும் உயர்ந்த உணர்வாகும். கடவுள் உண்மையாக வெளியில் இல்லை அவர் எங்களுக்கு உள்ளேயே உள்ளார்!*

**நான், இதை உனக்கு விளக்கிக்காட்ட முயல்கிறேன்! எனக் கூறி மேலும் கூறினார்:**

*ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர் (Shakespheare) தன் வரிகளில் சொன்னார் ''உன் ஆத்தமாவே உண்மையானது'' (To thine own self be true). இதையே தான் இங்கிருந்த வயதானவர் (ரமணமகரிசி) உன்னையே கேட்கும்படி, ''நான் யார்?'' (Who am I?) என?. கிரீஸ் (Greece)இல் உள்ள அடெல்பி கோவிலில் (Temple of Adelphi) உள்ள முகப்பில் இரு வசனங்கள் எழுதப்பட்டுள்ளன; ''உன்னையே நீ அறி'' (Know the Self), ''ஒன்றும் பெரிதல்ல'' (Nothing to excess), என்ற இரண்டுமே.*

*கிறித்து சொன்னார் ''கடவுளின் இராச்சியம் உள்ளேயே'' (Kindom of God is within) இதைவிட மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் வேறு என்ன இருக்கமுடியும்?, இவை வேறு கலாச்சாரங்களிலும், காலங்களிலும் வந்தவை, ஆனால் அடிப்படையாக ஒன்றையே சொல்கின்றன.*

*ஆனால், அங்கு பல படிநிலையான பக்குவநிலைகள் உண்டு. உலகின் பெரிய பாரம்பரிய சமயங்களில் உள்ள பெரும்பாலான மக்களின் அடிப்படையான நம்பிக்கைகள், உண்மையாகப் பெரும்பாலும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இன்றுவரைக்கும் மாறாது இருக்கிறது. இது மேலும் அவர்களின் ஆயுட்கலாம் வரையும் இந்த வாழ்கை, கடவுள், பிரபஞ்சம் பற்றிய உடனடியான முன்சொன்ன விளக்கங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். மேலும் அவர், 19ம் நூற்றாண்டின் துறவி விவேகானந்தரின் கூற்றான ஒரு சமயத்தில் பிறப்பது ஆசிர்வாதம்; ஆனால் அதிலே இறப்பது மிகவும் சோகமானது. (It's a blessing to be born into a religion and a tragedy to die in one.)*

என்ற வாசகத்தைக் குறிப்பிட்டார். மேலும் இதனை விளக்கி, சமயத்தினை விட்டுவிட்டு, 'உன்னைக் கண்டறிந்து, நீ யார் என்று அறிவது', உனது தனித்துவமான உரிமை என அறிவுறுத்தினார்.

இதற்கு இந்தியாவே சிறந்த இடம். ஆனால் இந்தியாவில் இருப்பதால் பல சமய எண்ணங்களால் சூழப்பட்டாலும், இறுதியாக நீ எல்லா நம்பிக்கைகளையும், விதிகளையும் விட்டுவிடல் வேண்டுமெனத் தூண்டப்படுவாய். இது தனித்துவமானது.

இது உள் ஆத்மாவைக் கவனிப்பதற்கான ஒழுக்கநெறியே அன்றி வெளி நடைமுறைக்கான நெறியல்ல. இது உள் ஒழுக்க நெறியே அன்றி வெளி நடைமுறைக்கான சமயமோ, வழிமுறையோ அல்ல! இது சைக்கிள் ஓடுவதைப் போன்றது. நீ அதன் மேலே ஏறி அதனை மிதிக்க வேண்டும். நீ அதன் மேலே ஏறி இருந்துகொண்டு அதைப் பற்றி விவாதிக்கக்கூடாது! நீ அதைச் செய்தே ஆகவேண்டும். நீ அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். நீ அதுவாக ஆகி (just be) உனது உள் ஆத்மாவாகவே இருத்தல் வேண்டும்.

இது தினமும் கடைப்பிடிக்க வேண்டியது, இதுதான் தற்கால உண்மையான ஆத்மீகப் பாதையாகும். இதன் காரணமாகவே கடைசியான இருநூற்றாண்டுகளாகத் தற்காலக் குருமார்கள் அண்மைக்காலமாகப் புகழ் பெற்றுள்ளார்கள். கடந்த நூற்றாண்டு காலத்தில் சிகிச்சையாளர்கள் (Therapists) தங்களை முன் நிறுத்த முயன்று இதற்கு முன் தோற்றுப்போனார்கள்.

யுங் (Jung) ஒரு மேதையாகத் தன்காலத்தில் கருதப்பட்டவர். அவர் கூடத் தன் எண்ணங்களால் பாதிக்கப்பட்டு சந்தோசமாக இல்லாத போது, பல பிறமனிதர்கள் போல, இங்கு (இந்தியா) வரும் ஆபத்தை எண்ணி, வரமுடியாததையிட்டு வருத்தப்பட்டார். நான் கொடுத்து வைத்தவன்; ஏனெனில் நான் இழப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. எனவே ஒரு முட்டாள்மாதிரி நான் இங்கு வாழவந்தேன். இந்த மலை என்னை மிகவும் நன்றாகக் கவனித்துக்கொண்டது, இது என்னை ஒருபோதும் கைவிடவில்லை. உண்மையாகவே முட்டாளாகவே இருப்பது நன்மையே என்று சொல்லியவாறு அந்த மலையைப் பயபக்தியுடன் பார்த்துச்

*சிரிக்கிறார்! இந்த மலை எப்பவும் எனது உற்ற நண்பனாகும்! எனக் கூறினார்.*

*நீ உனது வாழக்கையைப் பற்றிக் கேள்வி கேட்காவிட்டாலும், அல்லது உன்னை நீயே எப்படி வாழ்வது என்று கேட்காவிட்டாலும், நீ ஒரு சமயத்தையோ, ஒரு குருவையோ, ஒரு போதனையையோ பின்பற்றாமலும், நீ மகிழ்ச்சியாக வாழ்வதுபோலத் தோன்றலாம். நீ ஒரு அதிட்டசாலியாக, அல்லது தேவைகள் இல்லாதவனாக, யாதொன்றாலும் பாதிக்கப்படாதவன்போல் தோன்றலாம். ஆனால் உண்மை என்னவெனில் இது அப்படியான ஒரு சங்கதியாக இருக்காது. ஏனெனில் வாழ்க்கையில் முன்னேறும்பொழுது அது பல வலிகளை எதிர்கொள்ள வேண்டிவரும்.*

*நீ செல்வந்தனானாலும் அல்லது செல்வத்தால் மிகவும் பாது காக்கப்பட்டாலும்; நீ வழமையாக உனது உள் ஆன்மாவில் இருந்து பிரித்து வைக்கப்படுவாய்; இதனால் தான் பைபிளில் சொல்லப்படுள்ளது என்னவெனில், ''ஒரு செல்வந்தனால் மோட்சத்துக்குப் போவது, ஒரு ஒட்டகத்தினை ஊசி முனையூடாகச் செலுத்துவதிலும் பார்க்க மிகவும் கடினமானது.'' என்று.*

*இந்தியாவில்கடவுள்ஆனது, ''உள்ஆத்மாவாகப்பார்க்கப்படுகிறது''. இதைத் தான் கிறித்து, ''கடவுளின் இராச்சியம் உள்ளேயே உளது'' (Kingdom of God Is within) என்றார். இவைகள் ஒரே பொருளைத்தான் வேறு வழிகளில் சொல்கின்றன!*

*செல்வத்தின் மீதுள்ள முன் ஈடுபாடும் அதனால் வரும் திசை திருப்பல்களும் உன்னை உனது உண்மையான தேவைகளில் இருந்து விலத்தி உன்னால் என்னவாக முடியுமோ அதைத் தடுத்து விடும். இது எல்லாம் ஒரு சாதாரணமான உளவியல்! கிறித்து மட்டும் இதைச் சொல்லவில்லை, ஆனால் அவருக்கு 500 வருடங்களுக்கு முன்பு வந்த நேபாளநாட்டு இளவரசர் சித்தார்த்த கவுதமர் எல்லாவற்றையும் துறந்து தனது உள் ஆத்மாவைத் தேடிப் போனார்.*

*இந்தியாவில் சில காலத்தின் பின் நீ காண்பாய், அறிவொளியைத் (enlightenment) தேடுபவர்கள், மிகவும் பொதுவாக யாரும் ஒருவரைப் பின்பற்றுவதற்காகத் தேடித்திரிவார்கள். அவர்கள்*

திரும்பத்திரும்ப, ஒரு குருவின் பிறகு இன்னொரு குருவாகப் பல வருடங்கள் தேடி அலைவார்கள். ஆனால், அவர்கள் தங்களைத் தாங்களாக உள்நோக்கிப் பார்த்து அதில் நிலைபெறமாட்டார்கள்! இதுதான் மிகவும் பார்ப்பதற்கு எரிச்சலூட்டும் செயலாகும்; சிலநாட்களின் பின் இது மிகவும் வேடிக்கையானதாகத் தெரியும். யாரும் எளிய உண்மையான நபர் ஒருவர் இலகுவாகத் தன் கைவிரலை நேராகச் சுட்டிக்காட்டி உள்ளே தேடும்படி கூறுவார். உள்ளே உள்ள குருவைத்தான் எப்பொழுதும் நம்பவேண்டும்! வேறுயாரையும் இல்லை. உனக்குத் தெரியும் நீ எப்பொழுது ஒரு நல்ல மருத்துவரையோ கூடாத மருத்துவரையோ வைத்திருப்பதை. இதையேதான் உன் உள் ஆத்மாவைப்பற்றிக் கூற முடியும்.

இந்தியா இதுபற்றி அறிவதற்கும், தேடி ஆராய்வதற்கும் ஒரு நல்ல இடமாகும். ஆனால் இதனை ஒரு கடுமையான ஆற்றினைக் கடக்க உதவும் ஒரு படகுபோல மட்டும் பாவிக்கவேண்டும்; உண்மையாக அதிலேயே வாழ்வதற்காக அல்ல. மறுகரைக்குப் போன பின் அப்படகினை விட்டு, அப்பால் நடந்து செல்ல வேண்டுமே அன்றி அப்படகினை உன் முதுகில் சுமந்து செல்லக்கூடாது. இதுதான் சிகிச்சை *(therapy)* முறைக்கும் பொருந்தும். துரதிருட்டவசமாக இதைப் பெரும்பாலாரிடம் காணமுடியவில்லை அவர்கள் இலகுவாக வெளியே உள்ள குருமாரிடமும், சிகிச்சையாளர்களிடமும் அடிமைப்பட்டு நிற்கிறார்கள். நான் இங்கு பலவருடங்கள், பல வகையான மனிதர்கள் ஒரேகேள்விக்கு, ''தங்களைத் தாங்களே காண்பதற்கு'', விடைகாண வந்து போனதைக் கண்டுள்ளேன். இது உண்மையில் மிகவும் எளிதானது! இதற்கு நீங்கள் உங்களுக்குள்ளேயே தேடவேண்டும். நீயே அதுவாகவே இருந்து எண்ணங்களை இல்லாது செய்யவேண்டும்.


நீ கடைசியாக உனது மோசமான எதிரி உனது எண்ணங்களே எனக் காண்பாய். ஏனென்றால் எண்ணங்கள் மனதை வீணாக வலுவிழக்கச் செய்யும். எண்ணங்கள் உன்னை ''நீ அதுவாக'' *(just be)* இருக்கும் நிலைக்குத் தடையை உருவாக்கும் தன்மையுள்ளது. நீ இத்தடையைத் தாண்டிச்சென்று ''நீ அதுவாக'' இருக்க முடியுமானால், சகலதும் உன் முன்னால் நடனமிடும்!

அவர் அடிக்கடி கிரிவலம் வருவார், அங்கிருக்கும் உள்ளூர்வாசிகள் அனைவருக்கும் நன்கு பழக்கமானவர். அங்கு எல்லோராலும் விரும்பப்படும் மிக எளிமையான துறவியாக, பலருக்கு தன்னாலான பலவகையான உதவிகளைச் சோர்வின்றிச் செய்துகொடுத்தார். அத்துடன் திருவண்ணாமலையில் பல மரங்கள் நட்டு அதனைப் பசுமையாக்கம் செய்யமுயன்றார். ரமணமகரிசி ஆரம்பகாலத்தில் 16 வருடங்கள் வசித்த விருபாக்சக் குகையை, தன் வடிமைப்பின் மூலம் புனரமைத்து இன்றைய நிலைக்குக் கொண்டுவந்தார். மேலும் சில அபிவிருத்திகளை மலைமேல் செய்வித்தார்.

பல வருகையாளர்களுக்கும், உள்ளூர்வாசிகளுக்கும் இவர் ஒரு மிகவும் நேர்மையான, கூர்மையான உள்ளுணர்வுள்ளவர், அத்துடன் உற்சாகமூட்டும் ஆஸ்திரேலிய நகைச்சுவையுடன் கூடிய மென்மை இதயம் கொண்டவராகக் காணப்பட்டார். எவ்வாறாயினும் அவர் அமைதியாகவும் முற்றுமுழுதாகவும் தன்னை வாழ்நாள் முழுதும் ஆத்மவிசாரணை (Self Enquiry) பற்றிப்படித்து அதனைப் பயிற்சி செய்வதற்காகவும் அர்ப்பணித்தவர்.


1957ம் ஆண்டு ஆஸ்திரேலியாவை விட்டுக் கிளம்பியபின், நரிக்குட்டி எப்பொழுதும் தனது கடந்தகாலம் இறந்து விட்டதாகவே கருதி வாழ்ந்தார். இவர் திருவண்ணாமலையில் வாழ்ந்தகாலத்தில்; ஒரு முறைமட்டும் மருத்துவ சிகிச்சைக்காகவும், உடம்பினைப் பராமரிக்கவும் ஆஸ்திரேலியா சென்று திரும்பினார். பின் சில மாதங்களில், தேக ஆரோக்கியம் மிகவும் மோசமடைந்த நிலையில், 15 செப்டம்பர் 1994 அன்று இயற்கை அடைந்தார். அவரின் விருப்பப்படி அவரின் உடலும் அங்கு தகனம் செய்யப்பட்டு தன் வாழ்வின் இறுதியையும் அங்குதான் முடித்தார்.

அவரின் மறைவின் பின்னர் அவர் வசித்த குகையும்கூட பின்னாட்களில் அதை ஆக்கிரமிக்க ஏற்பட்ட இரு சுவாமியார்களின் சண்டையினால், திருவண்ணாமலை நிர்வாகம் அதனை இடித்துவிட்டது.




திருவண்ணாமலையில் உள்ள ஒரு மலைப்பொந்தின்
அருகில்உள்ள நரிக்குட்டி சுவாமியின் வசிப்பிடம்
(தற்போது இல்லை)

*Narikutti Swami's cottage at Arunachalam (Now No more)*



இலங்கையில் நரிக்குட்டிசுவாமி

*Narikutti Swami in Sri Lanka*



# சந்தசுவாமி, சோல்பரிசுவாமி

**யானைக்குட்டிசுவாமி என்று அழைக்கப்படடவர்**

## *ANAIKUTTY. James Ramsbotham*

***Soulbury - SANTHASWAMAI (21st Mar 1915 - 12th Dec 2004)***

*இவரின் நிசப்பெயர் ஜேம்ஸ் ராம்ஸ்போதம் (James Ramsbotham)*

*இவரது குடும்பப்பின்னணியினை இங்கு சற்றே விவரிப்பது பொருத்தமாய் இருக்கும். இவரின் தகப்பனார் கெர்வால்ட் ராம்ஸ்போதம் (Herwald Ramsbotham) ஒரு பிரித்தானியா கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி. இவர் பிரித்தானியாவில் பல மந்திரிப் பதவிகளை வகித்தவர். 1941ம் ஆண்டு பரோன் சோல்பரி ஆகி (Baron Soulbury) பிரபுக்கள் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர் இலங்கையின் காலனித்துவ இறுதி அரசியல்சட்டம் இயற்று வதற்கான சோல்பரி கமிஷன் (Soulbury Commission) தலைவராகப் பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டு, இவரது குழுவின் பிரேரணைகளின் அடிப்படையில்தான் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் பிரித்தானிய சட்டமான, ''இலங்கைச் சுதந்திரச் சட்டம்'' (Ceylon Independence Act) ஆக்கப்பட்டது. அதன் மூலம் தான் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டு இலங்கைக்கான*

*சோல்பரி அரசியலமைப்புச் சட்டம் (Soulbury Constitution) நடைமுறைக்கு வந்தது.*

*பின்னர் இவரே (1949 - 1954) வரை, இலங்கை அரசின் ஆளுநராகப் (Governer General) பணி புரிந்தார்.*

*ஜேம்ஸ், சோல்பரி பிரபுவின் முதல்மகன். தாயாரின் பெயர் டோரிஸ் வயலட் டி ஸ்டீன் (Doris Violet de Stein). இவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவ ஞானத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரித்தானிய இராணுவத்தில் ரெமி (REME) எனப்படும் றோயல் எலக்ட்ரிகல் அண்ட் மெக்கானிக்கல் என்ஜினீர்ஸ் என்ற பிரிவில் சேர்ந்து பணிபுரிந்தார். இவர் அன்தியா மார்க்ரெட் வில்டன் (Anthea Margret Wilton) என்ற பெண்ணை 5 மே மாதம் 1949ல் திருமணம் செய்தார். ஆனால் அவர் 26 ஜூன் 1950ல் மரணமானார். மனைவியின் இழப்பு மிகவும் குறுகியகாலத்தில் நிகழ்ந்தது இவரை மிகவும் பாதித்திருத்தல் வேண்டும். அதன் பின்னர் இவர் வேறு திருமணம் செய்யவில்லை, பிள்ளைகளும் இல்லை.*

*அதன்பின்னர் ஆத்மஞானத்தேடலில் ஈடுபட்டு இந்தியா, தீபெத் போன்ற நாடுகளில் இந்து--பௌத்த மடங்களில் சிலகாலம் அலைந்து திரிந்து திருப்தியுறாமல் பின்னர் தகப்பனார் கவர்னர் ஜெனரல் ஆக இருந்த, இலங்கை வந்தார்.*

*1953ல், இவர் இலங்கை வருமுன்பே, இங்கிலாந்திலே ஜேர்மன் சுவாமியைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளார். இலங்கை வந்து, அப்பொழுது கதிர்காமத்தில் கந்தன் காலடியில் வசித்த ஜேர்மன் சுவாமியைச் சந்தித்து, அவருடன் அங்கே வெள்ளை வேட்டி அணிந்து நெற்றியில் திருநீறு அணிந்து, மடத்தில் வரிசையில் சென்று உணவருந்தி, தரையில் பாயில் படுத்து அப்பாசாமி மடத்தில் ஒரு சந்நியாசி போல வாழத் தொடங்கினார்.*

*இது இவரின் தந்தையான அப்பொழுது இலங்கையின் மிக உயர்பதவி வகித்த சோல்பரி பிரபுவிற்கு மிகவும் கவலையையும், ஆச்சரியத்தையும் அளித்தது! எப்படி சொகுசுவாழ்க்கைக்குப் பழகிய தன்மகன் கொழும்பில் உள்ள கவர்னர் மாளிகையான*

*குயின்ஸ் ஹவுஸ் (Queen's House) வசதிகளை விட்டு, அங்கு எவ்வாறு ஒரு பரதேசி போல வெறும் தரையில் படுத்து உறங்குவதைக் கேள்விப்பட்டு மிகவும் விசனம் உற்றார். தந்தை, தன் குயின்ஸ் ஹவுஸ் மாளிகையில் வந்து தங்குமாறு அழைத்தும் மறுத்துவிட்டார்.*

*பின்பு ஒருநாள், யோகர்சுவாமியிடம் ஏற்கனவே தொண்டனாக அறிமுகமான ஜேர்மன்சுவாமி தான் இவரையும், பின்னாளில் புலிக்குட்டி என்று அறியப்பட்ட சாம் விக்ரமசிங்கே என்பவரையும் யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று யோகர்சுவாமியிடம் அறிமுகம் செய்து வைத்தார்.*

*1953ம் ஆண்டு இவர் யோகர்சுவாமியை முதல் முறையாகப் பார்க்கும் பொழுது தன் தந்தைக்கு தன் செயல்களால் ஏற்பட்ட மனக் கசப்புகளை எண்ணி மிகவும் வருந்தியவாறு அவரின் குடிசைக்குள் சென்று அவர் முன் அமர்ந்தார். உடனடியாக யோகர் இவரிற்கு சொன்ன வார்த்தைகள்; ‘‘கடவுளை உன் தந்தையாகவும், கடவுளை உன் கவர்னராகவும், கடவுளை உன் ஜெனரல் ஆகவும் ஏற்கும் படி!’’ (Take God as your father, God as your Governor, God as your General).*

*ஜேம்ஸ் சொன்னார், இவ்வார்த்தைகள் உடனடியாகத் தன் ஆழ்ந்த உள் முதுகுத்தண்டினைத் தொட்டு தன் எல்லா முரண்களையும் நீக்கித் தனது அலைபாயும் மனதை மிகவும் அமைதியாக்கியது, என்று.*

*1956ல் யோகர்சுவாமியைச் சந்தித்தபின் இவர் ஜேர்மன் சுவாமியுடன் செல்வச்சந்நிதி சென்று அங்குள்ள முருகன் கோவிலுக்கு அண்மையான ஒரு நிலத்தில் இவர் தன் செலவிலேயே ஜேர்மன் சுவாமிக்கு ஒரு குடில் ‘‘வில்லா பெர்லின்’’ (Villa Berlin), தனக்கு ஒன்று ‘‘குயின்ஸ் குடிசை’’ (Queen's Cottage,) மற்று ஒரு குடில் புலிக்குட்டி போன்ற விருந்தினர்கள் வந்தால் தங்குவதற்காகவும் அமைத்தார். அங்கு சிலகாலம் தங்கி ஆத்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டார்.*

ஆனால் பின்பு யோகர்சுவாமிகள், நீங்கள் இருவரும் ஒன்றாகத் தொடர்ந்து இருந்தால் உங்கள் இருவருக்குமே ஆத்மீக முன்னேற்றம் உண்டாகாது எனத் தெரிவித்து, அவர்கள் இருவரையும் பிரித்து, ஜேர்மன் சுவாமியைத் தொடர்ந்து செல்வச் சந்நிதியில் வசிக்குமாறு கூறி, இவரை மட்டும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து தனக்கு அண்மையில் இருக்குமாறு, கைதடியில் தனது சீடரான மார்க்கண்டு சுவாமியுடன் அவர் குடிலில் தங்குமாறு பணித்தார். இவர் அங்கு மார்க்கண்டு சுவாமிகளுக்கு அணுக்கத் தொண்டனாயிருந்து பணி செய்தார். அங்கிருந்து, கொழும்புத்துறைக்கு நடந்து சென்று யோகர் சுவாமியைச் சந்திப்பார்.

இப்படியாக இருக்கும் நேரத்தில், யோகர்சுவாமி இவரை, ''ஒரு பிரபுவின் மகன் சும்மா இருந்து சாப்பிடக்கூடாது, கிழக்கே போய், காடுவெட்டி, நெல் பயிர் செய்து, நெல்லோடு திரும்பி வா, பசித்தவர்களுக்கு உணவு அளி'' என்று அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார். அதன்படி, இவர் கிழக்கு மாகாணத்தில் செங்கலடி என்ற ஊருக்குச் சென்று சில காடுகளை அழித்து, தானே நேரடியாக, உழவு இயந்திரம் ஓட்டி, விவசாயம் செய்து அங்குவிளைந்த நெல் மூடைகளை யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தார்.

1964ம் ஆண்டு யோகர்சுவாமி இயற்கை எய்திய பின், 1965ம் ஆண்டில் இவர் கிழக்கு மாகாணத்தில் செங்கலடியில் யாழ்ப்பாணத்தில் உள்ளது போல், அங்கும் ஒரு சிவ தொண்டன் நிலையத்தினை, யோகரின் அடியார்களுடன் சேர்ந்து, தானே தலைமையேற்று அமைத்து, அதை நடத்தினார். அக்காலத்தில் இவர் அங்குள்ள வேடர்கள், பழங்குடியினருடன் நெருங்கிப்பழகினார். இவர் அவர்களுடன் சேர்ந்து மிகவும் உள் அடர் காடுகளிலும், குன்றுகளிலும் சென்று பல மாதங்கள் வாழ்ந்துவிட்டு வருவார். இப்படியான காலங்களில் இலங்கைப் பத்திரிகைகள் இவர் காணாமல் போய்விட்டார், இறந்து விட்டார் என அடிக்கடி புரளிச் செய்திகளை வெளியிடுவது வழக்கம். ஆனால் இவர் திரும்பவும் வந்து அச்செய்திகளைப் பொய்யாக்குவார்.

*இவர் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னரான தனது மரபுவழி பிரித்தானிய பிரபுத்துவத்தை முதல் மகனாகிய தான் ஏற்காமல் அதனைத் தன் தம்பியாகிய பீட்டர் ராம்ஸ்போதத்திற்கு விட்டு விடலாம் என எண்ணி யோகரிடம் ஏற்கனவே ஆலோசனை கேட்டிருந்தார், ஆனால் யோகர் அதற்கு மறுப்புத் தெரிவித்து இவரையே போய் ஏற்கும்படி கூறியிருந்தார்.*

*அப்பொழுது யோகர்சுவாமி கூறிய வாசகம் "Go back to England and be a Lord" நகைச்சுவையாக இருவேறு அர்த்தங்களைக் கொண்டதாக இருந்தது. "Lord" என்ற சொல்லினை இருவகையாக எடுத்துக்கொள்ளலாம். ஒன்று ''பிரபு'' என்று மற்றையது ''கடவுள்'' (God) என்றும் எடுத்துக் கொள்ளலாம்.*

*இவர் யோகர்சுவாமியின் உடனடியான போதிக்கும் தன்மையையும், மறைமுகமாக தனது குரு என்ற நிலையையும் சுட்டிக் காட்டும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு நாள் யோகர்சுவாமி, யாழ்ப்பாணத்தில் பிரதான வீதி ஒன்றில் நிற்பதைக்கண்டு அவரை நோக்கிப்போனார். அப்பொழுது அவர் தன் கையில் வைத்திருந்த மடக்கிய குடையை ஒரு வாள்போலப் பாவித்து இவரை அடிப்பது போலப் பாசாங்கு செய்தார். அதற்கு சந்தசுவாமி, ''இது நல்லதல்ல, சுவாமி, நீங்கள் ஆயுதம் வைத்திருக்கிறீர்கள்''. என்றார். அதற்கு யோகர்சுவாமி அசையாது நின்று அந்தக்குடையை விரித்துக்காட்டி. ''இது எனது ஓம்பரெல்லா'' (this is my OMbrella), விரித்த குடையானது உண்மையில் தமிழில் ''ஓம்'' என்பதுக்கு இணையானது என்று கூறினார்.*

*இவரின் தந்தை 1971ல் மரணம் அடைந்த பின்பு, தன் 55வது வயதில், பெப்ரவரி 1971ல் தானே பிரபுக்கள் சபையில் மரபுவழி உறுப்பினரானார். ஒரு சந்நியாசி-இந்துவாக மாறிய ஒருவர் பிரபுவாக வந்துவிட்டார் என நியூயோர்க டைம்ஸ் உட்படப் பல பத்திரிகைகள் அப்பொழுது எழுதின. இவர் தான் ஒரு பிரபுவனாலும் தன் பழைய சமய வழிமுறைகளில் இருந்து சற்றும் மாறமாட்டேன் எனக் கூறினார்.*

இவர் செங்கலடியை விட்டு பின்பு கைத்தடிமடத்தில் 1986ம் ஆண்டு வரை வசித்து பின்பு இங்கிலாந்து திரும்பிவிட்டார். தகப்பனாரின் இறப்பிற்குப் பின்னர் இங்கிலாந்து பிரபுக்கள் சபை மரபுகளின் படி இவரும் பிரபுக்கள் சபையின் உறுப்பினராக 11 டிசம்பர் 1999 வரை இருந்தார். அதன் பின்னர் அவரின் தம்பி மரபுவழிப் பிரபுவானர்.

பின்பு இவர் தன் இறுதிக்காலத்தை இங்கிலாந்தின் மலைப்பாங்கான காடடர்ந்த ஒரு பகுதிக்குச் சென்று அமைதியாக மௌன - தியானங்களில் ஈடுபட்டு, 12 டிசம்பர் 2004 அன்று இயற்கை எய்தினார். கடைசிக் காலத்தை அடர் காடு--மலைப் பிரதேசத்தில் செலவிட்ட படியால் யோகர்சுவாமி இவருக்கு தீர்க்கதரிசனமாகச் சூட்டிய மறு பெயரான ''யானைக்குட்டி'', உண்மையாகி விட்டது. ஏனெனில், யானை காட்டில் வாழும் என்பதால்!

இவர் நெடுங்காலம் செங்கலடி சிவதொண்டு நிலையத்தை நடத்திய பொழுது, ஒரு இளம் மேற்கு நாட்டவர் இவரிடம் ஏன் இதை நடத்துகிறீர்கள், என வினவியபொழுது, பின் வருமாறு பதிலிடுகிறார்: -

இந்தப்பண்ணை நடத்துவதின் முதன்மையான நோக்கம், மண்ணின் செழுமையைச் சற்றும் குறைக்காமல் உணவு பயிரிடுவதே ஆகும். விவசாயமும், சமயமும் ஒரு முழுமையின் வேறு வேறான தன்மைகள் ஆகும். இதுதான் மனிதனின் இயற்கையான வாழ்க்கையாகும். சமூகத்தின் பழமையான வாழ்வியல் அடிப்படைத் தன்மையினைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். உண்மையில் சொல்லப் போனால் விவசாயம் தான் தமிழ் மக்களின் மிகவும் ஆதிகால வாழ்க்கை முறையாகும், அவர்களின் மத்தியில்தான் தற்சமயம் நாம் வாழ்ந்து வருகிறோம்.

வேலையே பிரார்த்தனையாகும்! இதுவே இங்கு சொல்லப்பட்ட கருத்து ஆகும். சிவதொண்டன் என்ற பெயரில் உள்ள ''சிவ'' என்பது கடவுளின் பெயர்; ''தொண்டன்'' என்பதன் பொருள் ''சேவகன் அதாவது பக்தன்'' என்றும் பொருள் கொள்ளலாம். எனவே ''சிவ தொண்டன்'' என்பது ''கடவுளின் பக்தியான

சேவகன்'' அல்லது ஒருவரின் ''கடவுளுக்கு அர்ப்பணிக்கும் வேலை''. இது ஒன்றும் புதிதான கருத்து அல்ல! இது தான் பகவத் கீதையின் அடிப்படைப் போதனை ஆகும். இதன் நோக்கமாவது, எல்லா வேலைகளையும் செய்யும் பொழுது அதனைப் பற்றில்லாத நிலையில், கடவுளுக்கான வேலையாக, விளைவுகளை அவரிடமே அர்ப்பணித்து, வேலைக்கான வேலை எனச் செய்தல் வேண்டும்'' என விளக்கம் கொடுத்தார்.

யோகர்சுவாமியின் 123வது பிறந்த தினம் 21 மே 1995 வந்தது. அது தொடர்பாக சந்தசுவாமி எழுதி, 4 ஜூன் 1995 இலங்கை ஐலண்ட் ஆங்கில நாளிதழில் வெளிவந்த கட்டுரையின் சிலபகுதிகளில் இவர் சுவாமி பற்றிக் கூறியிருப்பதை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதால் அது பின்வருகிறது:-

எல்லாச் சமயங்களின் அடிப்படை நோக்கமும், உண்மையை உணர்வதே! இது ஒரு நேரடி அனுபவத்துக்குரிய விடயமாகும்; இதில் மனம் அல்லது புத்தி அல்லது வேறு ஏதேனும் மனித ஆற்றல்கள் சம்பந்தப்படாது. இங்கு ஒரே ஒரு உண்மைதான் உண்டு. அது தான் கடவுள் அல்லது ''அது'' (Tat). எனவே உண்மையை உணர்தல் என்று கருதுவது, கடவுளுடன் நீ ஐக்கியமாதல் அல்லது நீயே ''அது'' ஆதல். (தத்வமஸி - Tat tvam asi). இதன் கருத்து ''உன்னையே நீ அறி'' (Know Thyself) என்பதே! தன்னை அறிந்த ஒருவனுக்கு எல்லாம் தெரியும்; இவரே மனித உருவில் இருக்கும்பொழுதே முக்தியடைந்தவராவார். இவரே ஜீவன்முக்தர் என்று அழைக்கப்படுவார். அவர் செய்வதற்குரிய காரியங்கள் யாதொன்றும் இல்லை; ஆனாலும் அவர், மற்றவர்களும் இதேநிலையை அடைய உதவுவார்; அப்படியான நபர் தான் உண்மையில் ஒரு குருவாகும். அவரே சற்குரு!

இப்படியான நிலையை அடைந்தவர்கள் மிகவும் அரிதாகும். ஆனால் அப்படி ஒரு ''உணர்ந்த ஆத்மா'' இலங்கையின் வடக்கில் தொண்ணூறு வருடங்களுக்கு மேல் வாழ்ந்து மார்ச் 1964 இல் தன் உடம்பைவிட்டுப் பிரிந்தார். அவர் தான் யோகர்சுவாமி என அறியப்பட்டவர்.

சுவாமியின் பெரும்பாலான பக்தர்கள் இந்துக்கள் என்பதால், அவரின் போதனைகள் பெரும்பாலும் இந்து விதிமுறைகளாகவே இருக்கும். ஆனால் அவர் எல்லாச்சமய வேறுபாடுகளுக்கும் அப்பால்பட்டவர்.

பௌத்தர்கள், கிறித்தவர்கள், முகமதியர்கள், கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் என்று எல்லோரும் அவரை நாடி உதவியும், வழிகாட்டலும் கேட்பார்கள். தத்துவங்களும், சமயங்களும் காட்டும் வெறும் வழிகளைக் கடந்து அப்பால் சென்று அதி உச்ச நிலையான சிகரம் தொட்டவர் அவர். ஒரு சிறந்த வைத்தியர் போன்று, தனது ஒவொரு நோயாளிக்கும் எது சிறந்ததோ அதன் பிரகாரம் அவரவருக்குரிய மருந்தினைப் பரிந்துரைப்பார். அவரது போதனைகள் எல்லா யோகங்களையும் தழுவி இருந்தாலும் அது அதேநேரத்தில் அவைகள் எல்லாவற்றிக்கும் அப்பால் பட்டது.

அநேகமாக அவரின் எல்லாபக்தர்களும், குடும்பத்தவர்கள். எதோ ஒரு வேலையோ அல்லது வேறு ஏதாவதும் செய்பவர்கள், விதி விலக்காக ஒரு சிலரைத் தவிர. அவர் மிகவும் அருமையாகத்தான் வேலையில் இருந்து ஓய்வுபெறும்படி அறிவுரை கூறுவார். மனிதர்கள் அடிக்கடி வந்து கேட்பார்கள், தங்கள் வேலையை விட்டுட்டு வந்து கூடியநேரம் ஆத்மீகப் பயிற்சிகளில் ஈடுபடலாமா என்று. ஆனால் சுவாமி அவர்களை அப்படிச்செய்ய ஊக்கப்படுத்த மாட்டார். ஏனெனில், அவருக்கு, மனிதனின் முழுவாழ்வுமே ஒரு ஆத்மீகப் பயிற்சியாக இருத்தல் வேண்டும் என்பதுதான். அத்துடன் அவர், மனிதனின் செயல்களை புனிதமானது, புனிதமற்றது என்று பிரித்துப் பார்க்க அனுமதிக்கமாட்டார்.

சுவாமி, தன்னைப் பார்க்கவரும் பலரிடம், ''இப்ப போய், உன் வேலையைப் பார்'' என்று சொல்லித்தான் அனுப்பிவைப்பார். அவர் வேலைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார். வேலையை வேலையாகச் செய்யவேண்டும் - அது தான் ''கர்ம யோகம்'' என்று அறிவுறுத்துவார். இது சிவத்தியானம் (கடவுளை அல்லது எது உண்மையோ அதைத் தியானித்தல்) என்பது ஒரு ''மருந்து'' ஆக ஏதோ ஒருமுறையில் அடிக்கடி பரிந்துரைப்பார். அவர் ஒருநாளும் சொற்பொழிவோ, வகுப்புகளோ எடுத்ததில்லை. அவரின்

போதனைகள் தன்னிச்சையாக அவரின் குடிலில் காலை, மாலை நேரங்களில் அல்லது கடைகளில், தெருக்களில் எதிர்பாராமல் சந்திக்கும் பொழுது, அல்லது அந்தபக்தர் மிகவும் கொடுத்து வைத்தவர் எனில் சடுதியாக அவரின் வீடு தேடிச் சென்று கூறுவார். பெரும்பாலும் அவர் சொல்வது ஒரு தனிப்படட நபருக்கு ஆனது என்றாலும் அங்கு சூழநிற்கும் பிறமனிதர்களும் அதனால் நன்மை பெறுவார்கள்.

சுவாமி களைப்படையாது, தன்னைப் பின்பற்றுபவர்கள், ''உண்மை அனைத்து வடிவங்களுக்கும் அப்பாலானது'' என்பதனைப் புரியும்படியான உயர்நிலையை அடைவிக்க, முயற்சித்தார். தன் வாழ்நாள் முழுதும், தன்னாலான முழுமுயற்சிகளால், பல்வேறு வழிகளில், முறையான பாரம்பரிய சமய சம்பிரதாயங்களை மீளடையச் செய்து, முறையாகக் கடைப்பிடிக்கும் வண்ணம் ஊக்கப்படுத்தினார். ஒவ்வொரு மாலையிலும் அந்திப்பொழுதில், புனித தீயினைப் பிரதிபலிக்கும் வண்ணம், தனது குடிலில் ஒரு விளக்கினை ஏற்றி, தன் முன்னிலையில் சில பக்தி, சமயப் பாடல்களைப் பாடும் வண்ணம் செய்தார்.


அவரின் அடியார்கள் கூட்டம் பல எண்ணிக்கையில் அதிகரித்த பொழுது, அவர்கள் செய்யச் சில வேலைகளைக் கொடுத்து, சமக்கிருதம், ஆங்கிலம் என்பவற்றில் உள்ள சில முக்கியத்துவம் வாய்ந்த எழுத்துக்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தார்.

1935ம் ஆண்டு, தன் சில பக்தர்களின் விருப்பத்திற்கமைய, யாழ்ப்பாண நகரில் எல்லோரும் சந்தித்துக் கூடித் தியானம் செய்ய, திருமுறைகள் ஓத, சமய வகுப்புகள், வழிபாடுகள் நடத்தி, ஆத்மீக முன்னேற்றத்திற்காக எதனையும் செய்யும் வண்ணம் ஒரு நிலையம் அமைக்க அனுமதி கொடுத்தார். சுவாமி, ஆரம்பிக்கபட்ட அந்த நிலையத்திற்கும், பத்திரிகைக்கும் ''சிவ தொண்டன்'' என்ற பெயரைச் சூட்டினார்.

சிவ தொண்டன் மாதப் பத்திரிகையில், முற்றிலும் சமய சம்பந்தமான விடயங்கள் பற்றி எழுதி, அதில் தன் நற்சிந்தனைப் பாடல் ஒன்றையும் சேர்த்துப் பதிப்பித்து வெளியிடச் செய்வித்தார். இந்த

நற்சிந்தனைப் பாடல்கள், சுவாமியிடமிருந்து தன்னிச்சையாகப் பாயும்! அது எந்நேரத்திலும் வெளிவரும்!

இவர் யோகர்சுவாமி சொன்ன பெறுமதிமிக்க, ஆழ்ந்த தத்துவக் கருத்துள்ள வாசகங்களை எல்லாம் தொகுத்து, ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்து "Words of Our Master" என்றும், அதிலிருந்து தெரிவு செய்து, "Positve Thougts for Daily Meditation" என்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதில் பெரும் பங்காற்றினார்.



# சாம் விக்ரமசிங்கே - புலிக்குட்டி

## *Sam Wickramasinghe*

### *(also known as Pulikutti among Yogaswami's disciples)*

### *(22nd May 1925 - 23rd March 2013)*

*சாம் விக்ரமசிங்கே, யோகர்சுவாமியின் சீடர்களில், புலிக்குட்டி என அழைக்கப்பட்டவர். 22 மே 1925 பிறந்து 23 மார்ச் 2013 வரை வாழ்ந்தவர். இவர் நுகேகொட என்ற ஊரில் வாழந்தவர், யோர்சு வாமியின் மிகவும் பக்தியுள்ள சீடர்கள், நல் அபிமானிகளில் இவர் சற்று விதிவிலக்கானவர்; பிறப்பால் ஒரு சிங்களவர்.*

*இவர் இளவயதில், இந்தியா யாத்திரையில், மைசூர் பிருந்தாவன் பூங்காவைப் பார்க்கச் சென்ற பொழுது அங்கே கண்டு பழகிய பேராசிரியர் ஒருவர் தன் நண்பனான போல் பிரண்டன் என்பவரையும், அவர் எழுதிய புத்தகங்களையும், அதில் ரமண மகரிசி பற்றி எழுதியுள்ளதையும் இவரிடம் கூறியிருந்தார். அந்த பேராசிரியரே இவரை, அந்த நேரத்தில் மைசூர் மகாராஜாவின் விருந்தினராக இருந்த போல் பிரண்டன் அவர்களை மகாராஜா அரண்மனையில் மறுநாள் சென்று சந்திக்க ஒழுங்கு செய்ய முயன்றார். ஆனால் அவர் வேறு எங்கோ யாத்திரை போயிருந்ததால், சந்திக்காமல் திரும்பினார். அத்துடன் இவர், போல் பிரண்டன், அவரின் புத்தகம், மகரிசி அனைத்தையும்*

*மறந்து விட்டார். ஒரு வருடத்தின் பின்பு இவரின் அலுவலக நண்பர் ஒருவர் இவரிடம் போல் பிரண்டன் எழுதிய ''இரகசிய இந்தியாவில் தேடல்'' (In Search of Secret India) என்ற நூலினைக் கொடுத்து கட்டாயம் வாசிக்க அறிவுறுத்தினார். அப்பொழுதுதான் இவருக்கு மைசூரில் சந்தித்த பேராசிரியர் சொன்னது நினைவில் வந்து, அந்தப் புத்தகத்தினை வாங்கி ஆர்வத்துடன் வாசித்தார். அதன்பின் இவருக்கு ரமண மகரிசியைப் பார்க்கும் ஆர்வத்தால் உந்தப்பட்டு, 1946 டிசம்பர் இந்தியா சென்று ரமண மகரிசியைத் தன் 21வது வயதில் சென்று பார்த்தார்.*

*பின்னாளில் இவர் எழுதிய ''குரு எப்படி எனை அழைத்தார்?'' (How the Guru called me?) என்ற தலைப்பில், தன் ரமண மகரிசியுடனான சந்திப்பு பற்றி, அங்கு தன் இளமையில் பெற்ற அனுபவங்களை எழுதி ரமண ஆசிரமத்தால் வெளியிடப்படும் ஆங்கிலச் சஞ்சிகையான "The Mountain Path" அக்டோபர் 1979 இதழில் வந்துள்ளது.*

*1950ல் இவர் ஜேர்மன் சுவாமியைக் கதிர்காமம் மாணிக்ககங்கை ஆற்றில் குளிக்கும் பொழுது தான் அவரை முதன் முதலாகக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பின்பு அறுவர் கொண்ட குட்டிக் கூட்டத்தில் ஒருவராகிப் பலகாலம் கதிர்காமத்தில் தங்கி இருந்தார்.*

*அந்தக் குழுவில் இலங்கையின் முன்னைநாள் ஆளுநரின் மகனான ஜேம்ஸ் ராம்ஸ்போதம் என்ற சோல்பரி சுவாமி, பின்னர் இவரே சந்தசுவாமி-யானைக்குட்டி சுவாமி, இரண்டு ஆஸ்திரேலியர்கள் - நரிக்குட்டிசுவாமி, அவரின் நண்பர் அட்ரியன் ஸ்நோக்ராஸ் என்ற பின்னாளில் உலகப்புகழ் பெற்ற கட்டடக்கலை நிபுணரும் பேராசிரியருமான - பூனைக்குட்டி சுவாமி, ஒரு தமிழர் - முதலியார் சுவாமி - பன்றிக்குட்டி சுவாமி, ஜேர்மன் சுவாமி - நாய்க்குட்டி சுவாமி, சாம் விக்ரமசிங்கே - புலிக்குட்டி சுவாமி என அழைக்கப்பட்டனர்.*

*இவர் ரமண மகரிசியின் மறைவிற்குப் பின்னர் தன் ஆத்ம வழிகாட்டியாக யோகர்சுவாமியை ஏற்றுக் கொள்கிறார். ஜேர்மன் சுவாமி தான், யோகர்சுவாமியுடனான தன் அனுபவங்களைச் சொல்லி, இவருக்கு யோகரைப்பற்றித் தெரியப்படுத்தி, பின்*

ஒருநாள் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். அதன்பின் இவர் யோகர்சுவாமியின் மறைவிற்குமுன் அவரைப் பலமுறை சென்று தரிசித்துள்ளார்.

மிக நீண்டகாலம் கதிர்காமத்தில், யோகர்சுவாமியின் மற்றைய சீடர்களுடனும், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் உள்ள 'குரு மடம்' என்ற இடத்திலும் தனிமையில் பலகாலம், யோகரின் அறிவுறுத்தலின் படி மிக ஆழமான உள்முகப் பயிற்சிகளில் ஈடுபட்டவர். இவர் முன்னர் பத்திரிகைத் துறையில் வேலை பார்த்தவர். ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர். யோகர் சுவாமி, ரமண மகரிசி, ஜேர்மன் சுவாமி. கதிர்காமம் பற்றி இவரின் சுய ஆத்மீக அனுபவங்களைத் திறம்படப், பல ஆங்கிலப் பத்திரிகைகளிலும். வேறு இதழ்களிலும் பலமுறை எழுதியுள்ளார். பல இளம்தேடுனர்கள் இவரைநாடி, இவரின் பலவகையான அனுபவங்களையும், வழிகாட்டுதல்களையும் கேட்டு அறிந்தனர்.

இவர் ''யோகர்சுவாமி - உருவம் உடைப்பவர்'' *(Yoga Swami the Image - Breaker)* என்ற தனது கட்டுரையில் பின் வருமாறு எழுதுகிறார்:-

யாழ்ப்பாணத்து யோகர்சுவாமி ஒரு அதி அற்புதமான நவீனகால முனிவர். இவர் தன் போதனைகளைத் தெரிவிக்கும் வித்தியாசமான முறையானது; வழமையான குரு - சீட போதனை முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு, யாவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும். இலங்கைத் தமிழர் அல்லாது, சிங்களவர்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் கூட இவரின் பக்தர்களாகவும், பெரும் அபிமானிகளாகவும் உள்ளனர். அத்துடன் இவரைத் தேடுபவர்களாக, ஐரோப்பா, அமெரிக்கா, போன்ற பல வெளி நாட்டவரும் உண்டு.

இவர் தன் முதல்சந்திப்பைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''முதலாவது சந்திப்பு மிகவும் மனதைக்கவர்ந்த அனுபவமாகும், அது ஒரு ஆழமான தத்துவத்தின் பாடமாக அமைந்தது. சுவாமிமுன் நிலத்தில் காலைக் குறுக்காகவைத்து அமர்ந்து, எனது முதல் தவறினைத் துவக்கினேன்''. சுவாமி, நான் ஒரு சிங்களவன், புத்தமத நம்பிக்கையாளன், என்று சொல்லி முடிப்பதற்குள், சுவாமி

கர்ச்சித்தார், ''குப்பை-சிங்களவன் இல்லை, தமிழன் இல்லை, முசுலீம் இல்லை. அவர்கள் எல்லோரும் ஒன்றே! ஒரே விதையில் இருந்து வந்தவர்களே! எல்லோருக்கும் ஒரே பசி, ஒரே கோபம், ஒரே வலியை உணர்பவர்கள், ஒரே மாதிரித்தான் உறவு கொள்வார்கள், (தன் மூக்கையும், கண்ணையும் பிடித்தபடி) ஒரே கண்கள், மூக்கும் உடையவர்கள், வதந்திகள் பேசும் ஒரே நாக்கு உடையவர்கள்! எல்லோரும் ஒன்றே, ஒன்றே எல்லோரிலும் உண்டு'' என்றார். சற்று அமைதிக்கு பின், ''புத்தமும் இல்லை, கிறித்தியன் இல்லை, இந்துவும் இல்லை. ஆழமான சமய உணர்வுள்ள மக்கள், சமயம் அற்றவர்கள். அவர்கள் எதையும் சாராதவர்கள், அவர்களின் இதயமே சமயமாகும்.'' என்றார்.

நான் சொன்னேன், ''ஆனால் சுவாமி, நான் இதை எல்லாம் முன்னரே கேட்டுள்ளேன். இதெல்லாம் பழைய பதிவுகள், நிச வாழ்க்கைக்கு உதவாது. வாழ்விற்கு நல்ல உருப்படியான கருத்து வேண்டும்''. எனத் தைரியமாகவும், ஆர்வமாகவும் எனது கை விரல்களைப் பொத்தியபடி கேட்டேன். ''தயவு செய்து, எப்படி நன்றாக வாழ்வது என்று கூறவும்''.

அதற்குச் சுவாமி சொன்னார், ''வாழ்வதற்கு எதையும் செய்யாதே; வாழ்! போய், வாழ்கை என்ற புத்தகத்தில் இருந்து கற்றுக்கொள்! வேலை செய்! வேலை செய்வதால் நீ உயர்வு பெறுவாய்!''

சுவாமி தனது கையை உயர்த்தி, உடனடியாக அந்தச் சந்திப்பு முடிவதாக சைகையில் காட்டி, ''எழுந்து இரு, போ, சிங்கம் போலாகு! பயபடாதே!'' என்று கூறி அனுப்பினார்.

பலருக்கு, அவர்களின் எதிர்பார்ப்பின் படி எப்படி இருக்க வேண்டுமோ அதன்படி யோகர்சுவாமி இருந்தார். இந்துக்களுக்கு, அவர்களில் ஒருவராக, இந்து சாத்திரங்களில், புராணங்களில் உள்ளதைக் கூறினார். கிறித்தவர்களுக்கு பைபிளில், தீர்க்க தரிசனையில் உள்ள பாடல்களைப் பாடினார். இசுலாமியர்களுக்குக் குரானை எடுத்துக் கூறினார்.

அநேகமாக, யோகர்சுவாமியிடம் சென்றவர்கள் ஏல்லோரும், தங்களின் முன்பெற்ற அறிவின் அடிப்படையில், பெற்றோரின்

வளர்ப்பின் படி, ஆசிரியரின் நெறிப்படுத்தலின் படி சமய அறிவு கொண்டிருந்தார்கள். அவர்கள் சுவாமியிடம் தங்களின் சமயத்துக்குரிய வடிவினைக் கண்டார்கள். இவர்கள் தங்களின் தேவைக்கும், ஆசீர்வாதத்திற்கும், ஆத்மீக வழிகாட்டுதலுக்கும், தங்கள் பிரச்சனைகளுக்கும் வந்தார்கள். சிலர் சுவாமியின் அற்புதங்களுக்கும், ஜாலங்களுக்கும், தீர்க்கதரிசனங்களுக்கும் வந்து தங்கள் நம்பிக்கைக்கு உயிர்ப்பு ஊட்டினர். எல்லோரும் தாங்கள் முழுமையாக யோகர்சுவாமியை அறிந்ததாக வெளிப் படுத்தினார்கள்; உண்மையில் இவர்களுக்கு இவரைப் பற்றி ஒன்றும் தெரியாது!

ஆனால் ஒரு சிறு அளவான அவருடைய பக்த குழுவினர் மட்டும் இவர் ஒரு வித்தியாசமான ஆளுமை உள்ளவர் அல்லது ஒரு ஆளுமைக்கு அப்பாற்பட்டவர் எனக் கருதினார்கள். அவர்களுக்கு இவர் எல்லா வரையறைகளுக்கும் அப்பாற்பட்டவர், ஒரு அழியும் சதையில் வாழும் முரண்பாடு. இவர்களின் பார்வையில் இவர் ஒரு உண்மையான உருவ வழிபாடு நம்பிக்கையற்றவராகவும், எல்லா நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், படித்த அல்லது அறிந்த எல்லாவகையான எண்ண - உருவ மாதிரிகள் அனைத்தையும் சிறு துண்டுகளாகச் சிதறடித்தவர் ஆகத் தோன்றினார். சுவாமி கொள்கைகள், கோட்பாடுகள் அனைத்துக்கும் அப்பாலானவர்; ஒலி, அமைதி இரண்டுக்கும் அப்பாலானவர்!

''வெளியே போ'', ''இங்கு உனக்கு ஒன்றும் இல்லை'', ''நீயே கண்டு கொள்'', ''திறந்த வெளிக்குள் செல்'', ''உன்னை அழித்து நீ வாழ்'', என்பன யோகர் சுவாமியுடனான சந்திப்பில் அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தும் வார்த்தைகள். ஒருவரின் தன்மைக் கேற்றவாறு அவர்களின் அகந்தையை முகத்துதி செய்யும் வண்ணம் இருக்காது. சுவாமி அவர்களைச் சிலநேரங்களில் அன்புள்ள, நல் எண்ணமுள்ள ஒரு தகப்பனாக, சில சமயங்களில் ஒரு கடுமையான குருவாக - ஒருபோதும் மென்மையற்று - சுய அறிவின் உச்சிக்கு அழைத்துச் சென்று, அவர்களின் இறுதி முயற்சிக்கு விட்டுவிடுவார். அவர்கள் தாங்களே பள்ளத்தைக் கடந்து எல்லையில்லாத தெரியாத இடத்திற்குச் செல்வதற்கு - அங்கு எல்லைகள் சந்தித்து,

மறைந்துவிடும். அங்கு அவர்களுக்கு கொள்கைகள், எண்ணங்கள் இல்லாமல் போய்விடும். சாதி, மதம், சமூகம்கடந்த ஒரு பூமியில், இந்த குழப்பமான பன்முகத்தன்மை, வேறுபாடுகள் உள்ள இந்த வாழ்கையின் புரிந்துணர்வைத் திறந்த கைகளுடன் அணைத்துக் கொள்ளலாம்.

இப்படித்தான் சிலர் யோகர்சுவாமியைப் பார்க்கிறார்கள். அகம்பாவம் என்னும் சக்தியால் உந்தப்பட்ட நடிகர்களின் நடிப்பும், செயலும் உண்டாக்கும் வேறுபாடுகளையும், பிரிவினையையும் கடந்து எல்லாரையும் பார்த்து; அவர்களின் வாழ்க்கையையும் ஒன்றிணைக்கும் ஒரு தொட்டில் இருக்கையாக இருந்தார். அவர் அன்பையும், ஞானத்தையும் எல்லோருக்கும் வழங்கினார், சிலநேரங்களில் சிலருக்கு அது வெளியே கசப்புப்பூசிய உள் இனிப்பாக இருக்கும்.

ஒரு சந்தர்பத்தில், கொழும்புக்கு அண்மையில் உள்ள ஒரு நகரத்தில் வசிக்கும் ஒரு சட்டத்தரணியின் மனைவி, அவரின் நீண்ட ஒரு யாத்திரைக்கான ஆசியினைப்பெற சுவாமியின் குடிலுக்கு வந்தார். சுவாமியிடம் மிகவும் பக்திகொண்டவர், இப்படியான செயல்களில் எப்பொழுதும் ஈடுபாடுள்ளவர். அத்துடன் தான் ஒரு மிகவும் சமய ஆச்சார முள்ளவர் என்ற தன்புகழில் பெருமிதம் கொள்பவர்.

அவர் சுவாமியின் முன் வீழ்ந்து வணங்கி, அங்கிருப்பவர்கள் அனைவரும் கேட்கும்படி, ‘‘சுவாமி, நான் கதிர்காமம் போக உள்ளேன்; அதற்கு உங்கள் கருணையை வேண்டுகிறேன்’’ என்று சொன்னார்.

சுவாமி சிலகணங்கள் அவரை ஊடுருவிப் பார்த்து, சைகையால் காட்டி, அவரின் காதுகளில், ‘‘என்ன, கதிர்காமம்? அயோக்கியர்கள் தான் கதிர்காமம் போவார்கள்!’’ என்று கிசுகிசுத்தார்.

அந்த வயதான பெண்மணி கிட்டதட்ட மயக்க நிலைக்குச் சென்றுவிடடார். அவர் உடனடியாக உள்ளங்கையால் தன் வாயினைப் பொத்தி ‘‘எல்லோராலும் வணக்கப்படும் ஒரு சுவாமி இப்படியான நிந்தனையான வார்த்தைகள்

பேசக்கூடாது'' என்ற பாவனையில் காட்டினார். அனேகமாக, சுவாமி அந்தப்பெண்மணியின் புனித அகம்பாவத்தினைக் கண்டார் அல்லது இப்படியான கூற்றின்படி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மனோதத்துவ உணமையினை வெளிப்படுத்தியுள்ளார் போலத் தோன்றியது.

சுவாமி, பணக்காரர்களையும், உயர் பதவியில் உள்ளவர்களை மட்டும் தான் வரவேற்பார் என்று சில யாழ்ப்பாணமக்கள் சொல்வார்கள். நாங்கள் ஒருமுறை, சுவாமியிடமே இதுபற்றிக் கேட்டோம். ''சுவாமி, நீங்கள் ஏன் பணக்காரச்சுவாமி என்று அழைக்கப்படுகிறீர்கள்?'' அவர் வாய்விட்டுப் பலமாகச் சிரித்துச் சொன்னார்; ''பணக்காரருக்கு மட்டுமே நான் தேவைப்படுகிறேன், ஏழைகளுக்கு அல்ல''. ஆஸ்கார் வைல்ட் சொன்ன, ''அழகான பாவங்கள், அழகான பொருட்கள் போன்று, இவை பணக்காரர்களின் சிறப்புரிமை'' வாக்கியம் என் மனதில் மின்னியது.

யோகர்சுவாமியும், ஜென் குருமார்கள், மாறே (Mare), குருட்ஜிப் (Gurdjieff) போன்ற வேறு பெரிய ஆத்மீக வழிகாட்டிகள் போல, வேண்டுமென்று சில விசித்திரமான, அபத்தமான நிலைமைகளை தன் சீடர்களை திருத்தவும், அறிவுறுத்தவும் உருவாக்குவார். அப்படியான களியாட்டங்கள் இரண்டினை, சுவாமியின் நெருங்கிய பக்தரான கொழும்புத்துறை திரு. துரைராஜ சிங்கம் எனக்குச் சொன்னதை இங்கு நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்:-

ஒருநாள் ஒரு பருத்தமனிதன் சுவாமியிடம் வந்து, தான் கடவுளைத் தேடுவதாகவும், அவரை எப்படிக் காணலாம் என்றும், கேட்டார். சுவாமி சொன்னார், ''அது மிகவும் இலகுவானது. நீ செய்யவேண்டியது எல்லாம் உனது வேலையையும், மற்றபிற பணச்சம்பாத்தியங்களையும் விட்டு விலகி விடாமுயற்சியுடன் ஒரு சந்நியாச வாழ்வை வாழவேண்டும்'', என்று.

சில நாட்களின் பின் அந்த மனிதன் பெரும் கோபத்துடன் வந்து, சுவாமி தனக்குப் பிழையான அறிவுரை கூறித் தன்னைத் தவறாக வழிநடத்தியதால், தான் வேலையை இழந்து விட்டதாகவும், இப்பொழுது தனது மனைவி பெரும் தொல்லை கொடுப்பதாகவும்,

தன்னை விட்டுப்போவதாகப் பயமுறுத்துவதாகவும் கூறி, படுத்து இருந்த யோகர்சுவாமியைத் தனது வலிமையான கைகளால் தாக்கினான்.

சுவாமி மிகப் பெரிதாகக் கத்தினார். துரைராசசிங்கம் தன் அயலவர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தபோது, அந்தத் தடித்த மனிதன், சுவாமி மேல் அமர்ந்து கொண்டு, அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டி அடித்துக் கொண்டிருந்தான். துரைராச சிங்கம் கடினமாக முயன்றும், அந்த மனிதனை அங்கிருந்து இழுத்து விலக்க முடியவில்லை.

இந்த நேரத்தில் அந்த அயலவர் சொன்னார்; ''சுவாமி பிழையான அறிவுரை சொன்னால், அவருக்குத் தண்டனை கொடுப்பதில் தவறில்லை, இது காணாது இன்னும் மேலதிகமாகக் கொடுக்க வேண்டும்'' என்று. இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அதிர்ச்சயடைந்து அந்தப் பருத்த மனிதன், அடிப்பதை நிறுத்தி விட்டான். அவன் அதிலிருந்து மீளமுன், அந்த அயலவர் தொடர்ந்து சொன்னார்; ''ஆ, நான் பார்க்கிறேன், நீ அவருக்குப் போதுமான அளவிற்குக் கொடுத்து விடடாய், மிகவும் நல்லது!'' என்று சொல்லி, அந்த மனிதர் மேல் எழும்புவதற்கு உறுதியாக உதவி செய்தார்.


சுவாமி, உடனடியாக எழுந்திருந்து பலமாகச் சத்தமிட்டுச் சிரித்தார். சிரிப்பால் அவரின் உடம்பு முழுதும் குலுங்கி ஆடியது. சுவாமி, அயலவரைக்காட்டி, துரைராசசிங்கத்திடம் சொன்னார். ''அந்த மனிதனைப் பார்!, உனது படிப்பாலும் பட்டத்தாலும் செய்ய முடியாததை, இந்த மனிதனால் செய்ய முடிந்தது!''

இன்னொரு தருணம், சுவாமி சடுதியாகத் துரைராசசிங்கத்தினை உடன் வரச்சொல்லி அழைத்து, அவரின் காரின் முன் இருக்கையில் தான் அமர்ந்து, இனொருவரைப் பின் இருக்கையில் அமர்வித்து துரைராசசிங்கத்தை வண்டியைச் செலுத்தும்படி கூறினார். இந்தப் பின் இருக்கையில் உள்ளவர், அடிக்கடிவந்து சுவாமியின் முன் அமர்ந்திருப்பார். குறிப்பாகப் பெரும் எண்ணிக்கையில் அடியார்கள் திரண்டிருக்கும்பொழுது அமர்ந்து தான் ஒரு மிகவும் விசுவாசமான பக்தனாகக் காட்டிக்கொள்வார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், சுவாமி துரையை, யாழ்பாணத்தில் உள்ள குறுகி வளைந்த தெருக்கள் ஊடாக வண்டியைச் செலுத்தும்படி கூறினார். அப்பொழுது மாலை நேரம் ஐந்துமணி இருக்கும், அலுவலக நேரம் முடிந்து, அலுவலர்களைக் கொண்டு செல்லும் வாகனங்களின் நெருக்கடி நிறைந்த நேரம். சடுதியாகச் சுவாமி துரையிடம் சொன்னார், ஒருவழிப் பாதையில் தவறான முனையில் இருந்து எதிர்ப்பக்கமாகச் செல்லும்படி. அங்கு எல்லாம் முடங்கிய சிக்கல் நிலை ஏற்பட்டுப், பேருந்துகள், வண்டிகள் எல்லாம் நின்று, பெரும் ஒலிகளை எழுப்பின, ஓட்டுனர்களின் திட்டல்களும் எதிரொலித்தன, அந்த நேரத்தில் துரையின் வண்டி எதிர்புறமாகப் பதுங்கிச் செல்ல முற்பட்டது.

ஒரு சந்தர்ப்பத்தில், மோதலைத் தவிர்ப்பதற்காக வண்டியை நிறுத்த வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. அந்தக் கணநேரத்தில், வண்டியின் பின் இருக்கையில் இருந்த அந்த விசுவாசமான பக்தர் சொல்லிக் கொள்ளாமல் கதவை மெதுவாகத் திறந்து வண்டியில் இருந்து இறங்கித் தப்பி ஓடினார். சிறிது வினாடிகளில், சுவாமி துரையிடம் சொன்னார் பின் கண்ணாடியில் பார் அந்த விசுவாசமான பக்தரை என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தார்!

சுவாமி ஒருமுறை என்னிடம் சொன்னார், ஒருவர் வாழ்க்கையில் இருந்து கற்பதுதான், மிகப் பெரிய வேதம். ‘‘வாழக்கை என்ற புத்தகத்தில் இருந்து படி. உன்னையே நீ கூர்ந்து கவனி, அத்துடன் வெளிப்புறச் சூழலுக்கான உனது எதிர்வினையைக் கவனி. எதையும் அடக்காதே - உன்னுடைய பாதையில் வரும் எல்லாச் சந்தர்பங்களையும் கவனமாகக் கவனி, மகிழ்ச்சியோ, கவலையோ, கோபமோ, அன்போ - பின் ஒருநாள் முற்றிலும் திடீரென, எதிர்பாராதவிதமாக, இதை எல்லாம் கவனிப்பவரையும், இதில் எல்லாம் ஈடுபடுபவரான அந்த ‘‘கவனிப்பவரை’’ நீ காண்பாய்’’.



# ஜேம்ஸ் ஜோர்ஜ்

***Dr. James George***

***(September 14, 1918 – February 7, 2020)***

இவர் ஒரு கனடாநாட்டுத் தூதுவர், அரசியல், சூழலியல் ஆர்வலர், எழுத்தாளர், ஆத்மீகத்தேடுனர். இவர் டொரோண்டோ யூனிவர்சிட்டி, ஹார்வர்ட் யூனிவர்சிட்டி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். 2008ம் ஆண்டு டொரோண்டோ பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர்பட்டம் பெற்றவர். இரணடாம் உலகப் போரில் றோயல்கனடியன் கடற்படையில் பணியாற்றியவர். அதன்பின்னர், ஐக்கிய நாடுகள் சபையில், கனடாவின் பிரதிநிதியாகப் பணியாற்றியவர். 1955-1957 காலப்பகுதியில் கனடா நாட்டு வெளியுறவுத் துறையில் பணிபுரிந்தார். 1957-1960 கனடாவின் நேட்டோ பிரதிநிதியாகப் பாரிஸில் பணிபுரிந்தார். 1960-1964ல் இலங்கையில் கனடாவின் தூதுவராகப் பணிபுரிந்தார். பின்பு இந்தியா, நேபாளம், ஈரான் ஆகிய நாடுகளிலும் பணிபுரிந்து 1977ம் ஆண்டு வெளிநாட்டுச் சேவையில் இருந்து ஒய்வு பெற்றார். அதன் பின்னர் சுற்றுச் சூழலிலும், ஆத்மீகத்திலும் ஈடுபட்டிருந்தார். சர்வதேச திமிங்கில அமைப்பில் பிரதானபாகம் வகித்து அதனைக் காப்பாற்றுவதில் பாடுபட்டார். அத்தோடு, அன்வர் சதாத் அமைதி

*அமைப்பின் இணை அமைப்பாளராகப் பணியாற்றி மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுத்தப் பாடுபட்டார். இவர் தன் 101வது, வயதில் பெப்ரவரி 2020 இயற்கை எய்தினார்.*

*இவர் பலவருடங்கள் பல நாடுகளில் தூதுவராகப் பணியாற்றிய பொழுது அந்த நாடுகளில் உள்ள பலவகையான ஆத்மீக வாதிகளைச் சந்தித்துள்ளார். அவர்களில் இலங்கையில் சந்தித்த யோகர்சுவாமியும் ஒருவர். டாக்டர். ஜேம்ஸ் ஜோர்ஜ் இலங்கையில், கனடாநாட்டின் தூதுவராக 1960களில் பணிபுரிந்த பொழுது, இவர் சந்தசுவாமி-சோல்பரி சுவாமி என்ற இலங்கையின் முன்னநாள் ஆளுநர் சோல்பரி பிரபுவின் மகன் மூலம் யோகர்சுவாமியிடம் அறிமுகமானார். அதன் பின்பு யோகர்சுவாமியைப் பலமுறை சந்தித்துள்ளார்.*

*அவர், சுவாமியால் பெரிதும் கவரப்பட்டவர். சுவாமி பற்றிய தன் அனுபவ நினைவுகளைப் பின்வருமாறு பகிர்கிறார்:-*

*இலங்கைத் தமிழர்கள் அவரை யாழ்ப்பாண முனிவர் (Sage of Jaffna) என அழைக்கிறார்கள். அவரின் ஆயிரக்கணக்கான பக்தர்கள், சிங்கள பௌத்தர்கள், கிறித்தவர்கள் உட்பட அவரை ஒரு ஞானி (Saint) என அழைக்கிறார்கள். அவருக்கு மிகவும் நெருக்கமான சிலர் அவரை ஒரு வயதான சிங்கம் (Old Lion) அல்லது போதிதர்மரின் மறுபிறப்பு எனக் குறிப்பிடுகிறார்கள். அவர் ஒரு நன்கு பயமூட்டுபவராக, ஒரு கணிப்பிடமுடியாதவராக, வேண்டப்படாத அடியார்களை ஒரு தடி கொண்டு விரட்டிக்கலைப்பவராகக் காணப்பட்டார்.*

*நான் அவரைச் சுவாமி என்று அழைத்தேன். அவர்தான், சுத்த வேதாந்த வடிவான இந்து சமயத்திற்கு எனது அறிமுகம். நான் 1960களில் இலங்கையில், கனடா நாட்டின் தூதுவராகப் பணிபுரிந்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் எனது குரு ஆவார்.*

*கடந்த 10 வருடமாக நான் குருட்ஜிப் என்பவரின் எழுத்துக்களைப் (Gurdjieff Work) படித்தவன். அவரின் சீடனான பி.டி.ஆஸ்பென்ஸ்கியின் (P. D. Ouspensky) மாணவனான ஜேம்ஸ் ராம்ஸ்போதம் (சந்தசுவாமி), அவரின் தந்தை சோல்பரி பிரபுவின் தம்பி பீட்டருடன், இலங்கைக்கு வந்த சிறுகாலத்தில் ஒரு*

வெப்பமான பின்மதிய நேரத்தில், இலங்கையின் வடகரையில் உள்ள ஒரு சிறிய ஓலையால் வேய்ந்த சாதாரண குடிலின் முன் நான் நின்றிருந்தேன், எனது யோகர்சுவாமியின் முதல் சந்திப்புக்காக.

நான் மெதுவாகக் கதவினைத் தட்டியபொழுது, உள்ளிருந்த ஒரு கர்ச்சனைக் குரலில், ''இது கனடாநாட்டின் தூதுவரா?''. நான் கதவைத் திறந்து பார்த்த பொழுது, அவர் காலைக் குறுக்காக மடித்து, நிமிர்ந்து தரையில் அமர்ந்திருந்தார். வெள்ளை உடை அணிந்து வெண்தலை முடியும். வெண்தாடியும் கொண்ட ஒரு கம்பீரமான தோற்றத்துடன் காணப்பட்டார்.

நான், ''நல்லது, சுவாமி'' எனத் தொடங்கினேன்; ''அதுதான் நான் செய்வது, ஆனால், நான் அதுவல்ல; அப்ப இங்கே வந்து என்னுடன் அமரவும்'' எனச் சொல்லி அட்டகாசமாகச் சிரித்தார்.

நான் அந்தக்கணத்தில் இருந்து அவருடன் பந்தப்பட்டு விட்டதாக உணர்ந்தேன். அவர் என்னை நானே யார் எனக் கண்டு கொள்ளும் வழிமுறைக்குள் ஆழமாக உள்செல்ல உதவி செய்தார், என்னை எனது உத்தியோக வேடங்களுடன் அடையாளப்படுத்துவதைக் குறைத்தார்.

உண்மையாக, அவரது சமகாலத்தில் தென் இந்தியாவில், திருவண்ணாமலையில் வாழ்ந்த தமிழ்ப் பெரியவர் ரமண மகரிசியின் போதனைக்கு ஈடாக ''நான் யார்?'' என்பதை மந்திரமாகவும், இருத்தலியல் கேள்வியாவும் போதித்தார். நான் தியானப் பயிற்சியில் ஈடுபடாது, நாடு முழுவதும் சுற்றித்திரிந்து. ஒன்று மாறி ஒன்று எனப் பல அலுவலக வேலைகளில் ஈடுபடுவதை அடிக்கடி கண்டித்தார்

நான் எனது தாய்நாடான கனடாவிற்கு விடுமுறை சென்று உலகைச் சுற்றி வரும் வழியில், பிரான்சு, ஜப்பான், இந்தோனேசிய, கம்போடியா போன்ற நாடுகளுக்குச் சுற்றுலா சென்று வந்தேன். பின்பு சுவாமியைச் சந்தித்த பொழுது, என்னைத் தன்பக்கத்தில் கட்டாயமாக அமரவைத்துச் சொன்னார்; நான் எனது வாழும் - சக்தியை வீண் விரயம் செய்வதாகவும், எப்பொழுதும் வெளிப்

பக்கமாகத்தான் பார்ப்பதாகவும், காண வேண்டியது எல்லாம் உள்ளேயே உள்ளது என்றும் கூறினார்.

நீ அமைதியாக அமர்ந்து அதுவாக இருப்பதற்குப் பதிலாக எந்த நேரமும் ஓடிக்கொண்டு எதையோ செய்து கொண்டு இருக்கிறாய்! நீ ஏன் வீட்டில் இருந்துகொண்டு உன்னை நீ ஏன் எதிர்கொள்ளவில்லை. உன்னையே கேள். என்னை அல்ல! ''நான் யார்?'',''நான் யார்?'',''நான் யார்?'',''நான் யார்?'',''நான் யார்?'',''நான் யார்?'' என்ற அவரது சொற்களின் குரல்சத்தம், சிறிது, சிறிதாக ஒவ்வொரு திரும்பத் திரும்ப சொல்லலுக்கும் உச்ச சத்தமாக மாறிக் கடைசியில் அவர் மிகவும் உயர் சத்தத்தில் தனது முழுச்சக்தியையும் சேர்த்து அலறினார்.

அதன் பின்பு சுவாமி திடீரெனப் பெரும் மௌனமார். அதிச க்தி வாய்ந்த ஒரு பெருமௌனம். அந்த மௌனம் மிகவும் ஒரு பேச்சற்ற போதனையாக, சொற்களிலும் பார்க்க வீரியம் கொண்டு அந்தக் குடிலைப் பெரும் சக்தியால் நிறைத்து, எனது எண்ணங்களை அவரின் முன்னிலையில் அழித்தது. அந்தக் கணத்தில் ஒரு கேள்வியும் இல்லாமல் ''நானே அது'' என்பதை உணர்ந்தேன். ''யார்'' என்பது தேவைப்படவில்லை! நான் நானானேன். எப்பொழுது செயல்களிலும் எண்ணங்களிலும ஈடுபட்டு நான் என்னை மீண்டும் மீண்டும் மறந்த தருணங்களில், இந்தப் படிப்பினையினையே நான் தொடர்ந்து மீண்டும் மீண்டும் திரும்பப்படித்து, மீள் அனுபவம் பெறுவேன்.

வேறு ஒரு தருணம், எனது மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் அழைத்துச் சென்று சுவாமியைத் தரிசித்தோம். சுவாமி எனது பிள்ளைகள் ஒவொருவரையும் பார்த்து, அவர்களின் வயதினைக் கேட்டார்.

எங்கள் மகள் சொன்னார், ''ஒன்பது'', ஆண் பிள்ளைகள், ''பதினொன்று'', ''பதின்மூன்று'' என்றார்கள்.

சுவாமி அவர்கள் ஒவொருவரிடமும், தனது வயதும் அவர்கள் வயதும் ஒரே வயதுதான் என உறுதிபடக் கூறினார். அப்பொழுது பிள்ளைகள், அதை மறுதலித்து, அவர் எவ்வாறு ஒரே நேரத்தில்

மூன்று வித்தியாசமான வயதில் இருக்கலாம், நீங்கள் கட்டாயம் எங்களது பேரனாரிலும் பார்க்க வயது கூடியவர் எனக் கூறினார்கள். சுவாமி அதற்கு மெல்லச் சிரித்து, தனது கண்ணை சிமிட்டி, எங்களுக்குப் புரிந்ததா எனப் பார்த்தார்.

அந்த நேரத்தில் நாங்கள் இதனைப் பிள்ளைகளுடனான ஒரு நகைச்சுவையாகக் கருதினோம். ஆனால், ஆறுதலாக, இதில் உள்ள கருத்தின் ஆழமான உட்ப்பொருளை நாம் கண்டு அறியவேண்டும் என உணர்ந்தோம். நான் இப்பொழுது நினைக்கிறேன், இது அவரின் மறைமுகமான போதனையாகும். பிறப்பிலிருந்து இறப்புவரை, உடம்பு வேறுவேறான வயதில் இருந்தாலும், இந்த உடம்பு எல்லாம்போல உண்மையாகத் தெரிந்தாலும், உடம்பு என்பது ஒரு வாகனம் ஆகும், இது முன்புபோலப் பின்பும் அதேதான். அந்தக் கருத்தில் நாங்கள் அனைவரும் 'ஒரே வயதினரே'.

சுவாமியுடன் பலதடவைகள் சந்தித்தாலும், நான் எனது கேள்விகளை மிகவும் கவனமாகத் தயார்செய்வேன். ஒருநாள் நான் இவ்வாறு தயாராக, எனது காலணிகளை அகற்றிவிட்டு அவரது குடிலுக்குச் சென்று உள்ளே தரையில் உள்ள ஒரு பாயில் அமர்ந்தேன். அவரின் ஒருபொழுதும் தவறாத கவனத்துடன் என்னைக் கவனித்தார். நான், ''சுவாமி, நான் நினைக்கிறேன்'' ஏன நான் தொடங்கிய பொழுது, அவர் கர்ச்சித்தார், ''முதல்லயே பிழை'' என்று. எனது மனம் உடனடியாகக் கருத்துருவற்ற நிலை அடைந்து, நானே அதுவாக இருக்கும் நிலையை அடைந்தேன். சுவாமி இப்படியான ஒரு நிலைக்கு தூண்டுவதில் வல்லமையுள்ளவர்.

சுவாமிகளின் முப்பது வருட மறைவிற்குப் பின், உலகை இப்பொழுது பார்க்கும் பொழுது; நான், அவர் அதே பழமொழிகளை அதே நம்பிக்கையுடன் இப்பொழுதுள்ளவாறு கூறுவாரோ என ஆச்சரியப்படுகிறேன்.

அவர் இப்பவும் அமைதியாக நம்முள்ளேயே போய், தான் சொன்னதை விளங்கிக் கொள்ளும்படி கூறுவார் என நான் எதிர்பார்க்கிறேன். உண்மை தூய்மையற்றதாகவும், தவறானதாகவும் இருக்க முடியாது. நாம் உண்மையற்றதாகவும், நிகழ்காலத்தில்

வாழாதிருக்கும் போதும், நாங்கள் மட்டுமே தவறாகவும், தூய்மையற்றதாகவும் இருக்கிறோம்.

இவர் பின்வரும் நூல்களை எழுதியுள்ளார் :-

- *George, James (1975). Achaemenid Orientations.*
- *George, James; Blackwelder, Brent (10 July 1991). "Oil Fires: A Middleast Chernobyl?". Toronto Star. p. A21.*
- *George, James (1 September 2002). ASKING FOR THE EARTH: Waking Up to the Spiritual/Ecological Crisis. Barrytown, NY: Station Hill Press. ISBN 978-1581770902.*
- *— (22 August 2009). The Little Green Book on Awakening. Barrytown, NY: Station Hill Press. ISBN 978-1-58177-112-1.*
- *— (2016). Last Call : Awaken to Consciousness (Paperback).*

இவரைப்பற்றிய ஒரு சிறு ஆவணப்படம் ஒன்று இவரின் 94ம் வயதில் ''ஆத்மீகத் தூதுவர்'' (THE SPIRITUAL DIPLOMAT) என்ற தலைப்பில் வெளிவந்தது.




## பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

## *Prof. A.S. Gnanasambanthan (1916 - 2002)*


இவர் தமிழ் நாட்டின் புகழ்பெற்ற ஒரு தமிழ்ப் பேராசிரியர், மிகச்சிறந்த தமிழ்-சமய-இலக்கியப் பேச்சாளர், எழுத்தாளர். இவரும் யோகர்சுவாமிகளுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர். இவர் அந்தக்காலங்களில் இலங்கைக்கு அடிக்கடி வந்து இலக்கிய, சமயப் பிரசங்கங்கள் செய்தார்; பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர், ''அருளாளர்கள்'' என்ற நூலில், ஒரு கட்டுரையில், ''சித்த யோகசுவாமிகள்'' என்ற தலைப்பில் மிக விரிவாகவும், சுவையாகவும், யோகர்சுவாமியுடனான தன் அனுபவங்களையும், அற்புதங்களையும் எழுதியுள்ளார். ஆர்வமுள்ளவர்கள் அந்தப் புத்தகத்தில் இருந்து இக்கட்டுரையினை வாசித்து அறிந்து மகிழலாம். அதன் முகப்பு இத்துடன் இணைக்கப்படுள்ளது. இந்நூல் இணையத்திலும் உள்ளது. விரும்பியவர்கள் அதிலும் இலகுவாக வாசித்தறிய முடியும்.




## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருமூலர் | 1 |
| 2. | திருமந்திரம் — பொருள்நிலை | 11 |
| 3. | நடராஜ தத்துவம் | 31 |
| 4. | திருவாசகங் காட்டும் திருநெறி | 35 |
| 5. | திருவாசகத்தில் விஞ்ஞானம் | 43 |
| 6. | நம்மாழ்வார் | 55 |
| 7. | திருவிளையாடலும் பரஞ்சோதியாரும் | 105 |
| 8. | சைவ சமயத்தில் ஒளி வழிபாடு | 143 |
| 9. | தாயுமானவர் கூறும் வாழ்க்கை நெறி | 161 |
| 10. | வள்ளலார் கண்ட வாழ்வு நெறி | 183 |
| 11. | சித்த யோகசுவாமிகள் | 227 |



# மாணிக் சந்திரசாகரா

## *Manik Sandrasagara (1945 - 2008)*

*மாணிக் சந்திரசாகரா, ஒரு இலங்கைத் தமிழர், மிகவும் பல்முக ஆற்றல் கொண்டவர். இலங்கையின் சினிமாத்துறை, சுற்றுலாத்துறை போன்றவற்றில் பெரிதும் ஈடுபட்டு அதை உலகதரத்துக்கும் புகழுக்கும் உயத்தியவர், மிகவும் சிறந்த ஆளுமைமிக்க எழுத்தாளர், ஊடகவியலார். யோகர்சுவாமியின் சீடரான ஜேர்மன் சுவாமியுடன் 1971ல் இருந்து நெருங்கிப்பழகி அவரின் ஆத்ம நண்பரானார். அவர் மூலம் யோகர்சுவாமி பற்றி அறிந்து, அந்த சம்பிரதாய முறையை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்தவர். ஜேர்மன் சுவாமியுடன் சேர்ந்து வருடாந்திர கரையோர பாத யாத்திரையில் பல வருடம் பங்குபற்றியவர். போர்க் காலங்களிலும் பல சிரமங்கள் மத்தியில் விசேட அனுமதி பெற்று பாத யாத்திரையைத் தொடர்ந்து நடத்தியவர். இவர் யோகர்சுவாமி பற்றியும், ஜேர்மன் சுவாமி பற்றியும் பலகட்டுரைகள் எழுதியுள்ளார். ஏற்கனவே ஜேர்மன் சுவாமியின் கட்டுரையில் இவர் பற்றிக் கூறியுள்ளேன். இவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் கூறிய சம்பவம் ஒன்று என் கவனத்தை மிகவும் ஈர்த்ததால் அதை விசேடமாகக் குறிப்பிட்டால் நன்றாயிருக்கும் எனக்கருதுவதால் அதனை இங்கு குறிப்பிடுகிறேன்.*

*1980ல் ஒருநாள், நான் அந்நாளைய இந்து சமயத்துறை அமைச்சர் தேவராஜன் அலுவலகம் சென்றிருந்தேன். அவர் சில வயதான இந்துக்களுடன் ஒரு சந்திப்பில் இருப்பதால், என்னை ஒரு கதிரையில் அமரும்படி பணித்தார்கள். என்னால் அமர முடியவில்லை; ஆனால், எனது ஐந்துவருட மேற்கத்தைய வாழ்வின்பின் 1971ல் இலங்கை திரும்பி, எந்த ஆத்மீகப் பாரம்பரிய வழிமுறையில் துவக்கி வைக்கப்பட்டேனோ அதற்கு மிகவும் தொடர்புடைய அவர்களின் கருத்தாடல் ஒன்றைச் செவிமடுத்தேன்.*

*யாழ் முனிவர் யோகர்சுவாமியின் சில பாமர பக்தர்கள், சுவாமியின் வருடாந்தர பிறந்தநாள் ஞாபகார்த்தக் கொண்டாட்டமாக ஒரு தபால் முத்திரை, ஒரு சிலை, சுவாமியின் பெயரால் ஒரு வீதி ஆகியவற்றினை உருவாக்குவதற்கு அமைச்சர் தேவராஜனுடன் ஒழுங்கு செய்தார்கள். இந்த மதச்சார்பற்ற இழிவினைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்டவனே நான் என உணர்ந்து பேசத் தலைப்பட்டேன்.*

*முத்திரை பின்னால் நக்கப்பட்டு, தபால் பெட்டியில் தள்ளப்பட்டு, தபால் கந்தோரில் முகத்தில் குத்தப்பட்டு கடைசியாகக் குப்பைத் தொட்டியில் முடிவுறுவதால் ஒரு முனிவரின் புகழ் கூடிடுமா?*

*பறவைகள் எச்சமிடுவதற்கு மட்டுமே உபயோகமாகும் சிலைகளால் ஞானம் பரப்பப்படுமா?*

*மாசடைந்த வீதிகள், வர்த்தகத்தின் அடையாளமானவை, சுவாமிகளின் பெயர் சூடலால் இறையச்சத்தை அதிகரிக்குமா?*

*நான் கூறியவற்றிக்கு அந்த அமைச்சர் சாதகமாகப் பதிலளித்தார்! அத்துடன் அந்தப் பாமர பக்தர்களும் அமைதியாகிவிட்டார்கள். ஒரு மாயவித்தைபோல இந்தப் பிரச்சாரம் கைவிடப்பட்டு பாரம்பரிய அணுகுமுறைகள் மேலோங்கின.*

*யோகர்சுவாமி போன்ற சித்தர்கள் பிறந்தநாள் கொண்டாட மாட்டார்கள், புகைப்படம் எடுக்க முன்நில்லார்கள், நூல்கள் எழுதார்கள், வணக்கத்துக்குரிய, மதிப்புக்குரிய, கலாநிதி போன்ற பட்டப்பெயர்களைப் பயன்படுத்தார்கள். அவர்கள்*

புகழ்ச்சியையோ, பக்தர்களையோ தேட மாட்டார்கள், பரபரப்புத்தேடும் அறிவற்ற ஊடகங்களுக்குத் தம்மை வெளிப்படுத்தமாட்டார்கள்.

இந்த அனாமதேய சுதந்திர ஆத்மாக்கள் தங்களின் விருப்பத்தில் காற்றுப்போல நகர்ந்து செல்வார்கள். ஒரு சித்தர் பேசும்பொழுது பெரும்பாலும் புதிராகப் பல அர்த்தங்கள் உடையவை, ஆனால் அவை எப்பொழுதும் நித்தியமான தர்மம் (Eternal Dhamma) ஆகும். அவர்கள் எங்கிருக்க வேண்டும் என்று தெரிவு செய்கிறார்களோ, அங்கு அவர்களுடன் உலகின் நான்கு பக்கங்களில் இருந்தும் அறிவொளிபெற்ற சமூகம் கலந்து கொள்ளும். இந்த உலகமே அவர்கள் வீடாகும். இந்தச் சமூகம் பல நூற்றாண்டுகளின் பின்னர் இந்த இலங்கை என்று அழைக்கப்படும் புனித பூமியில் தங்கள் மகிழ்ச்சியைக் கண்டார்கள். யோகர்சுவாமியின் புகழ் என்னவெனில் பல பாமர மக்களும் தங்களை அவரின் சீடர்களாகக் கருதியதே!

# குட்டிக்கூட்டம்

இங்கு கூறப்பட்டுள்ள சில யோகர்சுவாமியின் சீடர்களுக்கு ஒரு வித்தியாசமான செல்லப் பெயர்கள் உண்டு. இதனால் அவர்களை யோகர்சுவாமியின் குட்டிக்கூட்டம் என்று அழைத்தார்கள். இந்த குட்டிக் கூட்டதிற்கு யார் பெயர் வைத்தது என்பதில் சற்றுக் குழப்பங்கள் தென்படுகிறது?

ஜேர்மன்சுவாமி - நாய்க்குட்டி
சந்தசுவாமி - யானைக்குட்டி
பர்ரி வின்ட்சர் - நரிக்குட்டி
அட்ரியன் ஸ்நோக்ராஸ் - பூனைக்குட்டி
சாம் விக்ரமசிங்கே - புலிக்குட்டி
முதலியார் சுவாமி - பன்றிக்குட்டி

இவர்கள் கதிகாமத்தில் வசித்த பொழுது, இவர்களுடன் இருந்த ''ஹரோ ஹாரா அம்மா'' (Haro Hara Amma) என்று அழைக்கப்பட்ட ஒரு இந்திய வம்சாவளி, மலையகத் தோட்டம் ஒன்றில் வசித்து வந்த, அடிக்கடி கதிர்காமத்தில் சென்று தங்கும் ஒரு தமிழ்மாது தான் இவர்களுக்குப் பெயர் வைத்ததாகச் சில பதிவுகள் கூறுகின்றன.

இத் தமிழ்மாது தந்திரக்கலை தெரிந்தவரென்றும், அதனால் இவர் பிறரின் உள்மனத்தினை ஊடுருவிப்பார்க்கும் திறன் கொண்டிருந்தார் என்றும், அதன்படி இவர்களின் உள்மன ஆளுமைகளை அறிந்து அதற்கேற்றவாறு இந்தச் செல்லப்பெயர்களை அவரே சூட்டியதாகக் கூறுகின்றன.

இந்த குட்டிக் கூட்டத்திற்கு எல்லாம் தலைவனாக ஜேர்மன் சுவாமி இருந்தார் என்றும். அவர் பின்னால்தான் மற்றைய ஐவரும் சென்று மாணிக்க கங்கையில் நீராடுவார்கள் என்றும். அப்பொழுது பார்த்துத்தான்; இவர்களுடன் சேர்ந்திருந்து பணிபுரிந்து உதவிய இந்த ஹரோ ஹாரா அம்மா தான் இந்தப் பெயர்களை முதலில் சூட்டி அழைத்தார் என்றும். அது பின்னாளில் இவர்கள் எல்லோர் வாழ்விலும் நிதர்சனமாகியது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இருவரும் கட்டிடக் கலைஞர்கள் *(Architects)* ஒருவர் பர்ரி வின்ட்சர் *(Barry Windsor)*, இவருக்கு நரிக்குட்டி என்றும், மற்றையவரான அட்ரியன் ஸ்நோட்க்ராஸ் *(Adrian Snodgrass)* பூனைக்குட்டி என்றும் பெயர்வைத்து, பின்னர் சொன்னார், நரி நிற்கும், பூனை திரும்பும் என்று. அதன்படி நரிக்குட்டி இங்கயே தங்கி நிரந்தரமாக இருந்துவிட்டார். பூனைக் குட்டியாகிய ''அட்ரியன் ஸ்நோட்க்ராஸ்'', சிறிது காலத்தில், இந்தியா, நேபாளம் சென்று அங்குள்ள கட்டிடக்கலைகள் பற்றி அறிந்தபின். ஆஸ்திரேலியா திரும்பி கட்டிடக்கலையில் புகழ்பெற்ற கலைஞர் ஆகவும், பேராசிரியர் ஆகவும் பணிபுரிந்து, பல உலகப்புகழ் பெற்ற கட்டிடக்கலை சம்பந்தமான நூல்கள் எழுதியுள்ளார்.

ஆனால், திருவண்ணாமலையில் நரிக்குட்டியுடனான, எனது சந்திப்பில் அவர் சொன்னார், இந்த செல்லப் பெயர்களை எல்லாம் யோகர்சுவாமி தான் வைத்ததாகவும், அதன்படி எல்லாம் 30 வருடங்களில் நடந்தது என்றும்; தனக்கு நரிக்குட்டி, அதன்படி தான் திருவண்ணாமலையில் பொந்தில் வாழ்வதாகவும், சந்த சுவாமி *(Soulbury Swamy)* யானைக்குட்டி, பிற்காலத்தில் இங்கிலாந்தில் ஒரு காட்டுப்பகுதியுள் வசிப்பதாகவும் விளக்கிக் கூறியிருந்தார்.

யோகர்சுவாமி அந்த தந்திரியயோகி, ஹரோ ஹாரா அம்மா வைத்த பெயரைச் சொல்லியே இவர்களை அழைத்திருக்கலாம் என்று ஊகம் கொள்ளலாமென்று! ஏனெனில் அவர்தான் எல்லாம் அறிந்த திரிகால ஞானி ஆயிற்றே!

யாமறியோம்! ஓம் தத் சத் !!



*இருப்பவர்கள் : இடமிருந்து வலமாக*

*நரிக்குட்டிசுவாமி, முதலியார் சுவாமி (பன்றிக்குட்டிசுவாமி), சந்தசுவாமி (ஆனைக்குட்டி சுவாமி)*

*நிற்பவர்கள் : இடமிருந்து வலமாக*

*சாம் விக்ரமசிங்கே (புலிக்குட்டி), அட்ரியன் (பூனைக்குட்டி)*

*ஜேர்மன் சுவாமி (நாய்க்குட்டி), அல்லிராஜா - அப்பாசாமி மடம்*

## *A Point to Ponder*

# இலங்கைப் பிரச்சனையில்: யோகரின் தீர்க்கதரிசனம்

### சர்வ சக்திமான் வருவார் காத்துக்கிட்டிருக்கோம்!

## *Sri Lanka's Prolonged Ethnic Problem & Yogar Swami's Visioned Prediction! Anxiously Awaiting for The Deliverer!*

*யோகர்சுவாமி, திரிகாலமும் உணர்ந்த ஞானி, தீர்க்கதரிசி, முழுதும் உணர்ந்த முனிவர், ஒரு சித்த புருஷர், ஆத்மஞானி என்று! பலவகையாக அழைக்கப்பட்டவர்.*

*அவர் இலங்கையில் தான் வாழ்ந்த காலத்தில் பல பல எதிர்வுகளைக் கூறியுள்ளார்! அது தனிப்பட்ட வகையிலும் சரி, பொதுச் சமூகம் சம்பந்தப்பட்ட வகையிலும் சரி, அந்த எதிர்வு கூறல்கள் அனைத்தும் சரியாகவே நடந்தன!*

***உதராணமாக, ஒரு பொது எதிர்வு கூறலை எடுத்தால்:-***

*அவர் இலங்கையின் மூலை முடுக்குகள் எல்லாம் யாத்திரைகள் பலமுறை சென்று இருக்கிறார். பல்லின மக்களோடும், பல சமயத்தவர்களோடும் பழகியவர். அப்படி ஒரு யாத்திரையின் பொழுது, பேராதனைக் குன்றில் நின்றபொழுது, இந்த இடத்தில் ஒரு பல்கலைக்கழகம் வருமென்று எதிர்வு கூறினார் என்றும்! சில காலங்களின் பின்னர் அப்படியே பேராதனைப் பல்கலைக்கழகம், அங்கு உருவானதாக, சுவாமி பற்றிய பதிவுகள் கூறுகின்றன.*

*இதேபோல எங்கள் இலங்கைத் தீவின் பல தசாப்தங்களாகத் தொடரும் இன-முரண்பாடுகளைப் பற்றியும், இது அதி தீவிர மடைவதற்குப் பல தசாப்தங்களுக்கு முன்பே, யோகர்சுவாமி பல முன்னெதிர்வுகள் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அவற்றில் பல நிதர்சனமாக நடந்து முடிந்தன. இலங்கை சுதந்திரத்தைத் தீவிரமாகப் போராடாமல் பெற்று இன்று 74 வது வருடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலப்பல திருப்புமுனைகள்,*

*போராட்டங்கள், களங்கள், வெளிச்சக்திகளின் நேரடி/மறைமுக ஈடுபாடுகள் எனப் பல பல எம் கண்முன்பே நடந்தன. இரு தலைமுறைகள் மறைந்து, மூன்றாவது தலைமுறையும் மறையப் போகிறது! இன்னமும் முடிவு தான் இல்லை. இன்னமும் ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்பதே நிலை!*

*யாரையும் யாரும் குறைசொல்லிப் பிரயோசனம் இல்லை. ஏன் எனில் அதுதான் கடந்த காலங்கள் முழுக்க நடந்தன; தற்போதும் அதே நிலை தான்! எல்லாம் ஏற்கனவே நியமிக்கப்பட்ட நியதியின்படி, காலத்திற்குக் காலம் அதற்குரிய நடிகர்கள் தோன்றி நடிக்கப்பட வேண்டிய நாடகங்கள் நடந்து கொண்டேதானிருக்கும். இவை ஒன்றும் சாதாரண மக்களின் கையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கையிலோ இல்லை! யார் எதைச் சொன்னாலும் இது தான் சத்தியம்!*

*இனி என்ன நடக்கலாம்? எப்படி நடக்கும்? என்ற அங்கலாய்ப்பு எல்லோருக்கும் எப்போதும் இருக்கும்! இப்படி ஒரு அங்கலாய்பு பக்குவப்படாத எனக்கும் இளமைக் காலத்தில் இருந்தது, அது வயதுத் துடிப்பு, அறியாமையின், பக்கவிளைவுகள்!*

*அந்த நேரத்தில் தான் மனித ஓட்டத்திற்கு எதிராக மேற்கில் இருந்து நான் சென்னை சென்று அங்குள்ள இலங்கை தமிழர் தகவல் மையத்தில் இணைந்து சேவை புரிந்தகாலம். அப்பொழுது தான் இலங்கை இனப் பிரச்சினையின் மையமும், கதாபாத்திரங்களும் அங்குதான் நிலை கொண்டிருந்தன. ஜூலை 1983 கலவர காலத்தின் பின்னர், இந்திரா-ஜே.ஆர் காலம் வட்ட மேசை மகாநாடு (RTC), அனைத்துக்கட்சி கூட்டம் (APC). பின்பு ராஜிவ்-ஜே.ஆர் காலம் திம்பு பேச்சுவார்த்தை (Thimpu Talks)....*

*திரு.நவரத்தினம், திருமதி. இரத்னா மா நவரத்தினம், தம்பதிகள் புலம் பெயர்ந்து, ரமணாசிரமம், திருவண்ணாமலையில் வாழ்ந்தார்கள். 1984 ஆரம்பத்தில் இருந்து அவர்களுடன் தொடர்பு ஆரம்பம். தொடர்ந்து பழகிப் பழகி, அடிக்கடி திருவண்ணாமலை சென்று வந்தபொழுது, அல்லது அவர்கள் சென்னை வந்தால், அடையார் ஆலமரம் தீயோசோபிக்கல் சங்கம் விடுதியில் தங்கிய*

பொழுதெல்லாம், அவர்கள் யோகர், ரமணர் பற்றிய செய்திகளை வாரி வழங்கினார்கள்.

ஒவ்வொருமுறை சந்திக்கும்பொழுதும், இறுதியில் பேச்சு, ''சுத்திச் சுத்தி சுப்பற்றை கொல்லை'' மாதிரி, இருக்கவே இருக்கே நமது பிரச்சனை அங்குதான் முடியும்! அப்பொழுதெல்லாம் **இரத்னா மா** திரும்பத் திரும்ப சொல்லுவார், சுவாமி சொன்னவர், சுவாமி சொன்னவர் என்று **அவரின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்க்கதரிசனங்களை!** ஒவ்வொரு சந்திப்பிலும் அதையே திரும்பவும் வலுக்கட்டாயமாகச் சொல்லுவார். அவையனைத்தும் என் மனதில் ஒவ்வொரு முறையும் ஆழமாக உள்ளே ஊடுருவிக்கொண்டு இருக்கும். ஆனாலும் அப்போது அதை ஆழமாகப் புரியும் பக்குவம் இல்லை. ஆனால் நாட்கள் நகர நகர, தினசரி நிகழ்வுகள், சம்பவங்கள் யோகரின் தீர்க்கதரிசனத்தின் மீது, எனது நம்பிக்கையை வலிவு பெறச் செய்தது.

சிவாய சுப்பிரமுனிய சுவாமியை, நவரத்தினம் தம்பதிகளுடன் அடையார் ஆலமரத்தடி தீயோசோபிக்கல் சங்கம் விடுதியில் சந்தித்தபின்னர் ஒரு தெளிவு பிறந்தது! சில காலத்தின் பின் 1986 முதற் பகுதியில் நரிக்குட்டி சுவாமியை அவரது திருவண்ணாமலைக் குகையில் வைத்து மூன்று மணிநேரம் நீண்ட உரையாடலில், **அவர் யோகரின் சில தீர்க்கதரிசனங்கள் நடைமுறைக்கு வர குறைந்தது 30/40 வருடங்களாவது ஆகும்** என்று சான்றுகளின் அடிப்படையில் மிகத் தெளிவாக விளக்கிக் கூறினார். அக்கணமே, அங்கயே எனக்கு அதில் அசைக்க முடியா உறுதி உருவாயிற்று! அந்தத் தீர்மானமே உடனடியாக என்னை இயக்கி, **அன்றையகால முயற்சிகள் யாதொரு பலனும்தரா என்று முடிவெடுத்து**, சென்னையில் அப்பொழுது எனது நிருவாகப் பொறுப்பில் இயங்கிய இலங்கை தமிழர் தகவல் நிலயத்தினை மூடிவிட்டு, பொது ஈடுபாட்டில் இருந்து 1986 ஜூலை ஒதுங்கி விட்டேன்.

அன்றில் இருந்து **36** வருடங்கள் கடந்தோடின, என்னென்னமோ எல்லாம் எதிர்பார்த்திராத பல நடந்துவிட்டன, நடக்கின்றன. இன்னமும் அதே பிரச்சினை தீர்ந்தபாடில்லை!

**இன்னமும் அந்த யோகரின் தீர்க்கதரிசனம் தான் சரியெனக் கட்டியம் கூறி நிற்கிறது!**

**அப்படி என்ன தீர்க்கதரிசனம், அந்த சுவாமி சொன்னது என்று இரத்னா மா கூறியது:-**

1. யாழ்பாணத்து தீவுப் பகுதியூடாக ஒரு ஆத்மீக ஒளி வெளிவரும், அதன்மூலம் தான் இலங்கையில் சமாதானமும் அமைதியும் ஏற்படும்.
2. இலங்கைத் தீவெங்கும் மீண்டும் ஆத்மீகம் தழைத்து ஓங்கும்
3. யாழ்ப்பாணம் உலகின் ஒரு பிரதான நகரமாக மின்னும்
4. பூநகரியில் ஒரு உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகம் தோன்றும் அது விஞ்ஞானத்திற்கும் - ஆத்மீகத்திற்குமான ஒருஇணைப்புப் பாலமாக விளங்கும்.
5. பூநகரியில் ஒரு ஆல மரவேரைப் பிடித்து இழுத்தால் ஒரு பெரும் நீரூற்று வெளிவரும்.

தற்போழுது இலங்கையில் உள்ள எல்லா அரசியல் தலைமைகள், சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக, பௌத்த, சைவ, கிறித்தவ, இஸ்லாம் உட்பட எல்லாத் தலைமைகளும், சுதந்திரம் கிடைத்து 74 வருடத்தில் இனவாத, மதவாத, பிரதேசவாத, சந்தர்ப்ப அரசியல் பேசி, நாட்டினை நன்கு சுரண்டி, ஊழல் எல்லையும், அளவும் இன்றிச்செய்து, ''நந்தவனத்தில் ஓர் ஆண்டி இன்று கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி'' என்ற நிலையில் கந்தறுந்து, கஞ்சிக்கும் வழியின்றி, நாடு நாடாய் பிச்சை எடுக்கும் நிலையில் நாடு! நடுத் தெருவில் மக்கள்! களநிலைவரமும் அப்படித்தான் மோசமாகிக் கொண்டிருக்கிறது!

இப்பொழுது தான், பல எழுத்தாளர்களும், அறிஞர்களும், தீர்க்கதரிசி களையும், இரட்சகர்களையும், தேட ஆரம்பித்து அதைப்பற்றியே எழுதுகிறார்கள்! எல்லோரும் அந்த முடிவுக்குத்தான் வந்து விட்டார்கள்!

யாருக்கும் எந்த ஒரு அரசியல் கட்சிகள் மேலும், தற்போதுள்ள எந்தவொரு அரசியல் தலைமைகள் அது சிங்கள, தமிழ்,

முஸ்லீம் உட்பட எல்லோர் மீதும் நம்பிக்கை இழந்து, இவர்கள் அனைத்தையும் புறம்தள்ளி, ஒரு நேர்மையான, உண்மையான, தன்னலமற்ற, நாட்டுப்பற்றுள்ள, தெளிந்த எதிர்கால நோக்குள்ள, வலுவான விரைவில் செயல்படக்கூடிய, சக்திமிக்க ஓர் சக்திமானை, அனைவரும் ஒட்டுமொத்தமாக எதிர்பாக்கும் நிலை வந்துவிட்டது!

எல்லாமக்களையும் சரிசமமாகவும், அன்பாகவும், சமத்துவமாகவும் அரவணைத்து மேல் நோக்கிக் கூட்டிச் செல்லக்கூடிய ஒரு அதியற்புத தலைமையையே எதிர்பார்கிறார்கள் !

ஆகவே அனைவரும் கூடிப் பிரார்த்திப்போம், அந்த சர்வ வல்லமையுள்ள சக்திமானை அழைப்போம்!

வரும் நேரம் அவருக்குத் தான் தெரியும்! அவர் வரவேண்டிய நேரத்தில் தான் வருவார்! சரியான நேரத்தில்! சரியான வழியில் தான் வருவார்!

எதற்கும் ஒருமுறை கதிர்காமக் கந்தனையும் கும்பிட்டுப் பார்ப்போம்!

சுபம் உண்டாகட்டும், சுபீட்சம் உண்டாகட்டும், மங்களம் உண்டாகட்டும். சாந்தி நிலவட்டும், சமாதானம் பெருகட்டும், சகோதரத்துவம் மலரட்டும், வரட்டுக்குக் கவுரவம் வறண்டு போகட்டும்! மௌனப் பிரார்த்தனை வெல்லட்டும், அன்பு பெருகட்டும்!

***ஓம், புத்தம் சரணம் கச்சாமி!***
***ஓம், தர்மம் சரணம் கச்சாமி!***
***ஓம், சங்கம் சரணம் கச்சாமி!***

***ஒரு பொல்லாப்புமில்லை!***
***எப்பவோ முடிந்த காரியம்!***
***யாமறியோம்!***
***யாதும் உண்மை!***

***ஓம் தத் ஸத்.***

## *Sources list with courtesy*

1. *The Testament of Truth: A Study of the Life and Teachings of Yogaswami by Dr. Ratna Ma Navaratnam*
2. *Sri Yogaswami of Jaffna, by an American Devotee, The Mountain Path, July 1974*
3. *Yogaswami: The Life & Teachings of Sri Lanka's Great Master (1872-1964) Excerpted from Guru Chronicles*
4. *Satguru Sivaya Subramuniyaswami, https://www.himalayan academy.com/monastery/lineage-philosophy/gurudeva*
5. *The Guru Chronicle: The Making of the First American Satguru; by the Swamis of Kauai's Hindu Monastery*
6. *"King of Lankapuri" Sri Yoga Swami of Jaffna, Part I & II. The Mountain Path, Aradhana and Jayanthi Issues, 1994.*
7. *Homage to Yogaswami, by Susunaga Weeraperuma, http://aryasangha.org/yogaswami.homage.htm*
8. *Yogaswami: The Strange Saint of Sri Lanka, by Susunaga Weeraperuma, http://aryasangha.org/weeraperuma.htm*
9. *Website of Susunaga Weeraperuma, http://weeraperuma.com*
10. *From Secret Germany to Secret Lanka :The Life and Times of German Swami by Patrick Harrigan, The Sunday Times (S.L) 16 September 2007.*
11. *Getting to know a Swami, -part 1, by Manik Sandrasagra,The Sunday Times (S.L) 9 September 2007*
12. *Getting to know a Swami, -part 2, by Manik Sandrasagra, The Sunday Times (S.L) 16 September 2007*
13. *German Swami Gauribala: The Bohemian Swami of Jaffna, by Sam Wickremasinghe*
14. *German Swami Gauribala: Walking the Razor's Edge of Liberation, by Sam Wickremasinghe, Sunday Observer Magazine, 21 June 1992*

*15. Manik the Maverick and I, by Richard Boyle, The Sunday Times (S.L) 17 May 2009*

*16. Dharmadeepa and Serendipity – A Tribute to Manik Sandrasagra By Koshika Sandrasagra*

*17. Right of Reply - Manik Sandrasagra--By Koshika Sandrasagra, Daily Mirror online, 10 July 2021*

*18. Murugan's Circus and our Multiple States of Being, by Manik Sandrasagara http://kataragama.org/murugans-circus.htm*

*19. Earthman, a Novel by Maggi Lidchi*

*20. Narikutti Swami of Thiruvanamalai (1930-1994) by Peter Ellingsen, Aryasangha.org/narikuuti.htm*

*21. Swami Narikutti or Barry Owen Windsor (1930-1994), aryasangha.org/narkutti.swami.htm*

*22. Narikutti Swami- A Remarkable Devotee of Sri Arunachala, By Kamala Devi, The Mountain Path, Jan- March 2008*

*23. Yoga Swami: The Sage of Lanka, by Santhaswami (Viscount Lord Soulbury) The Island, 4 June 1995*

*24. Sri Santha Swami, Lord Soulbury, - Dr. Vimala Krishnapillai, http://aryasangha.org/soulbury.htm*

*25. Hindu Convert In Ceylon Now A British Viscount, New York Times, page 18, 7 Feb 1971*

*26. Yoga Swami The Image-Breaker, by Sam Wickremasinghe, http://aryasangha.org/yogaswami_sam.htm*

*27. The Lion's Roar: A Yogaswami Story Never Told, by Dr. James George, former Canadian High Commissioner to Sri Lanka http://aryasangha.org/james.george.htm*

*28. Arulalarkal. Professor. A.S.Gnanasambanthan*

*29. Yogar Swamikal Life and Guidance by Sellathurai Swami, 3rd publication 2014*

*30. Yoga Swamigal, by S.Ambikaipakan (English Translation, April 2016*


*எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்*
*ஏக மனேகமாய் நின்றார் போலும்*
*கல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்*
*காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்*
*சொல்லாலே சும்மாவிருக்க வைத்தார் போலும்*
*சுருதிமுத லாகமங்கள் காணார் போலும்*
*எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்*
*என்னிதயம் நீங்காத விறைவர் தாமே*

***- நற்சிந்தனை***

*அகண்ட வெளியிலே அப்பனு மம்மையும்*
*அகண்ட வெளியிலே யாருமி ரெல்லாம்*
*அகண்ட வெளியிலே யஞ்சுபூ தங்களும்*
*அகண்ட வெளியிலே யானிருந் தேனே*

*அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டேன்*
*அண்டமும் பிண்டமு மகமாய்க் கண்டேன்*
*அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டிலேன்*
*அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே*

**– நற்சிந்தனை**



*யார் ஒருவர் தொடர்ந்து தன் ஆத்மாவில் லயித்திருக்கிறாரோ, அவரே இவ்வுலகிற்கு அதிகம் நன்மை புரிகிறார்.*

***- ரமணமகரிசி***

சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே
இம்மாய யோகம் இனி ஏனடா
சும்மா இருக்க முடியாத படியினாற்றான்
பாடலும் படிப்பும் நடைபெறுகின்றன
சும்மா இருக்கின்ற சூட்சம் நீ
சும்மா இருக்கின்ற சூட்சமே எல்லாம்

**– நற்சிந்தனை**

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

**– திருவள்ளுவர்**

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி.

ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்.

**– யோகர்சுவாமி**